பொழிவு - 19
குவிப்பு - 04
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஏப்ரில் 2015
(ISSN 1800-2641)
Registered as a News Paper


# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

## இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவுகூரும்

# பாஸ்காப் பெருவிழாச் சிறப்பிதழ்



சாவு
முற்றிலும்
ஒழிந்தது!
வெற்றி
கிடைத்தது!
(1 கொரி. 15:54)



## 75வது அகவையில் மன்னார் ஆயர்!



பிறந்த நாள் வாழ்த்து!

Ad multos annos!

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி தனது 75வது வயதில் காலடி பதித்து பவள விழாக் காண்கிறார்.

மன்னார் மறைமாவட்டக் குருக்கள், துறவியர், இறைமக்கள் மற்றும் உலகத் தமிழர் சார்பாக ஆயர் அவர்களுக்கு பவள விழா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா பெருமகிழ்ச்சி அடைகின்றது.

## உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

மன்னா வாசக நெஞ்சங்கள், விநியோகப் பணியாளர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த உயிர்ப்பு விழா நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

மன்னா பதிப்பாசிரிய அலுவலகப் பணியாளர்கள்

பாஸ்கா விழா தொடர்பான சிறப்புக் கட்டுரைகளை 4ஆம், 5ஆம், 8ஆம், 10ஆம் 12ஆம் பக்கங்களில் காணலாம்!

## மன்னார் மறைசாட்சியர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பெருமுயற்சி

## மறைசாட்சியர் ஆய்வரங்கம்

முன்னார் மறைசாட்சியர் பற்றிய பரந்தளவிலான விழிப்புணர்வை இறைமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கோடு மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மறைசாட்சியர் ஆய்வரங்கம் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பகல் 1.30 மணி வரை தோட்டவெளி தியான மண்டபத்தில் இந்த ஆய்வரங்கு இடம்பெறவுள்ளது.

இதில் முக்கிய வளவாளர்களாக யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளராகிய அருட்திரு. கலாநிதி மங்களராஜா அடிகளாரும் யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு. கலாநிதி மைக்கல் செளந்தரநாயகம் அடிகளாரும் கலந்துகொள்வர். மறைமாவட்டத்தில் உள்ள குருக்கள் துறவியர் மற்றும் பொதுநிலைப் பிரதிநிதிகள் என ஏறக்குறைய ஆயிரம் பேர் இந்த ஆய்வரங்கில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கண்ணீர் அஞ்சலி

## அருட்பணி. சகாயநாதன் இறைபதம்





மன்னார் மறைமாவட்டத்தின் பறப்பாங்கண்டல் பங்குத்தந்தையும் திருவுளப்பணியாளர் சபையின் முன்னாள் மாகாண முதல்வருமான அருட்பணியாளர் அந்தோனி சகாயநாதன் (வயது 55) அவர்கள் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி மாரடமைப்புக் காரணமாக திடீரென இறையடி சேர்ந்தார். இவரது நல்லடக்க ஆராதனைகள் மார்ச் மாதம் 13ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்று பூதவுடல் மன்னார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அடிகளாரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் மன்னார் மற்றும் யாழ் ஆயர்கள், திருவுளப் பணியாளர் சபையின் உயர் தலைவர் அருட்பணி. டண்ஸ்ரன் ஆகியோரும் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து குருக்கள் துறவியர், இறைமக்கள், அடிகளாருடைய முன்னாள் இந்நாள் பங்கு மக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். அடிகளாரின் விரிவான வாழ்க்கைக் குறிப்புக்களை 15ஆம் பக்கத்தில் காணலாம்.

அடிகளாரின் குடும்பத்தவர்களுக்கும், திருவுளப் பணியாளர் சபையினருக்கும், அவர் பணியாற்றிய அனைத்து பங்கு மக்களுக்கும் மன்னார் ஆயர், குருக்கள் துறவியர், இறைமக்களின் ஆழ்ந்த அனுதாபங்களை மன்னா தெரிவித்துக்கொள்கிறது. இவரது ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக!

## டி லாசால் சபையின் புதிய மாகாண முதல்வராக அருட்சகோதரர் கிறிஸ்ரி குரூஸ் நியமனம்



இலங்கை டிலாசால் துறவற சபையின் புதிய மாகாண முதல்வராக (Provincial Visitor) மன்னார் மறை மாவட்டத்தின் வங்காலைப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் அட்றியன் கிறிஸ்ரி தேவநாயகம் குரூஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி இவர் தனது புதிய பணியை பொறுப்பேற்கவுள்ளார்.


இவர் தற்போது பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த டிலாசால் அருட்சகோதரர்களுக்காக நிர்வகிக்கப்படும் நவசந்நியாச இல்லத்தின் இயக்குனராக பணியாற்றி வருகின்றார். இவர் டிலாசால் சபையின் முன்னாள் மாகாண முதல்வரும் சிறந்த கல்விமானுமாகிய அமரர் அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களுடைய சகோதரரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாண முதல்வர் நிலைக்கு உயர்த்தப்பட்டு புதிய பணிப்பொறுப்பை ஏற்கும் மன்னார் மண்ணின் மகன் அருட்சகோதரர் கிறிஸ்ரி அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தின் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்வெய்துகின்றது.

இவருடைய விரிவான வாழ்க்கைக் குறிப்புக்களை 15ஆம் பக்கத்தில் காணலாம்.

## மன்னார் மறைமாவட்ட இறைமக்களின்

## தவக்கால பாதயாத்திரை



மன்னார் மறைமாவட்ட இறைமக்களின் கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்திற்கான வருடாந்த பாதயாத்திரை இவ்வருடமும் சிறப்பாக இடம்பெற்றது. வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. எம். ஜெயபாலன் அடிகளாரின் தலைமையிலான குழுவினர் இந்த யாத்திரைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர் (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## புனித வார வழிபாடுகளும் தெரிய வேண்டிய விடயங்களும்

நாற்பது நாட்கள் நோன்பு மற்றும் பல்வேறு பக்தி முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி உடலாலும், உள்ளத்தாலும் தம்மை ஆயத்தம் செய்த இறைமக்கள் சமூகம் இப்போது பரிசுத்த வாரம் அல்லது பெரிய கிழமை என்ற மிக முக்கியமான ஒரு வாரத்தினுள் காலடி பதிக்கின்றது. இந்த முக்கிய வாரத்தில் இடம்பெறும் பல்வேறு வழிபாடுகளின்போது நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலைபற்றிச் சிந்திப்பது சாலவும் பொருத்தமானதாகும்.

### திருவிழாக் கிறிஸ்தவர்கள் திருந்துவார்களா?

ஆலயப் பக்கமே அண்டிவராத "திருவிழாக் கிறிஸ்தவர்கள்" வெள்ளையும் சுள்ளையுமாக வரிந்து கட்டிக்கொண்டு வருவது பெரிய கிழமை வழிபாடுகளுக்குத்தான். இவர்கள் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, புனித சனி, உயிர்த்த ஞாயிறு, போன்ற திருவழிபாடுகளுக்கு வருவார்கள். இவர்கள் ஆலயத்திற்கு வருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் பெரிய கிழமை வழிபாடுகளுக்காக வரிந்து கட்டிக்கொண்டு வரும் இவர்கள், இந்த வழிபாட்டில் பங்கெடுப்பதோடு தமது கிறிஸ்தவக் கடமை முடிந்துவிட்டது என நினைக்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்வு என்பது நாற்பது நாள் வாழ்வோ அல்லது ஒரு கிழமை வாழ்வோ அல்ல, அது ஆண்டு முழுவதும் வாழப்பட வேண்டிய வாழ்வு என்பதை சௌகரியமாக மறந்துவிடுகிறார்கள். எனவே இந்த வழிபாட்டுக்கு வரவேண்டுமென அவர்கள் எடுக்கும் இந்த முயற்சி நிரந்தரமான – நீடித்த முயற்சியாக ஆண்டு முழுவதும் தொடரப்பட வேண்டும்.

### சங்கடத்தை ஏற்படுத்தும் சமாச்சாரங்கள்

பரிசுத்த வாரத்தின்போது பல்வேறு வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இந்நிகழ்வுகளில் பங்கேற்போரிடம் சில வேளைகளில் இந்த வழிபாடுகளுக்கு முரணான மனநிலை இருப்பதை நாம் கவலையோடு கண்ணோக்கவேண்டி உள்ளது. சங்கடத்தை ஏற்படுத்தும் சமாச்சாரங்கள் பல இந்நாட்களில் நடந்தேறுகின்றன. அவை பற்றிய சில அவதானிப்புக்களை இங்கே அடையாளம் காட்டுவது பொருத்தமானதாகும்.

சில இடங்களில் வழிபாட்டு நிகழ்வுகளில் யார் வாசிப்பது? கால் கழுவும் சடங்கிற்கு யார் போவது? ஆண்டவரை அறைந்து இறக்குவது யார்? ஆசந்தி தூக்குவது யார்? என எல்லாவற்றிற்குமே போட்டிதான். இந்தப் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துவைத்துவிட்டால் பங்குத்தந்தை பெரிய நிம்மதிப் பெருமூச்சு விடுவார்.

### விட்டுவிட விருப்பமில்லா தனியுரிமைகள்

பரிசுத்த வார வழிபாட்டின்போது பாடல்கள், பிரசங்கங்கள் புலம்பல்கள் என பல பாடல்கள் பாடப்படுகின்றன. ஒருசிலரே காலாகாலமாக இவற்றைப் பாடுகின்றனர். பக்திப் பரவசத்தோடு பாடக்கூடிய நல்ல பாடகர்கள் பங்கில் இருந்தாலும் அப்படிப்பட்டவர்களை இவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். ஆற்றலும் திறமையும் வாய்ந்த இளையவர்கள் இருந்தாலும் அவர்களை இவர்கள் கண்டுகொள்ளவே மாட்டார்கள்.

வயதுமுதிர்ந்த நிலையில், எழுத்துக்களை வாசிக்கச் சங்கடப்படும் தள்ளாத வயதிலும், தமது தனியுரிமையை விட்டுவிட இவர்களுக்கு விருப்பமில்லை. கூடியிருக்கும் இறைமக்கள் சமூகம் தான் பாடுவதை எந்த அளவிற்கு புரிந்துகொள்கிறது, தியானிக்கிறது என்பதெல்லாம் இவர்களுக்குப் பிரச்சினையே இல்லை. தமது தனியுரிமையை மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்காமல் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். பாடல்கள் மட்டுமல்ல பரிசுத்த வாரத்தின் பல்வேறு நிகழ்வுகளில் இந்தத் தனியுரிமை ஆதிக்கம் எழுதாச் சட்டமாக நடைமுறையில் இருப்பது வருந்தத்தக்கது.

### 'வாசிப்பதன் பொருள் உமக்குப் புரிகிறதா?'

பரிசுத்தவார வழிபாடுகளுக்காகத் திருச்சபைத்தாய் தனது இறை ஞானத்தில் இருந்து தேர்ந்து தெளிந்து தந்திருக்கும் வாசகங்களைத் தெளிவாக பொருள் புரியும் வண்ணம் வாசிக்க வேண்டும். சிலர் வாசிப்பார்கள் - ஆனால் தாங்கள் என்ன வாசிக்கிறோம் என்பது அவர்களுக்கே புரிவதில்லை. பிலிப்பு எத்தியோப்பிய அண்ணகனிடம் "வாசிப்பதன் பொருள் உமக்கு புரிகிறதா?" என்று கேட்ட அதே கேள்வியைத்தான் நாமும் இவர்களிடம் கேட்கவேண்டி உள்ளது.

பெரிய வெள்ளிக்கிழமை வழிபாடு முடிந்தபின்னர் அனேகமான ஆலயங்களில் இயேசுவின் பாடுபட்ட திருச்சுருபத்தை அறைந்து இறக்கும் காட்சியும் இயேசுவின் இறந்த திருவுடலைப் பவனியாக எடுத்துச்செல்லும் ஆசந்தி எனப்படும் நிகழ்வும் இடம்பெறும். சில இடங்களில் இப்புனிதமான நிகழ்வுகள் சத்தம் சந்தடிக்கு மத்தியில் கேலிக்கூத்தாக மாறிவிடுகின்ற நிலைப்பாடும் நமது ஆழ்ந்த கவனத்திற்குரியதாக வேண்டும்.

எனவே பரிசுத்த வாரத்திற்குள் காடில பதிக்கும் நாம் இப்புனிதமான நாட்களின் பொருள் உணர்வோம். மற்றவர்களுக்கும் இதை உணர்த்துவோம்.

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை**
**அன்புடன், அருள்பணியாளர் தமிழ் நேசன்**
**மன்னா- பதிப்பாசிரியர்**

# மேதகு ஆயர் இரா யோசேப்பு ஆண்டகையின் பவள விழா வாழ்த்து



கண்ணின்மணிபோல எம்மைக் காலமெலாம் காத்திருந்து
கருத்துடனே காரியங்கள் புரிந்தவரே!
வண்ணமுகத்தோனே வளமான நாயகனே!
வாடும் பயிரெமக்கு வான் மழையே!
எண்ணும் பொழுதிலுந்தன் ஏற்றம் தெரியுதையா!
ஏதிலியர் ஆனவர்க்குப் பேரொளியே!
விண்ணும் மண்ணும் மகிழ வீரமுடன் நீர்புரிந்த
வல்லபல செயல்கள் எண்ணி வியந்து நின்றோம்!

நல்லாயனாக நயந்து பல செயல்புரிந்து
நானிலத்தில் மாண்புடனே வாழ்பவரே
பல்லுயிரும் போற்ற பாங்குடனே பணிசெய்து
பாரிலுள்ளோர் தாம் மதிக்க வாழ்பவரே!
வல்லவராய்ப் பாரில் வலம்வருவோர் தம்முடனே
வளமாக நீதியதை எடுத்துச் சொல்லி
செல்லுமிட மெல்லாம் நம்தமிழர் கண்ணீர்
கதைக ளெலாம் எடுத்தியம்பும் காவலரே!

அர்ப்பண வாழ்வில் அனைவரு மொன்றாகி
அன்பாக இணைந்தென்றும் வாழ்ந்து
எப்பகையுமின்றி மக்களின மெல்லாம்
ஒரு தாயின் மக்களென வாழ்ந்து
தப்பெதுவும் இல்லா தலைசிறந்த வாழ்வை
துணிவோடு பெற்றுயர்க என்று
எப்போது எங்கள் இதயம் நிறை ஆயர்
இராயப்பு யோசேப் நீர் வாழ்க!

அகவைஎழு பத்தைந்து ஆகிவிட்ட போதிலும் நீர்
அயராத ஆர்வமுடன் சேவை செய்து
இகமீதில் இன்பமுடன் இணைந்தொன்றால் வாழ்ந்திருந்து
இறைவனது திருவுளத்தை எடுத்தியம்பி
பகைவரையும் மன்னித்து வாழுகின்ற பண்பதனை
பாங்காய் எடுத்துரைத்து மகிமையுடன்
பவள விழாக் காணும் எங்கள் நாயகனே உங்களது
பாதார விந்தமதை வணங்குகின்றோம்!
- கலாபூஷணம் திரு. அந்தோனிமுத்து


## தவக்கால வாழ்வு பேசும் மன்னா



ஊதா நிற பெப்ரவரி மன்னா!
மனம் புதிதாக
இறைவார்த்தை தந்த மன்னா!
தவக்கால வாழ்வு பேசும்
மன்னா!
மன்னார் மறைமாவட்ட
34ம் ஆண்டைச் சொல்லும்
மன்னா!
திருத்தந்தை பிரதிநிதியின்
செய்தியை விளக்கிடும்
மன்னா!
தன்னம்பிக்கை,
கடின உழைப்பு
வெற்றிபெற வழி என
கற்றுத்தரும் மன்னா!
பாமரரும் படிக்க சுவைக்க
வழிசமைக்கும் மன்னா!
நீ பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்!

அருட்சகோதரர்
பி. இக்னேசியஸ் மார்க்,
பிரான்சிஸ்கன் சகோதரன்,
செட்டிகுளம்.

## தாய் மொழியில் திருப்பலி நிறைவேற்றியதன் 50ம் ஆண்டு நிறைவு



இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முன்னர் (1965) திருத்தந்தையின் மொழியான இலத்தீன் மொழியில் மட்டும் நிறைவேற்றப்பட்டு வந்த திருப்பலி இந்தச் சங்கத்தின் வழிபாட்டு மறுமலர்ச்சிக்கான தீர்மானத்தின்படி முதன் முதலாக இலத்தீன் அல்லாத ஒரு மொழியில் நிறைவேற்றப்பட்டதன் 50 ஆண்டுகள் நிறைவைத் திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த மார்ச் மாதம் 7ம் திகதி நினைவுகூர்ந்தார்.

1965ம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் திகதி உரோமையிலுள்ள சகல புனிதர்கள் ஆலயத்தில் அப்போதைய திருத்தந்தை முத். 6ம் பவுல் முதன்முதலாக இத்தாலி மொழியில் திருப்பலி நிறைவேற்றிய அதே பீடத்தில் தற்போதைய திருத்தந்தையும் திருப்பலி நிறைவேற்றி இவ்வரலாற்று நிகழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறினார்.

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2015
### ஏப்ரல்

02 - புனித வியாழன் ஆண்டவரின் இராவுணவு - மாலைத்திருப்பலி
03 - திருப்பாடுகளின் புனித வெள்ளி - உண்ணா நோன்பும், மாமிசத்தவிர்ப்பும். குருமடங்களுக்கான நிதி சேகரிப்பு. (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பப்படும்)
05 - உயிர்ப்பு ஞாயிறு
07 - புனித அந்தோனியார் திருவிழா - குஞ்சுக்குளம் தொங்குபாலம்
12 - இறை இரக்கத் திருவிழா - பம்பைமடு
- புனித தோமையார் திருவிழா - நாகதாழ்வு, கொவ்வங்குளம், குமானயங்குளம்
16 - மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் 75வது பிறந்த தினம்.

■ *மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.*

## திருப்பாலத்துவ பாடல்கள் இறுவட்டுக்கு பாடல்களை அனுப்புங்கள்

திருப்பாலத்துவ சபை சிறுவர்களே, ஊக்குவிப்பாளர்களே!

திருப்பாலத்துவ சபைப் பாடல் இறுவட்டில் (CD) உங்கள் கைவண்ணத்தில் உருவான பாடல்களும் இடம்பெற வேண்டும்? உங்கள் ஊக்குவிப்பாளர்களோடு இணைந்து திருப்பாலத்துவ சபை தொடர்பான கருத்துக்கள் அடங்கிய பாடல்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

தரமான பாடல்கள் நடுவர்களால் தெரிவுசெய்யப்பட்டு உங்களது பெயர்களின் உள்ளடக்கத்துடன் இறுவட்டு (CD) வெளியிடப்படவிருக்கிறது.

அத்துடன் சிறந்த குரல் வளம் உள்ள திருப்பாலத்துவ சிறுவர்கள் தங்கள் பெயர், முகவரி, தொடர்பிலக்கம் போன்றவைகளை தெளிவாக எழுதி உங்கள் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனருக்கு அனுப்பிவையுங்கள்.

எதிர்வரும் வைகாசி 31ம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு உங்கள் பாடல்களை அனுப்பிவையுங்கள்.

பாடல்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

அருட்பணி. ஜெினோல்ட் சபரமாது
தேசிய இயக்குனர்,
பாப்பிறை மறைபரப்புச் சபை,
இல: 19, பல்கம் இடம்,
கொழும்பு - 8

**Rev. Fr. Reginald Saparamadu,**
**National Director,**
**Pontifical Mission Societies,**
**No: 19 Balcombe Place,**
**Colombo – 8**

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வை மோடி தமிழர்களுக்குப் பெற்றுத்தர வேண்டும்

## மன்னார் ஆயர் வலியுறுத்தல்



சுயநிர்ணய உரிமையடன்கூடிய அரசியல் தீர்வினை தமிழர்களுக்குப் பெற்றுக்கொடுக்க இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி உறுதியான தீர்மானத்தினை எடுக்கவேண்டுமென மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசிய இனம் இந்த நாட்டுக்குள் தனித்துவமான ஒரு இனம் என்னும் அடிப்படையில் அக சுயநிர்ணய உரிமையுடன்கூடிய அரசியல் தீர்வைப் பெறுவதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் வழிசமைக்க வேண்டும். அவ்வாறான தீர்வை தமிழர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் தீர்மானத்தை உண்மையின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் பிரதமர் எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இந்தியப் பிரதமரின் வருகையை நாங்கள் மகிழ்ச்சிக்குரிய விடயமாகப் பார்க்கிறோம். அவ்வாறான வருகை தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், அரசியல் தீர்வைக் காணவும், நல்வாழ்வுக்கு வழிவகுப்பதாகவும் இருக்க வேண்டும்" என்றும் ஆயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகைதந்திருந்த ஆயர் யோசேப்பிடம் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கை விஜயம் தொடர்பாகக் கேட்டபோதே இவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இந்தியாவில் பல இனங்களைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் ஒரு நாட்டுக்குள் வாழ்கின்றார்கள். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த டாக்டர் அம்பேத்கார் இந்திய அரசியலமைப்பை எழுதும்போது சகல இனங்களினதும் உரிமைகளை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார். அதனால் ஒரு தாயின் பிள்ளைகளாக அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். ஆனால் அவ்வாறான நிலை இங்கே இல்லை. இலங்கையின் தேசிய கீதத்தைக் கேட்டால் எமக்கு உணர்ச்சி வரவில்லை. நாட்டைவிட்டு வெளியே சென்றால் மாத்திரமே நாம் இலங்கையர்கள் எனத் தெரிகின்றதெனவும் சுட்டிக்காட்டினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், வரலாறு தேன்றாத காலத்திற்கு முன்பிருந்தே இந்த மண்ணில் வாழ்ந்தவர் நாங்கள். எமக்கென பூர்வீகமான வாழ்விடம் இருக்கின்றது. உலகில் உள்ள வாழும் செவ்வியல் மொழிகளில் ஒன்று எங்களுடைய தமிழ்மொழி. மற்றையது சீன மொழி. அதனைவிட ஆழ்ந்த கலாச்சாரத்தைக் கொண்டவர்கள் நாங்கள். ஆனால் இந்த நாட்டில் எம்மை இரண்டாம்தரப் பிரஜைகளாகப் பார்க்கும் நிலையே இருக்கின்றது. இதனைவிட வந்தான் வரத்தான் என்றும், தங்களில் ஒட்டி வாழ்பவர்கள் என்றும்கூடப் பலர் சொல்வது மிகக் கவலைக்குரிய விடயமாகும்.

எனவே எமது உறவு நாடான இந்தியாவின் பிரதமர் இங்கே வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இந்தியாவின் தீர்மானங்கள் அல்லது செயற்திட்டங்கள் எமக்கு இன்றியமையாதவையாகும். அந்த வகையில் இந்தியப் பிரதமர் ஒருவர் இங்கே வருகிறார். இவர் இங்கே வந்து இங்குள்ள உண்மைகளைக் கண்டறிந்து உண்மையின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் நாம் முன்னர் சொன்னதைப் போன்றதொரு அரசியல் தீர்வை வழங்கி இந்த நாட்டில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். நீண்ட வரலாற்றைக்கொண்ட பெருமைக்குரிய நாங்கள் இந்த நாட்டில் உரிமை இழந்த மக்களாக வாழ்வது வேதனையான விடயம் என்பதை இந்திய பிரதமர் புரிந்துகொள்ள வேண்டும். அந்தவகையில் தமிழ் மக்கள் அக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமாக வாழ்வதற்கான நிலையை இந்தியப் பிரதமரின் வருகை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

## மன்னார் மறைமாவட்டத்தில் புதிய பணி நியமனங்கள்


மன்னார் மறைமாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புதிய பணி நியமனங்கள் வருமாறு:

அருட்பணி. ஜி. வென்சஸ்லோஸ் (அமதி) - பங்குத்தந்தை, கனகராயன் குளம்

அருட்பணி. ஜே. லெபோன் சுதன் (அமதி) - உதவிப் பங்குத்தந்தை, கனகராயன் குளம்.

அருட்பணி. பி. மதன்ராஜ் (அமதி) - பங்குத்தந்தை. தட்சனாமருதமடு

## உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் தனது பணிவாழ்வு முறையை மாற்ற விரும்பாத திருத்தந்தை



ஐ. எஸ். எனப்படும் இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகளிடமிருந்து வத்திக்கான் அரசுக்கும் திருத்தந்தையின் உயிருக்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலானது உண்மையானதாக இருப்பினும், தனது வாழ்வுமுறையிலோ, செயற்பாடுகளிலோ எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த திருத்தந்தை விரும்பவில்லை என வத்திக்கான் நகரின் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப்பணிக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

திருத்தந்தை தொடர்ந்து தான் வாழுகின்ற மார்த்தா இல்லத்திலேயே தங்கியிருப்பார் என்றும் மக்களுடனான தொடர்புகளை வழமைபோல் அவர் மேற்கொள்வார் என்றும் தெரிவித்த அவர், திருத்தந்தையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பாகாப்புப் பிரிவினராகிய தமது கைகளிலேயே இருப்பதாகவும் அதற்குத் திருத்தந்தை பொறுப்பல்ல என்றும் தெரிவித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் ஆர்ஜென்ரீனாவில் கருதினாலாக இருந்தபோது அவரைக் கொல்லச் சதி நடப்பதாகக் கேள்விப்பட்டு அரசாங்கம் அவருக்கு ஒரு குண்டு துளைக்காத ஆடையைக் கொடுத்தபோது, தான் இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை வைப்பதாகக் கூறிவிட்டு அந்த ஆடையைத் தனது நண்பர் ஒருவருக்குக் கொடுத்திருந்தார் என்பதும் இங்கு நினைவுகூரப்பட வேண்டியதாகும்.

# ஈராக்கிலும் சிரியாவிலும் கொடூர வன்முறைக்குப் பலியாவோருக்காகச் செபிக்க திருத்தந்தை அழைப்பு





வன்முறையாளர்களை நோக்கி வன்முறையைக் கைவிட்டு மனித மாண்பையும் அதன் புனிதத்துவத்தையும் மதியுங்கள் என்று இடித்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ், ஈராக்கிலும் சிரியாவிலும் கொடூர வன்முறைக்குப் பலியாவோருக்காகச் செபிக்குமாறு கூடியிருந்த மக்களைக் கேட்டுக்கொண்டார். நாம் அவர்களை மறக்காமல் அவர்களோடு நெருக்கமாக இருந்து ஜீரணிக்கமுடியாத கொடுமைகளிலிருந்து அவர்கள் விரைவில் காப்பாற்றப்பட இடைவிடாது செபிக்கவேண்டும் என்றும் திருத்தந்தை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். வெட்டப்பட்ட கிறிஸ்தவர்களின் தலைகளையும் சுட்டுக்கொல்லப்படும் கிறிஸ்தவர்களையும் மேலே உள்ள படங்களில் காணலாம்.

# என்னை துஷ்பிரயோகம் செய்தவர்களை மன்னித்துவிடுங்கள்

### மேற்கு வங்கத்தினை சேர்ந்த 72 வயது அருட்சகோதரி

"என் இதயம் நொறுங்கிவிட்டது. என்னை துஷ்பிரயோகம் செய்தவர்களை மன்னித்துவிடுங்கள்" என்று கொள்ளையர் குழு ஒன்றினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிய இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த 72 வயது அருட்சகோதரி தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க மாநிலம் நாடியா மாவட்டம் ரனாகட், ஜீசஸ் மேரி கிறிஸ்தவப் பாடசாலையினைக் கொள்ளையிட்ட 7 பேர் அடங்கிய குழுவினர் பாடசாலையின் மூத்த அருட்சகோதரியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினர். இதனையடுத்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அந்த அருட்சகோதரியின் உடல்நலம் தற்போது முன்னேற்றம் அடைந்துவருவதோடு, தன்னை துஷ்பிரயோகம் செய்தவர்களை மன்னித்து விடுங்கள் என்று குற்றவாளிகளுக்காக பிரார்த்தனையில் அவர் ஈடுபட்டுள்ளார். மேலும் மாணவிகளின் பாதுகாப்பு குறித்தே என்னுடைய கவலை எல்லாம் உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரனாகட் மருத்துவமனையில் வேதனையில் துடித்துக்கொண்டிருக்கும் அவரைப் பார்க்க ஏராளமானோர் வந்துசெல்கின்றனர். ஆனால் அவர் முகத்தில் சோகம் இல்லை. அமைதியாகவும் சோர்வாகவும் இருக்கிறார் என்று




தெரிவிக்கப்படுகின்றது. மேலும் அவர் உடலளவிலும் மனதளவிலும் தற்போது நலமுடன் இருக்கிறார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, இக்கீழ்த்தரமான இந்தச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கைதுசெய்து கடும் தண்டனை வழங்க வேண்டும் என்று மாநில முதலமைச்சர் மற்றும் இந்தியப் பிரதமர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை மேலே உள்ள படத்தில் காணலாம்.

## இப்படியும் நடக்கிறது!

### ஜெயலலிதாவுக்காகத் தன்னைத் தானே சிலுவையில் அறைந்த நபர்

தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வர் ஜே. ஜெயலலிதா மீண்டும் முதல்வர் ஆகவேண்டும் எனத் தன்னைத்தானே சிலுவையில் அறைந்துகொண்ட ஹுசைனி என்பவர், தான் விமானத்தைக் கடத்தி ஜெயலலிதாவை விடுவிக்கத் திட்டம் வைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க பொதுச் செயலாளரும், தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா, சொத்துக் குவிப்பு வழக்கில் விடுதலையாக வேண்டும் என்று தன்னைத் தானே சிலுவையில் அறைந்துகொண்ட காரத்தே வீரர் ஹுசைனி வார இதழ் ஒன்றுக்கு இவ்வாறு பேட்டி அளித்துள்ளார்.



அந்தப் பேட்டியில், "ஜெயலலிதாவைக் கைது செய்தபோது நான் மதுரையில் இருந்தேன். இதற்குக் காரணமானவர்களை ஏதாவது செய்ய வேண்டும் என்று வெறியோடு இருந்தேன். விமானத்தைக் கடத்தி அவரை விடுவிக்க வேண்டும் என்றும் திட்டம் வைத்திருந்தேன். ஆனால், எனது மனைவி என்னை மாற்றிவிட்டார். இல்லாவிட்டால் ஜெயலலிதாவின் இந்த நிலைக்குக் காரணமான கருணாநிதியையோ, சுப்பிரமணியம் சுவாமியையோ ஏதாவது செய்திருப்பேன்" எனவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாஸ்காவிழாச் சிறப்புப் பொழிவு

# புனித வார திருச்சடங்கு விளக்கவுரைகள்

## வழிபாடுகளில் விளக்கத்தோடு பங்கெடுப்போம்!








## புனித வியாழன்

### முன்னுரை

இறைமகன் இயேசுக் கிறிஸ்துவின் அன்பில் வாழ அழைக்கப்பட்ட இறை மக்களே! நாம் இன்றிலிருந்து பாஸ்கா விழாவின் முப்பெரும் நாட்களைத் துவங்குகிறோம். குறிப்பாக இன்று ஆண்டவர் இயேசுவின் இராவுணவுத் திருவழிபாட்டில் பங்கேற்க இருக்கின்றோம்.

அன்பின் இறைவன் தம் மக்கள்மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்துவதன் உச்சக் கட்டமாக தமது ஒரே பேறான மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அதே அன்பு இறைவன் தம் அன்பின் உடனிருப்பை இன்றும் அருளடையாளங்கள் வழியாக வெளிப்படுத்துகிறார். அந்த அருளடையாளங்களில், கிறிஸ்தவ வாழ்வின் மையமாகத் திகழ்வது நற்கருணை மற்றும் குருத்துவம் ஆகும். நற்கருணை வாழ்வின் உணவு. குருத்துவம் கிறிஸ்தவ மக்களை இறைவனின் அன்பில் வழிநடத்தி, வழிகாட்டும் அருளடையாளம். இவ்விரு அருளடையாளங்களை ஆண்டவர் இயேசு இன்று ஏற்படுத்தினார்.

திருத்தூதர்களின் காலடிகளைக் கழுவி "நான் செய்ததுபோல நீங்களும் செய்யுங்கள்" என்று அன்புக் கட்டளையைக் கொடுத்தார். இவற்றை இன்று நினைவுகூரும் நாம், நற்கருணை வழிபாடு, நற்கருணைப் பவனி என்ற மகத்துவமிக்க திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் பங்கெடுக்க இருக்கிறோம்.

குருத்துவம் ஏற்படுத்தப்பட்ட இந்நன்னாளில் நம்முடைய குருக்களுக்காகச் செபிப்போம். நற்கருணையில் ஆண்டவர் இயேசுவின் உடனிருப்பை உணர்ந்தவர்களாக, மற்றவர்களுக்காக உழைக்கின்ற நல்மனதைக் கொண்டுவாழ இறையருள் வேண்டி மன்றாடுவோம். இப்போது நடக்க இருக்கும் திருச்சடங்குகளில் பக்தியோடு பங்கெடுத்து செபிப்போம்.

### தொடக்கச் சடங்கு

(திருப்பலி தொடங்கும்முன் நற்கருணைப் பேழை வெறுமையாக இருக்க வேண்டும். இன்றும் மறுநாளும் மக்களுக்குத் திருவுணவு வழங்குவதற்குப் போதுமான திரு அப்பத்தை இத்திருப்பலியில் புனிதப்படுத்த வேண்டும்)

### உன்னதங்களிலே கீதம் பாடும் முன்

இப்போது 'உன்னதங்களிலே' எனும் கீதம் பாடப்படும். ஆலய மணிகள் அனைத்தும் ஒலிக்கும். இதுமுதல் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பினை நினைவுகூரும் புனிதவார சனிவரை ஆலய மணிகள் ஒலிக்காது. கவனத்தை சிதறவிடாமல் உள்ளத்தை நன்முறையில் தயாரித்து திருச்சடங்கில் பங்கேற்போம்.

### இறைவார்த்தை வழிபாடு

(வாசகங்கள் வாசிக்கப்படும். மறையுரைக்குப்பின் நம்பிக்கை அறிக்கை சொல்வதில்லை).

### முதல் வாசக முன்னுரை: விப 12: 1-8, 11-14

எகிப்தின் அடிமைத்தளையிலிருந்து இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் அளித்த விடுதலையை நினைவுகூரும் விழா பாஸ்கா விழா. துன்பமான வாழ்வைக் கடந்து ஆண்டவர் வாக்களித்த நாட்டிற்கு பயணப்பட்ட விழா பாஸ்கா விழா. இது ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் கடவுள் வழங்கிய விடுதலையை நினைவுகூர்ந்தனர். பாஸ்கா விழா கொண்டாடப்பட வேண்டிய வழிமுறைகளை இறைவன் மோசே வழியாகக் கொடுக்கிறார். அதை ஆர்வமுடன் முதல் வாசகத்தில் கேட்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை: 1கொ 11:23-26

மற்றவர்களுக்காகத் தன்னையே அளிப்பதைவிட மேலான தியாகம் எதுவும் இருக்க முடியாது. தன்னுடைய நினைவாக இயேசுக் கிறிஸ்து நமக்காக அளித்த அவரது உடலையும் இரத்தத்தையும் நாம் உண்டு மகிழ்கிறோம். தொடர்ந்து அவரது இறப்பை, அவரது மாட்சிநிறை வருகைவரை அறிவிக்க வேண்டுமென புனித பவுல் கொரிந்தியருக்குக் கூறும் அறிவுரையை வாசிக்கக் கேட்போம்.

### காலடிகளைக் கழுவும் சடங்கு

விருந்தளிப்பவரின் வீட்டிலுள்ள வேலையாள் விருந்தினரின் பாதங்களைக் கழுவுவதும், தலைவர் பயணத்திலிருந்து திரும்பும்போது அடிமைகள் தலைவரின் பாதம் கழுவுவதும் அக்கால மரபு. ஆனால் நமது ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து உண்மையான தலைவன். தலைவனானவன் பணிவிடை பெற அல்ல, பணிவிடை புரியவே என்பதைத் தம்முடைய சீடர்களுக்கும் நமக்கும் முன்மாதிரியாக இதன்மூலம் காட்டுகிறார்.

இயேசுவின் பிரதிநிதியாக விளங்கும் குருவானவர் இப்பொழுது திருத்தூதர்களைக் குறித்துக்காட்டும் பன்னிருவரின் பாதங்களைக் கழுவ இருக்கிறார். இந்நிகழ்வை ஏதோ ஒரு சடங்காக மட்டும் கருதாமல், நம் வாழ்க்கைக்கு ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்வோம். ஆண்டவரின் தாழ்ச்சிநிறை பணியாளர்களாக வாழ நாமும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்தவர்களாக இத்திருச்சடங்கில் பங்கெடுப்போம்.

### நற்கருணை வழிபாடு

இறைமகன் இயேசுக் கிறிஸ்து தமது தந்தையின் அன்பை வெளிப்படுத்தத் தம்மையே நமக்காகப் பகிர்ந்தளித்தார். இறைவன்மீது நாம் கொண்டுள்ள அன்பை பகிர்ந்து வாழ்வதில் வெளிப்படுத்துவோம். உள்ளது அனைத்தும் பகிர்வது அல்ல பகிர்தல், மாறாக உள்ளதை உள்ளத்திலிருந்து மற்றவர்களோடு பகிர்தலே பகிர்தல் ஆகும்.

இப்போது காணிக்கைகள் தரும் நேரம். நமது ஞான மேய்ப்பர்களுக்கும் மற்ற ஏழை எளியவர்களுக்கும் நம்மால் முடிந்ததை காணிக்கையாகப் பகிர்வோம். தொடரும் நற்கருணை வழிபாட்டில் நாம் நற்கருணை அருளடையாளத்தின்மீது நம்பிக்கை கொண்டு வாழவும் அதை நிறைவேற்றும் அருள்பணியாளர்களின் பணி வாழ்வு சிறக்கவும் மன்றாடுவோம்.

### நற்கருணை இடமாற்றுப் பவனி

இறைவனின் அன்புப் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் நற்கருணையின் இடமாற்றுப்பவனி இப்போது நடைபெற இருக்கிறது. பீடத்திலுள்ள அனைத்தும் அகற்றப்பட்டு பீடம் வெறுமையாக்கப்படும். தாம் அனுபவிக்கப்போகும் துன்பமான பாடுகளையும் மரணத்தையும் அறிந்த இயேசு தம்முடைய அன்புத் தந்தையிடம் இறைவேண்டல் செய்ய ஜெஸ்தமனி தோட்டத்திற்குச் தம்முடைய சீடர்களோடு சென்றார். இயேசு ஜெஸ்தமனிக்குச் சென்ற அந்தப் பவனியையே இந்த நற்கருணைப் பவனி வெளிப்படுத்துகிறது.

பன்னிரு சீடர்களோடு ஒருவராக நாமும் இந்தப் பவனியில் பங்கேற்போம். தாம் வேண்டி முடிந்தபின்பு தம்முடைய சீடர்கள் உறங்கிக்கொண்டிருந்ததைக் கண்ட இயேசு, "ஒரு மணிநேரம்கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?" என்றார். இன்று நமக்கும் இதே கேள்விதான். நம்முடைய பதில் என்ன? இயேசு அனுபவித்த துன்பத்தை நினைவுகூரும்பொருட்டே நற்கருணை தனிமையான இடத்தில் வைக்கப்படுகின்றது. அருட்பணியாளருடன் இணைந்து இந்தப் பவனியில் பங்கேற்று நள்ளிரவுவரை விழித்திருந்து நமக்குக் கொடுக்கப்பட்ட நேரங்களில் நற்கருணை நாதரோடு உரையாடி, உறவாடி நமக்கும் பிறருக்கும் நலம் வேண்டிச் செபிப்போம்.

## புனித வெள்ளி

### முன்னுரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நிகழ்ந்த ஒரு தியாகப் பலியின் நினைவுநாள் இன்று. ஏனெனில் பாவம் என்னும் சகதியில் விழுந்து, தங்களை மீட்க யாருமே இல்லையென்ற நிலையில் வாழ்ந்த மக்களைத் தம் அன்புத் தந்தைக்குக் கீழ்ப்படிந்த மகனாக, மற்றவரின் உள்ளத்து உணர்வுகளை உணர்ந்த உறவினராக, திக்கற்றவர்களின் தியாக தீபமாகத் தம்மையே தரவந்த நம் ஆண்டவரின் பாடுகள் நிகழ்ந்த நாள்தான் இந்தப் **புனித வெள்ளி.**

இன்று நடக்க இருப்பவை வெறும் சடங்குகள் அல்ல. மாறாக நம் ஆண்டவர் இயேசுவின் தியாகச் சரித்திரம். கண்ணீராலும். செந்நீராலும் தம் உடல், உள்ள வேதனைகளாலும் மற்றவரின் இகழ்ச்சியின் மத்தியிலும் பாவத்தின் பிடியினின்று இயேசு பெற்றுத்தந்த உன்னத விடுத்லை. மேலும் இன்றுதான் ஒரு தனி மனிதனின் சாவு மனிதகுல மீட்பாக அமைந்தது. இன்றுதான் தண்டனையின் கருவியாக இருந்த சிலுவை நம் விடுதலையின் சின்னமாக, வெற்றியின் சின்னமாக மாறியது. எனவே இங்கு நடைபெறும் வழிபாடுகளில் வெறும் பார்வையாளர்களாக இல்லாமல் பங்கேற்பவர்களாக இருப்போம்.

இன்றைய திருவழிபாடானது,

- இயேசுவின் வேதனைகளைப் படம்பிடித்துக் காட்டும் "இறைவாக்கு வழிபாடு"
- அடக்கத்திற்கு முன், இறுதியாக இயேசுவின் முகத்தைக் காண்பிக்கும் 'திருச்சிலுவை ஆராதனை'
- உலக வள்ளலான இயேசு இறுதியில் தம் உடலையும் நமக்கு உணவாகத் தந்தார் எனக்கூறும் "நற்கருணை வழிபாடு"

என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே மிகுந்த பக்தியுடன் இத்திருவழிபாட்டில் பங்கேற்போம்.

### முதலாம் வாசக முன்னுரை : எசா 52:13,53:12

தம் சாயலையே மனிதருக்கு அளித்த கடவுளின் மைந்தன் இன்று எந்த ஒரு சாயலும் இன்றி மற்றவர்களால் கைவிடப்பட்டு, இகழப்பட்டு, கத்ததாத செம்மறியாக நம் பாவங்களுக்காக இறந்தார் என்று இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர் எசாயாவின் குரலுக்குச் செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை: எபி4:14-16,5:7-9

திறந்து கிடக்கும் சிப்பிதான் மழைத்துளியை தன்னுள் பெற்று நல்ல முத்ததாக மாற்ற முடியும். அனைத்துக் காற்றுக்கும் எதிர்த்து நிற்கும் செடிதான் ஒரு மரமாக வளர முடியும். அதுபோல துன்பத்தில் போராடும் மனிதன்தான் வாழ்வில் வெற்றிபெற முடியும். இத்தகைய பண்பைத்தான் இயேசுவும் பெற்றிருந்தார். இத்தகைய பண்பினால்தான் நமக்குத் தலைமை குருவாகவும், செப வாழ்விலே முன்மாதிரியாகவும் விளங்குகின்றார். அத்தகைய இறைவனின் புகழைக் கூறும் இந்த இரண்டாம் வாசகத்திற்கு செவிமெடுப்போம்.

### நற்செய்தி வாசகம்: யோ: 18:1, 19:42

உண்மையான அன்புகொண்ட மனம் எத்துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும். நம்மீது எல்லையில்லா அன்புகொண்டதால்தான் இன்று இயேசு நமக்காக மரித்தார். அவரின் அன்னையை நம் அன்னையாகத் தந்தார் என்று கூறும் இந்த நற்செய்தி வாசகத்திற்கு நம்மையே அர்ப்பணிப்போம். "இயேசு தலைசாய்த்து உயிர் நீத்தார்" என்ற பகுதி வாசிக்கப்படும்போது முழந்தாள்படியிட்டு அஞ்சலி செய்வோம்.

### இறைமக்களின் மன்றாட்டு

தம் பணிவாழ்விலே மற்றவர்களுக்காக என்றுமே தம் தந்தையிடம் பரிந்துபேசிய இயேசு, இன்று தம் மரண வேதனையிலும் மற்றவர்களுக்காக மன்றாடினார். அத்தகைய பணியைச் செய்யத்தான் நம் தாய்த்திருச்சபை இன்று நமக்கு அழைப்பு விடுக்கின்றது. எனவே இயேசுவின் அன்புப் பத்தினியாகிய திருச்சபையோடு இணைந்து நாமும் மன்றாடுவோம். முதலில் மன்றாட்டின் கருத்து அறிவிக்கப்படும். இக்கருத்துக்காக அனைவரும் அமைதியாகச் செபிக்க வேண்டும். பின் குரு கைகளை விரித்து மன்றாடுவார். அனைவரும் சேர்ந்து பதில் சொல்வோம். மன்றாட்டு முடியும்வரை நின்றுகொண்டிருப்பது நல்லது.

### இரண்டாம் பகுதி : திருச்சிலுவை ஆராதனை

அன்று விலக்கப்பட்ட மரத்தின் கவர்ச்சியால் முதல் பெற்றோர் பாவம் செய்து மனிதகுலம் சிறுமையுறச் செய்தனர். ஆனால் இன்று இந்தச் சிலுவை மரத்தின் அரவணைப்பில் இயேசு தம் உயிரைத் தியாகம் செய்து மனித இனம் மாண்படையச் செய்தார். இந்தச் சிலுவை மரம்தான் நமக்கு அடையாளமாகத் திகழ்கின்றது. இயேசுவின் திருஇரத்தத்தால் புனிதமடைந்த இந்த மரம்தான் இன்று நமக்கு வாழ்வுதரும் சின்னமாக இருக்கின்றது. எனவே, இத்தகைய வல்லமையைக் கொண்ட வெற்றிச்சின்னமான சிலுவையைக் குருவானவர் சிறிது சிறிதாகத் திறந்து "திருச்சிலுவை மரமிதோ..." என்ற பாடலைப் பாட நாம் அனைவரும் "வருவீர் ஆராதிப்போம்" என்று பதில் பாடுவோம்.

### மூன்றாம் பகுதி: திருவிருந்து

இறந்தவர்களின் வீட்டில் விழாக் கொண்டாடுவதோ, விருந்து உண்பதோ நம் முறையல்ல. ஆனால் இன்றைய திருவழிபாட்டில் நம் ஆண்டவராகிய இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் நமக்கு ஆண்டவர் மீண்டும் வருவார் என்ற ஆறுதலையும் நம்பிக்கையையும் தர இந்த உணவானது தேவைப்படுகின்றது. இத்தகைய நம்பிக்கையின் விருந்திலே நாம் பங்குகொண்டு, இறையேசுவின் நம்பிக்கையின் வீரர்களாய்க் காத்திருப்போம்.

*- நன்றி - தோழன் 2011 மார்ச்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்காவிழாச் சிறப்புப் பொழிவு

# புனித வார திருச்சடங்கு விளக்கவுரைகள்

## வழிபாடுகளில் விளக்கத்தோடு பங்கெடுப்போம்!





## பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு

### முன்னுரை

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதரர்களே! இருள் சூழ்ந்திருக்கும் இந்த வேளையில், முடிவில்லாப் பேரொளியாகிய ஆண்டவர் இயேசுவின் பாஸ்காவைக் கொண்டாட நாம் அனைவரும் இங்கு கூடியிருக்கின்றோம்.

"இறைமகனை அழித்துவிட்டோம்" என்று ஆணவத்தில் இருந்த அதிகார வர்க்கத்தினரின் அடித்தளம் ஆட்டம் கண்டிட, இறப்போடு அவரது சரித்திரம் முடிந்தது என்று இருந்த சர்வாதிகாரக் கூட்டங்களின் கதிகலங்கிட, கல்லறையைக் காலியாக்கிவிட்டு இறைமகன் இயேசு உயிர்த்தெழுத்தார்.

புதைக்கப்பட்ட விதை முளைப்பதுபோல, அடக்கப்பட்ட உணர்வு வெடிப்பதுபோல, பாவத்தையும் சாவையும் அழித்து இயேசு வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்தார். நம்மைப் பொய்மையிலிருந்து மெய்மைக்கும், இருளினின்று ஒளிக்கும், சாவினின்று வாழ்வுக்கும் அவர் அழைத்துச் செல்கிறார். இதுவே நம்முடைய பாஸ்கா! நம்முடைய கடந்து செல்லுதல்! நம்முடைய வாழ்க்கைப் பாடுகளுக்கும் போராட்டங்களுக்கும் துன்பங்களுக்கும் வெற்றிப் பரிசு உண்டு. பாவங்களையும் இறப்பையும் இழப்புக்களையும் நிச்சயம் நாம் கடப்போம், உயிர்ப்போம் என்ற நம்பிக்கையை இவ்விழா நமக்குத் தருகின்றது. கிறிஸ்தவத்தின் உயிர்நாடியாக இருக்கின்ற உயிர்ப்பின் மகத்துவத்தையும் மேன்மையையும் இன்றைய திருவழிபாடு நமக்கு எடுத்துரைக்கின்றது.

### இன்றைய திருவழிபாடானது

ஒளி வழிபாடு, இறைவாக்கு வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

### ஒளி வழிபாடு

எல்லாக் காலக்கட்டத்திலும் எல்லா மக்களாலும் ஒளியானது கடவுளின் அடையாளமாகக் கருதப்பட்டு வருகின்றது. ஒளிரும் தீப்பிழம்பு வடிவில் மோசேக்கு இறைவன் தம்மை வெளிப்படுத்தினார். நெருப்புத் தூணாக இஸ்ரயேல் மக்களைப் பாலைநிலத்தில் காத்து வழிநடத்தியவரும் அவரே. ஆவியானவரும் தீநாக்கு வடிவில் தமக்கு உரியவர்கள்மீது இறங்கிவந்தார். இவ்வாறு ஒளி இறைவனின் அடையாளமாகத் திகழ்கின்றது. அனைவரையும் ஒளிர்விக்கும் ஒளியான கிறிஸ்துவே இவ்வுலகின் ஒளி என்பதன் அடையாளமாக இப்போது இப்புதிய ஒளி புனிதப்படுத்தப்படுகின்றது. புனிதப்படுத்தப்பட்ட நெருப்பிலிருந்து உண்டான ஒளி பாஸ்காக் திரியில் தீபமாய் ஒளிர்வதுபோல, பாவத்தளைகளிலிருந்து நாமும் விடுபட்டு அன்பினால் சுடர்விடும் தீபங்களாக ஒளிர்ந்திட வேண்டி பாஸ்காத் திரியிலிருந்து மற்றத் திரிகள் ஏற்றப்படுகின்றன.

### பாஸ்கா பவனி

இப்போது பாஸ்கா பவனி தொடங்குகிறது. சுடர்விட்டெரியும் பாஸ்காக்திரி கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகின்றது. பாஸ்காத்திரியைப் பவனியாக எடுத்துச்செல்வதன் மூலம் இருளின் சக்திகள், ஆட்சிகள் முறியடிக்கப்படுகின்றன. பேரொளியாம் கிறிஸ்துவைப் பின்பற்றும் நாமும் அவரைப்போல் ஒளிர வேண்டும். அதைக் குறித்துக்காட்டத்தான் குரு ஒளியாம் கிறிஸ்துவை ஏந்தி நமக்கு முன்னால் செல்கின்றார். குரு பாஸ்காத் திரியை உயர்த்திப் பிடித்து "கிறிஸ்துவின் ஒளி இதோ" என்று மும்முறை பாடுவார். நாம் அனைவரும் "இறைவா உமக்கு நன்றி" என்று ஆர்ப்பரித்துப் பாடுவோம்.

### பாஸ்கா புகழுரை

அன்று பார்வோனின் அடிமைத்தளையிலிருந்து விடுதலைபெற்று செங்கடலைக் கடந்த இஸ்ரயேல் மக்கள் நன்றியோடு இறைவனைப் பாடிப்புகழ்ந்தார்கள். அதுபோல் பாவத்தளையிலிருந்து நம்மை மீட்டு தூய வாழ்வுக்கு இட்டுச்செல்லும் இறைவனின் வல்லசெயல்களை நினைத்து பாஸ்காப் புகழுரைப் பாடப்படுகிறது. ஆகவே அனைவரும் எரியும் திரிகளைக் கையில் பிடித்து அப்புகழுரைக்குச் செவிமடுப்போம்.

### இறைவாக்கு வழிபாடு

இப்போது இறைவாக்கு வழிபாடு தொடங்குகிறது. பழைய ஏற்பாட்டிலிருந்தும் புதிய ஏற்பாட்டிலிருந்தும் வாசகங்கள் இடம்பெறுகின்றன. மாற்றங்கள் இமைப்பொழுதில் நிறைவு பெறுவதில்லை. படிப்படியாக முழுமையை நோக்கி பரிணமிக்கின்றன. நம்முடைய மீட்பின் பாதையும் ஒரு நீண்ட வரலாற்றுப்பாதை. மீட்பு வரலாற்றின் முக்கிய சந்திப்புக்களை, இறைவனின் மாண்புமிக்க செயல்களை, பக்குவமாய் படிப்படியாய் முழுமையை நோக்கி முன்னேறும்விதத்தினையும் கிறிஸ்து இயேசுவில் முழுமைபெறுவதையும் இன்றைய வாசகங்கள் எடுத்துரைப்பதைக் கேட்போம். ஒவ்வொரு வாசகத்திற்குப் பின்னும் பதிலுரைப் பாடலும் அதைத்தொடர்ந்து செபமும் இடம்பெறும். மெழுகுதிரிகளை அணைத்துவிட்டு இறைவாக்கு வழிபாட்டில் முழுமையுடன் பங்கெடுப்போம்.

### முதல் வாசகம்: தொநூ 1: 1-2:2

இறைவன் இந்த உலகை மனிதனுக்காகப் படைத்து அவற்றை அவனுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார். இறைவன் மனிதனைப் படைப்பின் சிகரமாய்ப் படைத்து படைப்பனைத்தும் மிக நல்லதெனக் காண்கிறார். தன் அன்பின் சாயலை மனிதரில் வெளிப்படுத்துகின்றார். இறைவன் நமக்கு அளித்த மாபெரும் பரிசு, விலைமதிப்பில்லாத அன்பின் சாயல் என்ற சிந்தனையோடு முதல் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசகம் : விப 14:15-15:1

இறைவன் மோசேயை ஒரு கருவியாகத் தேர்ந்தெடுத்து தான் தேர்ந்துகொண்ட மக்களைப் பார்வோனின் பிடியிலிருந்து விடுவிக்கிறார். அடிமைப்பட்டிருந்த இஸ்ரயேலரின் வாழ்வில் நுழைகிறார். இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடந்துவந்த நிகழ்வு அவர்கள் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவமும் தனித்துவமும் பெற்ற நிகழ்வாக அமைந்தது. இறைவன் எவ்வாறு அவர்களோடு இருந்து பராமரித்தார் என இவ்வாசம் கூறுகிறது. இறைவனின் பராமரிப்பு நமக்கும் உண்டு என்ற மனநிலையோடு இரண்டாம் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### மூன்றாம் வாசகம்: எசே 36:16-28

"நீங்கள் என் மக்களாய் இருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்" என்றுகூறி இஸ்ரயேல் மக்களோடு இறைவன் உடன்படிக்கை செய்துகொண்டார். இதன் விளைவாக இறைவன் அவர்களுக்கு எண்ணற்ற நன்மைகள் செய்தபோதிலும் அதை அவர்கள் உதறித் தள்ளிவிட்டு தீவினைக்கு இட்டுச்செல்லும் பாதையைத் தேர்ந்தெடுத்தார்கள். இதனால் திரும்பவும் பாபிலோனில் அடிமைகளாயினர்.

ஆனால் கடவுள் தம் அன்பு மிகுதியால் மீண்டும் அவர்களை மீட்க விருப்பம் கொள்கிறார். தம் பெயரை நிலைநிறுத்தும் பொருட்டு அந்த மனிதர்களைத் தம் ஆவியால் புதுப்பிக்கின்றார். அரசியல் விடுதலை மட்டுமல்லாது புதிய இதயத்தையும் புதிய ஆவியையும் கொடுத்து உள்ளார்ந்த அக விடுதலையும் தருகிறார் என்று கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### உன்னதங்களிலே கீதம்

இப்பொழுது பீடத்தில் மெழுகுதிரிகள் ஏற்றப்படுகின்றன. அனைவரும் எழுந்துநின்று இறைமகன் இயேசுக்கிறிஸ்து சாவை வென்று நம்மை மீட்க உயிர்த்துவிட்டார் என்ற மகிழ்ச்சிச் செய்தியை இந்த வையகத்திற்கு அறிவிக்க இசைக்கருவிகள் முழங்க, ஆலய மணிகள் ஒலிக்க, மிகுந்த மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் ஆனந்த அக்களிப்புடனும் 'உன்னதங்களிலே' கீதத்தை எல்லோரும் சேர்ந்து பாடுவோம்.

### திருமுக வாசகம்: உரோ 6:3-11

திருமுழுக்கு வழியாக இயேசுவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் பங்கெடுத்து கடவுளின் பிள்ளைகளாக மாறுகிறோம். மகிமையுடன் உயிர்த்தெழுந்த இயேசு இனி இறக்கமாட்டார் எனக் எடுத்துக் கூறி, நமது வெற்றியும் மகிமை வாழ்வும் நிலையானது என்பதை எடுத்தியம்புகிறார் புனித பவுல். எனவே நமது பாவ வாழ்வை விட்டுவிட்டு கிறிஸ்து இயேசுவோடு இணைந்து புதிய வாழ்வை கடவுளுக்காக வாழ்வோம் என்ற மனநிலையோடு பவுலின் மடலுக்கு செவிமடுப்போம்.

### திருமுழுக்கு வழிபாடு

திருமுழுக்கு வழியாகக் கடவுளின் பிள்ளைகளாக மாறுகிறோம். கிறிஸ்துவில் நாம் பெற்ற திருமுழுக்கு நம் அனைவரையும் மறு கிறிஸ்துவாக வாழ அழைக்கின்றது. விடுதலை வாழ்விற்கு நம்பிக்கை அடிப்படை. திருமுழுக்கு வழியாக நாம் பெற்ற அருள்வாழ்வு நம்முடைய மீட்பிற்கு வழிவகுக்கின்றது. எனவே இப்பொழுது நடக்கும் திருமுழுக்குச் சடங்கில் பங்குபெறும் நாம் மீண்டும் நமது நம்பிக்கையைப் புதுப்பித்துக்கொள்வோம். இதன் வழியாக இயேசு கொண்டுவந்த மீட்பில் பங்குபெறுகிறோம். ஆகவே இந்தத் திருமுழுக்குச் சடங்கில் பங்குபெறுவதன் வழியாக மீட்பின் ஆற்றலை உணர்ந்துகொள்வோம். நம்முடைய பாவ வாழ்வை உதறித் தள்ளிவிட்டு மறு கிறிஸ்துவாக வாழ உறுதி எடுப்போம்.

நாம் பாவத்திலிருந்து புனித வாழ்விற்கு கடந்துவிட்டதன் மகிழ்ச்சி, நம் நம்பிக்கை வாழ்வின் வளர்ச்சி ஆகியவற்றை மனதில் கொண்டு ஈடுபாட்டுடன் இந்தத் திருச்சடங்கில் பங்கேற்போம்.

### புனிதர்களின் மன்றாட்டுமாலை

இப்போது புனிதர்களின் மன்றாட்டுமாலை பாடப்படுகின்றது. நாம் பெற்ற விசுவாசத்தை ஏற்று வாழ்ந்து, வாழ்வளிக்கும் சக்தியாக மாற்றி, நிறைவாழ்வு பெற்றுவிட்டவர்கள் புனிதர்கள். இறைவனுக்கும் மனிதனுக்கும் ஏற்புடைய மறையில் தம் வாழ்வை அமைத்துக்கொண்டவர்கள்தான் புனிதர்கள். இந்தப் புனிதர்கள் நமக்குத் துணைநிற்பவர்கள், நமக்கு வழிகாட்டிகள். நமக்குத் தேவையானவற்றை இறைவனிடமிருந்துப் பெற்றுத்தருமாறு இவர்களிடம் மன்றாடுவோம்.

### திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசி வழங்குதல்

நம்முடைய பாவக்கறைகளை அகற்றும் தூய்மையின் அடையாளமாக விளங்கும் தண்ணீரை இப்போது அருட்பணியாளர் புனிதப்படுத்துகிறார். படைப்பின் தொடக்கத்திலேயே கடவுளின் ஆவியார் தண்ணீரின்மீது அசைவாடினார். நம்முடைய பாவக்கறைகளிலிருந்து நம்மைத் தூய்மைப்படுத்த இத்தண்ணீரிலும் கடவுளின் ஆவியானவர் இறங்கி அசைவாடி புனிதப்படுத்த மன்றாடுவோம்.

### திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்

(அனைவரும் எழுந்து நின்று நம்முடைய மெழுகுதிரிகளை ஏற்றிக்கொள்வோம்). நம்முடைய பாவச் செயல்களின் மூலம் திருமுழுக்கு அருளை இழந்து வாழும் நாம் மீண்டும் திருமுழுக்கின் வாக்குறுதிகளைப் புதுப்பித்து இறை உறவில் வாழ உறுதி எடுப்போம்.

உயிர்த்த ஆண்டவர் இந்தப் புனிதமான இரவில் நம்மைத் தூய்மைப்படுத்தி ஆவியின் கொடைகளால் நிரப்ப மன்றாடுவோம். அருள்பணியாளர் கேட்கும் கேள்விகளுக்கு 'விட்டுவிடுகிறேன்' என்றும் 'ஏற்றுக்கொள்கிறேன்' என்று ஒருமையில் பதில் கூறுவோம்.

### நற்கருணை வழிபாடு

'நற்கருணை' கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமும் என்று அறைகூவல் விடுக்கின்றது 2ஆம் வத்திக்கான் சங்கம். உயிர்த்த இயேசு உணவாகி நம் உள்ளத்திலும் ஊனிலும் உயிரிலும் உணவின் வடிவில் வருகிறார். உறவைப் புதுப்பித்து அவரில் வளர உறுதியைத் தருகிறார். கிறிஸ்துவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் உண்மையாகவே பங்குபெறுகிறோம் என்ற உணர்வோடு இந்நற்கருணை வழிபாட்டில் பங்கெடுப்போம்.

*- நன்றி - தோழன் 2011 மார்ச்*

## துணுக்குகள்

### ஈஸ்டர்

ஈஸ்டர் என்கிற வார்த்தையின் தொடக்கம் எங்கிருந்து வருகின்றது என்பதை முழுமையாக அறியமுடியவில்லை என பீட்டர் என்பவர் கூறுகிறார். ஆங்கிலோ – சாக்ஸன் வார்த்தை 'ஈஸ்டரே' என்பதிலிருந்து அதாவது - பசுமை, வளமை என்ற கருத்துக்கொண்ட தேவதையின் பெயரிலிருந்து தோன்றியிருக்கலாம் என்று ஒரு சிலரும், பழைய – ஜேர்மனி மொழியிலிருந்து அதாவது 'வைகறை' என்ற வார்த்தையிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று வேறுசிலரும் கூறுகின்றனர்.



### முதன்மைப் பெருவிழா

ஈஸ்டர் விழாதான் திருச்சபையின் முதன்மையான பெருவிழா. முதலாம் லியோ "விழாக்களுக்கெல்லாம் விழா" என இதைக் குறிப்பிடுகின்றார். மேலும் "கிறிஸ்து பிறப்பு விழா" ஈஸ்டருக்கு முன் தயாரிப்பாகத்தான் கொண்டாடப்படுகிறது என்றும் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்து வருட நிறைவை நோக்கி ........

## மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு – பிரான்ஸ்

'மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு' பிரான்சில் உள்ள பாரிஸ் மாநகரில் 01.05.2006ல் அருட்பணியாளர் பெனோ அலெக்ஸ்சாண்டர் அவர்களின் வழிநடத்துதலில் ஆரம்பமாகி ஒன்பது ஆண்டுகள் மிகவும் சிறப்பான முறையில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் பின்தங்கிய மன்னார் மாவட்டம் சிறிதளவேனும் இந்த அமைப்பின் மூலம் மேலதிகமாக வளர்ச்சி காணவேண்டும் என்பதாகும்.

இதனடிப்படையில் முதற்கட்டப் பணியாக 2008ல் மன்னார் மாவட்டத்தில் கிராமப்புறப் பகுதிகளிலுள்ள பின்தங்கிய பாடசாலைகளில் படிக்கின்ற மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணப் பொருட்கள் வாங்குவதற்குப் பணம் அனுப்பி உதவிசெய்துள்ளதோடு அடிப்படை வசதியற்ற வறிய குடும்பத்தைச் சேர்ந்த பத்து மாணவர்களுக்கு தலா ஒரு மாணவனுக்கு மாதம் 500/= ரூபாய்ப்படி பத்து மாதங்களுக்கு இந்த அமைப்பு பணம் கொடுத்து உதவியுள்ளது.

மன்னாரில் இயங்கிவருகின்ற கறிற்றாஸ் வாழ்வுதயம் ஊடாக மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட பல கிராமங்களிலுள்ள வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தகுதிபெற்ற 25 மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களுடைய கல்வியாண்டு முடியும்வரை ஒரு மாணவனுக்கு மாதம் 3000/- ரூபாய்ப்படி உதவிப்பணம் வழங்கிவந்துள்ளது.

அதைத் தொடர்ந்து 2009இல் எமது நாட்டில் நடைபெற்ற கொடூர யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து அகதிகளாக முகாம்களிலிருந்த எமது தமிழ் மக்களுக்கு உடனடித்தேவையாக இருந்த அன்றாட உணவிற்காக எமது மன்னார் மாவட்ட ஆயர் மூலம் எமது அமைப்பு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்துள்ளது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இயங்கிவருகின்ற மாற்றாற்றல் உள்ளோர் புனர் வாழ்வுச் சங்கம் (MARDAP), வயோதிபர் இல்லம் (SHANTHOM) ஆகியவற்றிற்கு இந்த அமைப்பு உதவிகளை வழங்கியுள்ளது.

தொடர்ந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட - மாந்தைப் பகுதிக்குள் மீள்குடியேற்றப்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு சீருடை, மன்னார் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு வெள்ள நிவாரணம், அன்னை இல்லத்திற்கு தேவையான மிதிவண்டிகள், மன்னார் மாவட்டத்தில் 2010இல் மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான நிதி உதவி போன்றவற்றை இந்த அமைப்பு வாழ்வுதயம் மூலம் கொடுத்துதவியமை குறிப்பிடத்தக்கது.

புனித டிலாசால் துறவறசபை அருட்சகோதரர்கள் மன்னார் மண்ணில் கால்பதித்து 60ம் வருட நினைவைக் கொண்டாடுவதற்கு (2013) இந்த அமைப்பு தன்னால் இயன்ற உதவியைச் செய்துள்ளது. 2013ம் ஆண்டு தொடக்கம் இந்த அமைப்பு கல்வி உதவிகளை மட்டுமே முன்னெடுத்துச் செல்லுவதாகத் தீர்மானித்து 2013ல் முருங்கன் மகா வித்தியாலயம், ஆண்டாங்குளம் றோ. க. த. க. பாடசாலை, வட்டக்கண்டல் அ. த. க. பாடசாலை போன்றவற்றிற்கு க.பொ.த. சாதாரண தரம், க.பொ. உயர்தரம் படிக்கும் மாணவர்களுக்கு மேலதிக நேர வகுப்புக்களுக்கான (Tuition) ஆசிரியர் கொடுப்பனவு, 2014ல் வங்காலை புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், நானாட்டான் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு மேலதிகநேர வகுப்புகளுக்கான கொடுப்பனவு போன்றவற்றை வழங்கியுள்ளது.

மேலும் எதிர்வரும் காலங்களில் மன்னார் மாவட்டத்திலுள்ள குக்கிராமப் பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு உதவிசெய்ய எமது அமைப்பு தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எமது அமைப்பு ஆரம்பித்த நாளை நினைவுகூரும்முகமாக எமது அமைப்பின் வருடாந்தப் பொது ஒன்றுகூடலையும் நடாத்திவருகின்றது. வருடாந்த விழா தினத்தையொட்டி மன்னார் மாவட்டத்திலுள்ள ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அதிஷ்டலாபச் சீட்டிழுப்பும் நடாத்திவருகின்றது.

இந்த அமைப்பின் 7வது வருட நினைவையொட்டி மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு – பிரான்ஸ் 'வசந்த தீபம்' என்னும் மலரை வெளியிட்டதில் மனமகிழ்வு கொள்கிறது.

"எமது எதிர்கால மாணவச் செல்வங்களை வளமாக்குவோம்" என்ற உணர்வோடு பிரான்ஸ்வாழ் மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் எமது இந்த அமைப்பில் இணைந்து எம்முடன் கரம்கோர்த்து உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அமைப்பின் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரையும் எமது அமைப்போடு இணைந்து தோளோடு தோள்கொடுத்து உதவிசெய்து வருகின்ற அத்தனை அன்பு உள்ளங்களையும் நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றோம்.

**வருடாந்த பொது ஒன்றுகூடல்**

10.05.2015 அன்று ஞாயிறு பி.ப 3.00 மணிக்கு நடைபெறும். மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பின் பத்தாவது வருடாந்த பொது ஒன்றுகூடலில் பிரான்ஸ்வாழ் மன்னார் மாவட்ட மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:** ஒப்புரவு அன்னை சிற்றாலய மண்டபம், 57 Bd de Bellville, 75011, Paris.

பகல் 11.30 மணித்திருப்பலியின் பின்பு இடம்பெறும்.

எனவே பிரான்ஸ்வாழ் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த உங்கள் பிள்ளைகளை இவ்வமைப்பில் இணைந்து செயற்பட தெளிவுபடுத்தும்படி பெற்றோராகிய உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:- மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு, பிரான்ஸ்
தொடர்புகளுக்கு :- 0761520490, 0601963787

## மன்னாவின் 'அதிர்வுகள்' தொடர் நூலுருப் பெற்றது!





சமகால சமூக, ஆன்மீக, அரசியல் விடயங்களை எடுத்துரைக்கும் அருட்பணி. செ. அன்புராசா (அ.ம.தி.) அடிகளார் மன்னாவில் எழுதிவரும் 'அதிர்வுகள்' தொடர் 'அதிர்வுகள்' என்ற பெயரிலேயே நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இல. 286இல் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குனர் ஆசிரியர். யோ. ராஜ்குமார் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

கவிஞர் சோ. பத்மநாதன் (சோ.ப) பிரதம விருந்தினராகவும், எழுத்தாளர் கே. ஆர். டேவிட் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் திரு. செல்மர் எமில் வரவேற்புரையையும், அருட்கலாநிதி அ. பி. ஜெயசேகரம் அடிகளார் ஆசியுரையையும், கலாநிதி கந்தையா சிறிகணேசன் வெளியீட்டுரையையும், இலக்கிய வித்தகர் திருமதி கோகிலா மகேந்திரன் நயப்புரையையும் ஆற்றினர்.

நூலின் முதல் பிரதியினை திரு. திருமதி திருநாவுக்கரசு சிவபூசமலர் தம்பதியினர் பெற்றுக்கொண்டனர். திருமதி திருநாவுக்கரசு சிவபூசமலர் அருட்பணி. செ. அன்புராசாவின் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல வைத்தியகலாநிதி திருநாவுக்கரசு அவர்கள் செ. அன்புராசா அடிகளாரின் கிராமமாகிய முருங்கனில் 1980களில் மிகவும் இக்கட்டான காலகட்டங்களில் மருத்துவப்பணி ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தன் ஆசிரியரையும் தம் கிராமத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் பணியாற்றிய வைத்தியரையும் அழைத்து அன்புராசா அடிகளார் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், எழுத்தாளர்கள், விரிவுரையாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்நூலின் விலை 300.00 ரூபா. இதனை மன்னார் கலையருவியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## ஐரோப்பாவில் பணியாற்றும் தமிழ் ஆன்மீக இயக்குனர்களுக்கான ஒன்றுகூடல்



ஐரோப்பாவில் பணியாற்றும் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக இயக்குனர்களுக்கான முதலாவது ஒன்றுகூடல் கடந்த ஜனவரி மாதம் 28, 29,30ஆம் திகதிகளில் சுவிற்சலாந்து நாட்டின் ஒல்ரன் நகரிலுள்ள கப்புச்சியன் துறவற சபையினரின் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இந்த ஒன்றுகூடலில் அருட்பணி. லீனஸ் சொய்சா அமதி (ஆன்மீக இயக்குனர் - பிரான்ஸ்) அருட்பணி. றெஜினோல்ட் அமதி (ஆன்மீக இயக்குனர் - பேர்கன், நோர்வே) அருட்பணி. பெனற் (ஆன்மீக இயக்குனர் - ஜேர்மனி) அருட்பணி அந்தோனிதாஸ் டலிமா (ஆன்மீக இயக்குனர் - சுவிற்சலாந்து) அருட்பணி. செபநேசரெட்ணம் (ஆன்மீக இயக்குனர் - லண்டன்) அருட்பணி ஜெயந்தன் அமதி (ஆன்மீக இயக்குனர் - ஒஸ்லோ, நோர்வே) அருட்பணி. விமல்ராஜ் (அமதி) (ஆன்மீக இயக்குனர் - இத்தாலி) அருட்பணி. றெறன்ஸ் (ஆன்மீக இயக்குனர் - கொலண்ட்) ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

## புதைகுழிக் கிணற்றைத் தோண்ட அனுமதி

மனித உடல்கள் போட்டு மூடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும், மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் உள்ள கிணற்றைத் தோண்டுவதற்கு மன்னார் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார், மாந்தை, திருக்கேதீஸ்வரத்தில் மனிதப் புதைகுழி கண்டறியப்பட்டது. வீதி அகலிப்புப் பணியின்போது இந்தப் புதைகுழி சிக்கியது. அதற்கு அருகில் இருந்ததாகக் கூறப்படும் கிணற்றிலும் சடலங்கள் போட்டு மூடப்பட்டன என்று சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டன. இதை அடுத்து, அந்தக் கிணற்றைத் தோண்டுவதற்கு அனுமதிக்குமாறு காணாமற் போனவர்களின் உறவினர்கள் சிலர் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நீதிவான் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்த வழக்கு கடந்த 16.03.2015 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகத்திற்குரிய இடத்தைத் தோண்டுவதற்கு நீதிவான் அப்போது அனுமதி வழங்கினார். ஏப்ரல் 6 - 10ம் திகதி வரையிலான 5 தினங்களுக்குள் கிணற்றைத் தோண்டுவதற்கு நீதிவான் பணிப்புரை விடுத்தார்.

## "துளிராய் சருகாய் உயிர்ப்பாய்"

## இறுவட்டு வெளியீடு

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இசைத்தென்றல் கலாபூசணம் ம. யேசுதாசனின் ஆக்கத்தில் உருவான 'துளிராய் சருகாய் உயிர்ப்பாய்' என்னும் கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய இறுவட்டின் வெளியீடு விழா கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் இயக்குநரும், மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவரும், மன்னா பத்திரிகையின் ஆசிரியருமான அருட்பணி. தமிழ்நேசன் அடிகள் கலந்து சிறப்புரை ஆற்றினார்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,

உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள்.

சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம். பங்கு மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். நன்றி.

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# மறைசாட்சியம் மிகச்சக்தி வாய்ந்த சாட்சியமாக கிறிஸ்தவத்தில் விளங்குகின்றது!

### ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரையின்போது

### அருட்பணி. ச.வி.ப மங்களாராஜா அடிகளார்

மறைசாட்சியம் கிறிஸ்தவத்தில் மிகச்சக்தி வாய்ந்த சாட்சியமாக விளங்குகிறது என அருட்பணி. கலாநிதி ச.வி.ப. மங்களராஜா அடிகள் தெரிவித்தார். யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் நடாத்தப்பட்டுவரும் முன்னாள் ஆயர் வ. தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரையில், "மன்னார் மறைசாட்சிகள் - உண்மைகளும் தாக்கங்களும்" என்ற தலைப்பில் பேருரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், பெந்தக்கோஸ்தே விழாவின்போது ஆரம்பமான திருச்சபையின் வரலாற்றில் எப்போதெல்லாம், எங்கெல்லாம் கத்தோலிக்க திருச்சபைக்கெதிராகவும் கிறிஸ்தவர்களுக்கெதிராகவும் அடக்குமுறைகள், சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டு கிறிஸ்தவர்கள் வேட்டையாடப்பட்டுக் கொல்லப்பட்டார்களோ அங்கொல்லாம் திருச்சபை பன்மடங்கு சக்தியுடன் வளர்ந்ததாகவே வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வகையில், நமது நாட்டில் மன்னார் மண்ணில் 1544ம் ஆண்டு, திருமுழுக்குப்பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவியதற்காக யாழ்ப்பாண மன்னன் சங்கிலி எனப்படும் செகராசசேகரன் அனுப்பிய படையினால் 600க்கும் மேற்பட்டோர் சிரச்சேதம் செய்யப்பட்டு மறைசாட்சிகளாக மரித்த நிகழ்வு யாழ்ப்பாண அரசின் முக்கிய சனத்தொகை மையங்களாக இருந்த யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் மன்னாரிலும் கத்தோலிக்கர் எண்ணிக்கையின் அதிகரிப்பு வேகமடைய வழிவகுத்தது.

யாழ். மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அருட்பணி இரா. ஸ்ரலின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகள் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து உரையாற்றினார்கள்.

குருக்கள், அருட்சகோதரிகள், துறவிகள், குருமட மாணவர்கள், பொதுநிலையினர் என நூற்றுக்கணக்கானோர் இந்த உரையைக் கேட்டுப் பயனடைந்தார்கள்.

## பாலதீவு புனித அந்தோனியார் பெருவிழா



பாலதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பெருவிழா கடந்த மார்ச் மாதம் 08ஆம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

குருநகர், அல்லைப்பிட்டி, வலைப்பாடு, முழங்காவில், இரணைமாநகர், பள்ளிக்குடா, பூனகரி, நாவாந்துறை, ஆனைக்கோட்டை, நவாலி, மண்டைதீவு, யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, மெலிஞ்சிமுனை, பேசாலை, மன்னார் போன்ற இடங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் யாத்திரிகர்கள் இம்முறை இத்திருவிழாவில் கலந்துகொண்டனர். அருட்பணி. இருதயதாஸ் தலைமையில் வேஸ்பர் திருப்பலி இடம்பெறுவதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

## வின்சன்ற் பற்றிக் அடிகளாரின் 'மன ஊர்வலம்' நூல் வெளியீடு



அருட்திரு. கலாநிதி டேவிற் வின்சன் பற்றிக் (அமதி) அடிகள் எழுதிய 'மன ஊர்வலம்' உளவியல் நூல் வெளியீட்டு விழா யாழ் அகவொளி குடும்பவள நிலைய மண்டபத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு. கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி, கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சர் த. குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் இ. ஆனோல்ட், மனநல மருத்துவர் எஸ். சிவதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நயப்புரையை யாழ். பல்கலைக்கழக மெய்யியல் உளவியல் துறை விரிவுரையாளர் கலாநிதி கே. கஜவிந்தன் நிகழ்த்தினார்.

## எனது ஆயர் பணியை வேதசாட்சிகளை அங்கீகரிக்கும் முயற்சியோடு ஆரம்பித்தேன்

### யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை



ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை அறக்கொடை நினைவுப் பேருரை நிகழ்வில் உரையாற்றிய யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தான் 1981ம் ஆண்டு ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டு மன்னார் மறை மாவட்டத்தைப் பொறுப்பெடுத்தவுடன் செய்த முதலாவது செயல் மன்னார் மறைசாட்சிகளை அங்கீகரிக்கும் முயற்சியாகவே அமைந்தது என்று தெரிவித்தார்.

தோட்டவெளி என்னும் இடத்தில் ஒரு சிறு கொட்டிலில் அமைந்திருந்த வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தை பெரிதாகக் கட்டி இறைமக்கள் வேதசாட்சிகளை அறிந்துகொள்ளவும் அவர்களுடைய புனிதர் நிலைக்காக மன்றாடவும் ஆவன செய்தேன் என்றும் தெரிவித்தார்

## அகவொளியில் உளஆற்றுப்படுத்தல் கற்கைநெறியின் பட்டமளிப்பு விழா

தேசிய அயர்லாந்து பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அகவொளி உளஆற்றுப்படுத்தல் நிலையத்தில் உள ஆற்றுப்படுத்துனர்களாக (Counsellors) பயிற்றுவிக்கப்பட்ட 10ஆம், 11ஆம் அணியினருக்கான பட்டமளிப்பு விழா கடந்த டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை அகவொளி குடும்ப வளத்துணை நிலைய கேட்போர்கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி டி. எஸ். சூசைதாஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் 2012- 2013 மற்றும் 2013 – 2014 கல்வியாண்டுகளில் உளஆற்றுப்படுத்தல் கற்கைநெறியை நிறைவுசெய்த அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டன.

ஆகவொளி நிலைய இயக்குனர் அருட்பணி. எஸ். ஜே. இராஜநாயகம் அடிகள் நிலையத்தின் பணிகள் விஸ்தரிப்புக்கள் பற்றியும், உளவள ஆற்றுப்படுத்தல் பணியின் வளர்ச்சி பற்றியும் அறிக்கையை சமர்ப்பித்தார்.

## தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் ஜெபநேசனின் பவள விழா



தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீன முன்னாள் பேராயரும் சிறந்த தமிழறிஞருமாகிய கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களின் பவள விழாவும் சிறப்பு நூல் வெளியீடும் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு அருளுரை நிகழ்த்தினார். பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த அருட்பணி. எஸ். பி. நேசராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## யாழில் புனிதர் யோசப்வாசுக்கு ஆலயம் அமைக்கக் கோரிக்கை


இலங்கையின் புனிதராக கடந்த ஜனவரி மாதம் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களால் உயர்த்தப்பட்ட புனித யோசப்வாஸ் முனீந்திரனை மக்கள் வணங்கி அவருடைய பரிந்துரையை மன்றாட வசதியாக யாழ். மறைமாவட்டத்தில் பொருத்தமான இடத்தில் பெரிய ஆலயம் அமைக்கப்பட்டு திருத்தலமாகப் பேணப்பட வேண்டும் என யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தெரிவித்தார். யாழ். மறைமாவட்டக் குருக்கள் மன்றக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புனித யோசப்வாஸ் அடிகள் 1995ஆம் ஆண்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட பின்னர் கொட்டி என்னும் இடத்தில் சிறிய ஆலயம் அமைக்கப்பட்டது. ஆயினும் இந்த ஆலயம் அமைந்துள்ள காணி, பண்ணை அரச வைத்தியசாலைக்குச் சொந்தமானது என வைத்தியசாலை நிர்வாகத்தால் கோரப்பட்டமையால் இதனை ஒரு பொதுவான ஆலயமாகவோ, மறைமாவட்டத் திருத்தலமாகவோ பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புனித யோசப்வாஸ் அடிகள் வந்திறங்கிய கொழும்புத்துறையிலுள்ள எழிலூர் மற்றும் நாவாந்துறைப் பகுதிகள் இதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளபோதிலும் திருத்தலம் அமையவுள்ள இடம் தொடர்பான இறுதி முடிவு காலக்கிரமத்தில் எடுக்கப்படும் என குருக்கள் மன்றம் தெரிவித்தது.

# திருத்தந்தையின் இலங்கை விஜயத்தின் இறுதி நிகழ்வு நீர்கொழும்பில் கலாச்சார நிலையத்தை திறந்து வைத்தார்





திருத்தந்தை அவர்களின் இலங்கை விஜயத்தின் இறுதி நிகழ்வாக திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் பெயரில் அமைக்கப்பட்ட நீர்கொழும்பில் உள்ள போலவலான என்ற இடத்தில் அமைந்துள்ள கலாசார மண்டபமொன்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திறந்துவைத்தார். ஜனவரி 15ஆம் திகதி காலை அவர் விமான நிலையத்திற்குப் புறப்படும் வழியில் இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும், மேலும் சில அருட்தந்தையர்களும் அங்கு திருத்தந்தையை வரவேற்றனர். மற்றும் கம்பஹா திருச்சிலுவை கன்னியர் மடத்தை சேர்ந்த மாணவிகள் மணம் வீசும் மல்லிகை மலர்களிலான பூச்செண்டு ஒன்றை வழங்கி திருத்தந்தையை அன்புடன் வரவேற்றனர்.

பின் திருத்தந்தை அவர்கள் கலாச்சார நிலையத்தைத் திறந்து வைத்தார். பின்னர் அவர் ஆலயத்திற்குள் சென்று சிறிது நேரம் செபித்தார்.

மேலும் பாடகர் குழு 'Soul Sounds' என்ற பாடலை பாடி இறைவனுக்கு நன்றி கூறினர். திருத்தந்தை அவர்கள் ஆலயத்திற்குள் இருந்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் ஆலயத்திற்குள் கூடியிருந்த மக்களைச் சந்தித்து உரையாடினார்.

விசேடவிதமாக அருட்தந்தை விட்டோ பெர்னியோலோ அவர்களையும் சந்தித்து உரையாடினார். மற்றும் பிட்டிபான, கிரேன்ட் ஸ்டிரீட், துவா பங்கைச் சேர்ந்த கடற்தொழில் செய்யும் மீனவர்களின் குடும்பத்தவர்களோடும் உரையாடினார்.

பின் ஆலயத்திற்குள்ளிலிருந்து திருத்தந்தை அவர்கள் வெளியே வந்ததும் கர்தினால் ஆண்டகை திருத்தந்தை அவர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். பின் திருத்தந்தை, கர்தினால், அருட்தந்தையர்கள் இம்மண்டபத்தை அமைப்பதற்கு உதவிசெய்த அனைவரையும் உள்ளடக்கி நினைவுச்சின்னமாக புகைப்படம் எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா விழாச் சிறப்புப் பொழிவு

# உயிர்ப்பு மூவொரு கடவுளின் செயலே


- கி. அருளப்பு, தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர், விடத்தல்தீவு -

"உலகம் முடியும்வரை எந்நாளும் நான் உங்களோடு இருப்பேன்" என்று சொல்லி உறவுக்குக் கை கொடுத்தார் இயேசு. உறவு வாழ்வின் இலக்கணமே உயிர்ப்பாகிறது. அது உலக வரலாற்றில் உன்னத உலுக்கலாகிறது. சாகக்கூடாதவர் செத்தார், எனவே உயிர்த்தார். சாகக்கூடியவர்கள் செத்தார்கள் இன்னும் அவர்கள் உயிர்க்கவில்லை. சாவுக்கு ஓர் அர்த்தம் கொடுக்கவே இயேசு மரணத்தை ஏற்றுக்கொண்டார். சாவு ஓர் அழிவு அல்ல, முடிவு அல்ல, வெறுமையும் அல்ல. அது வாழ்வின் தொடக்கமே. முழுமை என்பதை அறிந்துகொள்ளவே இயேசு மரணத்தை ஏற்றுக்கொண்டார்.

இலட்சக்கனக்கான யூதர்களைக் கொன்ற ஹிட்லரின் கல்லறை இன்றுவரை மூடியே கிடக்கின்றது. வெற்றிமேல் வெற்றியைக் குவித்த நெப்போலியனின் கல்லறை கேட்பாரற்றுக் கிடக்கின்றது. உலகையே வெல்ல வேண்டும் என்று எண்ணிய அலெக்ஸ்சாண்டரின் கல்லறையை யாருமே கண்டு கொள்வதில்லை. ஆனால் அன்பை மூலதனமாய்க்கொண்டு அதன் இறுதி வெளிப்பாடாக மரணத்தை வென்று உயிர்த்த இயேசுவின் கல்லறை இன்றும் ஜெருசலேமில் திறந்தே காணப்படுகின்றது. கிறிஸ்தவம் தழைத்தோங்கியதற்கு காரணம் இயேசுவின் உயிர்ப்பே ஆகும்.

உயிர்ப்பு மூவொரு கடவுளின் செயல். கிறிஸ்துவின் உயிர்ப்பு இயற்கையை விஞ்சிய கடவுளின் செயல். இதில் மூன்று ஆட்களும் அவரவருக்குரிய தனித்தன்மையோடு ஒன்றுபட்டு செயல்படுகின்றார்கள். தந்தை தமது வல்லமையை வெளிப்படுத்துகின்றார். மகன் தாமே சுதந்திரமாகக் கையளித்து தமது உயிரை மீண்டும் பெறுகின்றார். (யோவான் 10:11) தூய ஆவியார் இயேசுவின் உடலையும் ஆன்மாவையும் மீண்டும் இணைத்து புத்துயிர் ஊட்டி மாட்சிமைப்படுத்துகிறார்.

சாவுக்கு அர்த்தம் கொடுக்கவே இயேசு உயிர்த்தார். உயிர்த்த இயேசுவில் நம்பிக்கைகொண்ட அப்போஸ்தலர்கள்போல் நாமும் விசுவாச வாழ்வு வாழும்போது அங்கே இயேசு உயிர் வாழ்கிறார். இயேசு விட்டுச்சென்ற விழுமியங்களை விதைப்போம். முடிந்தால் விதையாவோம். அதற்காக உயிர்த்தெழுவோம். நாம் இறந்த பின்புதான் உயிர்ப்போம் என்பதல்ல, இவ்வுல வாழ்விலே நம் ஒவ்வொரு செயல்களும் எதிர்பார்ப்புக்களும் உயிர்பெற வேண்டும்.




இன்னல்களைச் சந்திக்காதவரை இமயங்களைத் தொட முடியாது. இவ்வுலகில் நாம் இறக்காதவரை மறுவுலகில் நமக்கு உயிர்ப்பில்லை. தீமை நிறைந்த உலகத்தின் வார்த்தையை விட்டுவிட்டு இறைவார்த்தையைக் கடைபிடிப்பதுதான் உயிர்ப்பு. மானிட உருவேற்றலின் உச்ச நிகழ்வாக இருப்பது உயிர்ப்பு

கிறிஸ்துவின் இறைத்தன்மையும் அவருடைய செயல்கள், போதனைகள் அனைத்தையும் இது உறுதிப்படுத்துகின்றது. மேலும் பாவத்தையும் சாவையும் வென்று உயிர்த்த இயேசுவே நமது உயிர்ப்புக்கும், நாம் ஏற்புடையோர் ஆவதற்கும் காரணமாய் இருக்கின்றார். நமது உடலையும் நிறைவுகாலத்தின்போது உயிர்த்தெழச் செய்வார். இத்தகைய மேன்மைமிக்க இயேசுவின் உயிர்ப்பு நமக்கு மறுவாழ்வு என்னும் கொடையைத் தருகின்றது. நாம் மண்ணோடு மண்ணாக மாறினாலும் நம்மை மீண்டும் உயிர்தெழச் செய்யும் ஆற்றல் ஆண்டவர் இயேசுவுக்கே உண்டு. ஏனெனில் நம் கடவுள் வாழ்வோரின் கடவுள். கிறிஸ்தவம் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம். அதாவது அது ஓர் உயிர்ப்பின் மதம். உயிர்ப்பில்தான் அந்த மதத்தின் அழுத்தம் இருக்கின்றது. உயிர்ப்பு என்பது திருச்சபை வெளித்தோன்றுவதற்கான முற்கோள் ஆகும். இறைவனில் கொண்டுள்ள சிறப்பான நம்பிக்கையின் அடிப்படையாகும். உயிர்ப்பு வரலாற்றின் மையப்புள்ளி.

இயேசுவினுடைய உயிர்ப்பு என்பது இறைவனுடைய புதிய செயல். அவருடைய மீட்பின் செயல். உயிர்த்த இயேசுவே வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவியை வழங்கினார். அவர் உங்களோடு என்றும் இருப்பார். அவர் உண்மையின் ஆவியானவர். உலகம் அவரைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் உலகம் அவரைக் காண்பதும் இல்லை அறிவதும் இல்லை. நீங்கள் அவரை அறிவீர்கள். எனெனில் அவர் உங்களோடு தங்கி உங்களுக்குள் இருக்கின்றார் (யோ 14:16,17). மனிதத்தின் முழுமையைத் தரும் இயேசுவின் உயிர்ப்பு எல்லாம் ஆவி மயம். கடவுளின் ஆவியானவர் கடைசி ஆதாமோ, உயிர்தரும் ஆண்டவராம் இயேசு (1கொ 15:46). பரிசுத்த ஆவியானவரே அவர். தந்தையிடம் இருந்து வரும் உண்மையின் ஆவியானவர் (யோவான் 3:6). இயேசுவின் உயிர்ப்பில் கிறிஸ்தவன் பங்கெடுக்க பங்கெடுக்க அவன் ஆவியின் சாயலாகின்றான்.

அவரது உயிர்ப்பில் பங்கெடுப்பதென்பது மகிமையான விடயம். அது சாகாமையில் பங்கெடுப்பதே. இவையே உயிர்தரும் அருள்கொடை. மனிதத்தின் முழுமையைத்தரும் இயேசுவின் உயிர்ப்பு எல்லாம் ஆவிமயமே.

உலகம் வெறுக்கும்போது உன்னில் நிலைக்கிறார்.
உயிர்ப்பும் உயிரும் ஈர்ந்து நாளும் உடனிருக்கிறார்.

மண்ணகப் பொருளில் மகத்துவம் இல்லை. விண்ணகச் செல்வம் வீழ்வதும் இல்லை. உங்கள் செல்வம் எங்கே உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும். இருவருக்கு உங்களது ஊழியம் நடக்குமா? செல்வம் ஒருபுறம் கடவுள் ஒருபுறம். ஒன்றைத் தேர்ந்தெடு. செல்வம் தேர்ந்தால் தீராத் துயரம். கடவுளைத் தேர்ந்தால் தினமும் மகிழ்ச்சி. திருமுழுக்கு வழியாக உயிர்த்த இயேசுவோடு விண்ணில் அமர்வோம்.

## பாப்பிறை தலைமைப்பணியில்
# ஈராண்டு நிறைவு காணும் திருத்தந்தை பிரான்சிஸ்

### தனது பதவிக் காலம் குறுகியது என சிறப்பு நேர்காணலில் திருத்தந்தை தெரிவிப்பு

இறைவன் தன்னை இவ்விடத்தில் ஒரு குறுகிய காலத்திற்கு வைத்துள்ளார் என்று தான் உணருவதாக திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி மெக்சிகோ நாட்டின் "Televisa" தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர் வலன்ரீனா அலஸ்றாக்கி (Valentina Alazraki) என்பவருக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கானில் தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தில் வழங்கிய ஒரு நீண்ட நேர்காணலில் இவ்வாறு கூறியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கத்தோலிக்க திருஅவையின் 265வது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது ஆண்டு நிறைவு கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி சிறப்பிக்கப்பட்டதையொட்டி இந்நேர்காணல் இடம்பெற்றது.

திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட கான்கிளேவ் பற்றிய விபரங்கள், தனது கடந்த இரண்டு ஆண்டு பாப்பிறைத் தலைமைப்பணி திருப்பீட தலைமையகச் சீர்திருத்தம், தனது பாதுகாப்பு, அரசியல், குடும்பம் பற்றிய ஆயர்கள் மாமன்றம் முன்வைக்கும் சவால்கள். திருஅவையை அனைத்துச் சிறாருக்கும், வயதுவந்தோருக்கும் ஏற்றதாக அமைத்தல், குடியேற்றதாரர், போதைப்பொருள், வர்த்தகம் என பல தலைப்புகளில் தனது எண்ணங்களை திருத்தந்தை பகிர்ந்துகொண்டுள்ளார்.



வருகின்ற செப்ரெம்பர் மாதம் குடும்பங்கள் தினத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாடு செல்லும்போது மெக்சிகோவுக்குச் செல்லாமல் இருப்பது குறித்த கேள்விக்கு மிக விளக்கமாகப் பதிலளித்த திருத்தந்தை, மெக்சிகோ திருத்தூதுப் பயணத்துக்கு ஒரு வாரம் தேவைப்படும் என்று கூறினார்.

இன்றைய உலகில் பசிக்கொடுமையால் இடம்பெறுவதே குடியேற்றம். பசியாலும் சண்டைகளாலும் துன்புறும் மக்கள் தங்கள் நாடுகளிலிருந்து வெளியேறுகின்றனர். குடியேற்றம், பசியோடும் வேலையின்மையோடும் தொடர்புடையது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

## முத்தரிப்புத்துறை
# செங்கோல் மாதா திருவிழாவும் புதிய பங்குப்பணிமனைத் திறப்பும்



கடந்த பெப்ரவரி 2ஆம் திகதி கொண்டாடப்படும் முத்தரிப்புத்துறை புனித செங்கோல் மாதா திருவிழா கடந்த 24.01.2015 முத்தரிப்புத்துறைப் பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்ரஸ் தலைமையில் அன்னையின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இவ்விழாவை முன்னிட்டு ஒன்பது நவநாள் ஆராதனைகள் இடம்பெற்றன. அந்நாட்களில் அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார், அருட்தந்தை டெஸ்மன் ஆஞ்கலோ அடிகளார், அருட்தந்தை நீயூட்டன் அடிகளார் ஆகிய குருக்களினால் சிறப்பான முறையிலே மறை உரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து 01.02.2015 அன்று மாலை நற்கருணை வழிபாடு இடம்பெற்றது. அன்றைய தினம் நற்கருணை பவனியாக எடுத்துவரப்பட்டு ஆசீரும் வழங்கப்பட்டது.

பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் பல குருக்கள் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய முக்கிய நிகழ்வாக அன்னையின் சுரூபம் அலங்கரிக்கப்பட்ட அழகுத் தேரிலே பவனியாக எடுத்துவரப்பட்டு ஆசீரும் வழங்கப்பட்டது. பின்பு அன்னையின் கீதம் இசைக்க வானவெடிகள் முழங்க விழா இனிதே நிறைவுபெற்றது.

அன்றைய தினம் புதிய பங்குமனைக் கட்டிடம் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை அடிகளாரினால் ஆசீர்வரிக்கப்பட்டு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

தகவல் - அ. சாள்ஸ் மொறாய்ஸ்

## காயமடைந்த மனிதனைக் குனிந்து கட்டித் தழுவுவது மிகவும் கடினமான நோன்பாகும்

காயமடைந்த மனிதனைக் குனிந்து கட்டித் தழுவுவது மிகவும் கடினமான நோன்பாகும் மற்றும் மிகக் கடினமான பிறரன்புச் செயலாகும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

துன்புறும் அல்லது காயமடைந்துள்ள நம் சகோதர சகோதரிகளின் சதையைத் தொடுவதற்கு நாம் வெட்கப்படுகின்றோமா? என்று நம்மையே கேட்டுப் பார்ப்போம். நமது விசுவாச வாழ்வு பிறரன்பு வாழ்வோடு நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தாத கிறிஸ்தவர்கள் வெளிவேடக்காரர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் வாழ்விலும் பிறரன்பின் முக்கியத்துவம், பங்கு குறித்த சிந்தனைகள் இருக்க வேண்டும். இதயத்தில் எல்லாவித பிறரன்பு உணர்வும் இன்றி வெளியில் நன்றாகத் தோற்றமளிக்கும் மக்கள் கூட்டம் கிறிஸ்தவம் அல்ல. மாறாகத் துன்புறுவோர் அனைவர் முன்னிலையிலும் எவ்வித வேறுபாடும் எவ்வித வெட்கமுமின்றி குனிந்து செயல்பட்ட இயேசுவை வெளிப்படுத்துவதே கிறிஸ்தவம்.

காயமடைந்த மனிதருக்கு குனிந்து உதவிசெய்த நல்ல சமாரியன் போன்ற நன்மைத்தனத்தின் தியாகமே மிக்க கடினமான நோன்பு மற்றும் பிறரன்புச் செயலாகும். நாம் தர்மம் கொடுக்கும்போதும் காசு போடும்போதும் ஏழையின் அல்லது தர்மம் எடுப்பவரின் கரத்தைத் தொடாமல் இருக்கின்றோமா? போன்ற கேள்விகளை எழுப்பி சிந்தியுங்கள். நம் சகோதர சகோதரிகளிடம் எவ்விதம் நடந்து கொள்கின்றோமோ அதை வைத்தே நாம் நீதித் தீர்ப்பிடப்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# கத்தோலிக்கர்களுக்கு முயல்கள் போன்று இனம்பெருக்க வேண்டிய தேவையில்லை

## - திருத்தந்தை -

சிறந்த கத்தோலிக்கர்களுக்கு முயல்கள் போன்று இனம்பெருக்க வேண்டிய தேவையில்லை எனத் தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ், அவர்கள் அதற்குப் பதிலாக பெற்றோருக்குரிய பொறுப்பைச் செயற்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டிற்கான தனது திருப்பயணத்தை நிறைவுசெய்துகொண்டு விமானத்தில் உரோமுக்குத் திரும்புகையில் ஊடகவியலாளர்களுடன் உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


திருச்சபை செயற்கைக் கருகலைப்புக்குத் தடைவிதித்துள்ளதால் தம்மால் பராமரிக்க முடிவதற்கும் அதிகமான பிள்ளைகளைப் பெறும் குடும்பங்களுக்கு திருத்தந்தை என்ன கூறப்போகிறார் என வினவப்பட்டபோதே அவர் மேற்படி எதிர்பார்க்காத பதிலை அளித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் பெற்றோரால் பராமரிக்கமுடியாத நிலையில் கைவிடப்பட்ட முன்னாள் வீதிச்சிறுவர்களை திருத்தந்தை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

செயற்கை இனவிருத்திக் கட்டுப்பாட்டுக்கு உறுதியான எதிர்ப்பை வெளிப்படுத்திய திருத்தந்தை, புதிய உயிரானது புனிதத் திருமண சடங்கின் ஓர் அங்கமாகும் என வலியுறுத்தினார்.

எனினும் சனத்தொகை நிபுணர்கள் குடும்பமொன்றில் 3 பிள்ளைகள் என ஆலோசனை வழங்கியுள்ளனர் என்று அவர் கூறினார்.

சிலர் சிறந்த கத்தோலிக்கர்களாக இருப்பதற்கு தாங்கள் முயல்கள் போன்று இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். ஆனால் அவ்வாறில்லை. பெற்றோர் என்ற பொறுப்பை அவர்கள் ஏற்கவேண்டும், அது தெளிவானது என்று கூறினார்.



ஏழுமுறை அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தைகளைப் பெற்ற பெண்ணொருவரைத் தான் சந்தித்ததாகவும் அந்தப் பெண்ணுக்கு எட்டாவது குழந்தையைக் கருத்தரிப்பது பொறுப்பற்ற செயல் எனத் தான் கூறியதாகவும் அதற்கு அந்தப் பெண், "நான் கடவுளை நம்புகிறேன், பொறுப்புடன் இருப்போம் என்றே எமக்கு கடவுள் குழந்தைகளைக் கொடுக்கிறார்" எனத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.


ஒரு குழந்தை அதனது தாய்க்கும் தந்தைக்கும் ஒரு பொக்கிஷமாகும். வெளி ஸ்தாபனங்கள் எதுவும் குடும்பங்களின்மீது தமது கண்ணோட்டங்களை நடைமுறைப்படுத்தாதிருப்பது மிகவும் அவசியம் என திருத்தந்தை வலியுறுத்தினார்.

குடும்பங்கள் தாம் விரும்பிய அளவில் மட்டுமே குழந்தைகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு கத்தோலிக்க திருச்சபையால் அனுமதிக்கப்பட்ட வழிமுறைகள் பலவற்றை தான் அறிவதாக அவர் தெரிவித்தார்.

# மறையுரைகள் சிறப்பானதாக அமைய மறையுரையாளர்களுக்கு வழிகாட்டிக் கையேடு

ஆலயம் செல்லும் பலர் அன்றையத் திருப்பலியில் தாங்கள் கேட்கும் மறையுரைகளை வைத்தே முழுத் திருப்பலியையும் கணிக்கின்றனர் என்று திருப்பீட அதிகாரி ஒருவர் கூறினார். மறையுரையாளர்களுக்கு வழிகாட்டிக் கையேடு ஒன்றை, பத்திரிகையாளர்களுக்கு வெளியிட்டுப் பேசிய, திருவழிபாட்டுத் திருப்பேராயத் தலைவர் கர்தினால் இராபர்ட் சாரா அவர்கள் இவ்வாறு கூறினார். திருப்பலி நிச்சயமாக மறையுரை அல்ல என்றாலும், இறைவார்த்தையைக் கேட்பதற்கும், ஆண்டவரின் திருவுடல், திரு இரத்த உறவில் ஒன்றிப்பதற்குமான புனிதப் பேருண்மைகளில் பங்குகொள்வதன் நோக்கத்திற்கு ஏற்ற நேரமாக மறையுரையாற்றும் நேரம் உள்ளது என்று கர்தினால் சாரா விளக்கினார்.

மறையுரையானது, புனித நூல்களை, குறிப்பாக, நற்செய்தியை நேரடியாகத் தொடர்புகொண்டதாக அமைந்துள்ளது, அவற்றால் அது ஒளியூட்டப்படுவதாய் அமைய வேண்டுமெனவும், திருப்பணியாளர்களின் பணியின் தரத்தை உயர்த்துவதற்கு இக்கையேடு உதவும் எனவும் அவர் கூறினார். மறையுரை என்பது திருப்பணியாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஒரு திருவழிபாட்டு நிகழ்வு. இவர்கள் தங்கள் சொந்தப் பாணியில் இல்லாமல், திரு அவையின் விசுவாசத்திற்கேற்ப இறைவார்த்தைக்குப் பணிபுரிய அழைப்புப் பெற்றுள்ளனர் என்று கர்தினால் இராபர்ட் சாரா கூறினார்.



தாய்மாரும், பாட்டிமாரும் அடுத்த தலைமுறைகளுக்கு

# விசுவாசத்தை வழங்குகின்றார்கள்

## - திருத்தந்தை -

விசுவாசம் தூய ஆவியாரின் கொடை. இவ்விசுவாசத்தை மற்றவர்களுக்கு வழங்குபவர்கள் முக்கியமாகப் பெண்கள் என ஆயர்களான திமொத்தேயு, தீத்து ஆகிய புனிதர்களின் விழாவான ஜனவரி 26ஆம் திகதி அன்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார். அன்றைய நாள் முதல் வாசகமான புனித பவுல் திமொத்தேயுவுக்கு எழுதிய திருமடலை (2திமொ 1:1-8) மையமாக வைத்து மறையுரையாற்றிய திருத்தந்தை, தாய்மாரும், பாட்டிமாரும் அடுத்த தலைமுறைகளுக்கு விசுவாசத்தை வழங்குகின்றார்கள் என்று கூறினார்.

அன்றைய நாள் காலை வத்திக்கான் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலி மறையுரையில் இவ்வாறு கூறிய திருத்தந்தை, திமெத்தேயு பெற்றுள்ள விசுவாசம் அவரது பாட்டி லோயி, தாய் யூனிக்கி ஆகியோரியிடமிருந்து பெற்ற விசுவாசமாகும் என்றார். விசுவாசம் தூய ஆவியாரின் கொடை. இது ஒரு குடும்பத்தில் பாட்டிமார் மற்றும் தாய்மாரின் நற்பணிகளால் பிறருக்கு வழங்கப்படுகிறது. இதைப் பெண்கள் உணர்ந்திருக்கிறார்களா என இன்று சிந்திப்போம் எனவும் திருத்தந்தை அழைப்புவிடுத்தார்.

# குழந்தை பசியால் அழுதால் இங்கேயே தாய்மார் தாய்ப்பாலைக் கொடுக்கலாம்

## தேவாலயத் திருமுழுக்கு வைபவத்தில் பாப்பரசர்



புதிதாகக் குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மார் தமது பிள்ளைகளுக்குத் தாய்ப்பால் ஊட்ட வேண்டும் எனவும் குழந்தைகள் பசியால் அழுதால் தேவாலயத்திலேயே பாலூட்டலாம் எனவும் பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

வத்திக்கானிலுள்ள சிஸ்டைன் தேவாலயத்தில் 33 பாலகர்களுக்கு ஞானஸ்ஞானம் வழங்கும் வைபவத்தில் கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி அன்று பங்கேற்றபோதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தாய்மாராகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு பால் கொடுக்க வேண்டும். இப்போதுகூட அவர்கள் பசியால் அழுதால் நீங்கள் அவர்களுக்குத் தாய்ப்பால் கொடுக்கலாம். அதற்காக கவலைப்பட வேண்டாம்" என பாப்பரசர் கூறினார்.

மேற்படி நிகழ்வில் வழங்கப்பட்டிருந்த பாப்பரசரது எழுத்து வடிவ போதனையில் 'குழந்தைகளுக்கு பால் கொடுங்கள்' என்ற சொற் பிரயோகமே காணப்பட்டது.

ஆனால், பாப்பரசர் அந்த சொற்பிரயோகத்தை குழந்தைகளுக்கு முலைப்பால் கொடுங்கள் என மாற்றித் தெரிவித்ததுடன், பெண்கள் அதற்குத் தயங்கக்கூடாது என வலியுறுத்தியுள்ளார்.

பாப்பரசர் தாய்மாரை தமது குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்க வலியுறுத்தியமை அங்கிருந்தவர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

ஞானஸ்நான சடங்கின் அங்கமாக பாப்பரசர் ஒவ்வொரு குழந்தைகளதும் பெயரைக்கூறி அவர்களது நெற்றியில் விசேட தங்கநிறக் கிண்ணத்திலிருந்த நீரை ஊற்றினார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித பீற்றர் கனிசியுஸ், சே. ச.

(குரு, மறைவல்லுநர் - (கி.பி. 1521 - 1597)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

ஹொலந்து நாட்டில் 1521ஆம் ஆண்டு நைமேகன் என்ற நகரில் இவர் தோன்றினர். கொலோன் நகரில் பயின்றபின் இயேசு சபையில் சேர்ந்தார். 1546ஆம் ஆண்டு குருத்துவநிலைக்கு உயர்த்தப்பெற்றார். பின்னர் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டார். அங்கு பல ஆண்டுகளாக மக்களின் விசுவாசத்தைக் காக்கவும், உறுதிப்படுத்தவும் உதவியாயிருந்தார். இப்பணியின் பொருட்டுப் பல நூல்கள் எழுதினார். இவர் எழுதிய "மறைக்கல்வி" என்ற நூல் புகழ்மிக்கது. 1597ஆம் ஆண்டு ப்ரைபர்க் நகரில் இவர் இறைவனடி சேர்ந்தார்.

புனித பொனிப்பாஸ் ஜேர்மனியின் முதல் அப்போஸ்தலர் என்றால், இவர் இரண்டாம் அப்போஸ்தலர் ஆவார். 22 வயது நடக்கும்போது முத்திப்பேறுபெற்ற பீற்றர் ∴பேபர் இவர் இனிகோவின் "ஆன்மீகப் பயிற்சிகள்" செய்யப் பெரிதும் உதவினார். ஒரு மாதகாலத் தியானத்தின் முதல் வாரத்திலேயே இயேசு சபையில் சேர முடிவெடுத்தார்.

இவர் ஜேர்மனியில், இங்கோல்ஸ்டாட் பல்கலைக்கழகத்தில் மறைக்கலை கற்றுக்கொடுத்து வந்தார். அப்போது நாட்டை ஆண்டுவந்த அரசி இவரை வியன்னாவின் பேராயராக உயர்த்த முயன்றார். இவரும் இவரின் தலைவர் தூய இஞ்ஞாசியாரும் இதற்கு இணங்கவில்லை. வியன்னாவுக்கு இவர் வந்துசேரும் நாள்வரை (20 ஆண்டுகளாக) ஒருவராகிலும் குருத்துவத்தை நாடவில்லை. இச்சிக்கலை எதிர்கொள்ளவே 'மறைக்கல்வி' என்ற நூலை எழுதினார். இயேசு சபையினர் பலரை நல்ல ஞான நூல்கள் எழுதத் தூண்டினார். "நூல் எழுதும் ஒருவர் 10 பேராசிரியர்களுக்கு நிகராவார்" என்பார். இவரது இறுதி நாட்களைச் சுவிட்சர்லாந்து நாட்டில் செலவழித்தார். அங்கே புகழ்வாய்ந்த ப்ரைபுர்க் பல்கலைக்கழகத்திற்கு அடித்தளமிட்டார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியில், பிரிந்துபோன கிறிஸ்தவர்களிடம் உரையாடல் நடத்தவும், கிறிஸ்தவ ஒற்றுமைக்காகவும், "எங்கும் ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனும்" என்ற நிலை நடைமுறைக்குவரும் நாளுக்காகவும் திருச்சபை மிகுதியாகச் செபிக்கும்படி, நம் திருத்தந்தை அழைப்பு விடுத்துக்கொண்டே இருக்கின்றார். புனித கனிசியுஸ் நாட்களில் அவர் தோற்றுவித்த கல்லூரிக்குப் புரொட்டெஸ்டண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்பி மகிழ்ந்தார்கள் என்பது உண்மை.

இச்சூழலில் கி.பி. 1557இல் வேர்ம்ஸ் என்ற நகரில் கத்தோலிக்க, புரொட்டெஸ்டண்ட் கலந்துரையாடலுக்கு அழைப்புப்பெற்றார். இதில் கலந்துகொள்வதால் எவ்விதப் பயனுமில்லை என்பதை நன்கு புரிந்துவைத்திருந்தார். ஏனெனில் இதற்கு முந்திய இத்தகைய கூட்டங்கள் விழலுக்கு இறைத்த நீரானதை இவர் கண்டிருந்தார். இதன் வழியாக விரிசல் விரிந்ததே தவிர குறையவே இல்லை என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்கா விழாச் சிறப்பிதழ்

# உயிர்த்தெழுவோம்

பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்டதே மனித வாழக்கை. இந்த இடைப்பட்ட காலத்திற்குள் நம்பிக்கையில்லாமலும், பிறருக்கு வழிகாட்டாமலும், பிறரின் தேவைகளை அறிந்து உதவிசெய்ய முன்வராமலும் எதிர்கால வாழ்வைப்பற்றிய தெளிவில்லாமலும் வாழ்ந்துகொண்டிருப்போருக்கும், இவர்கள் போன்றோருக்கும் சரியான வழிகாட்டுதல் தேவை.

இவ்வகையான மனிதர் அனைவருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பு எனும் வரலாற்று நிகழ்வு சரியான வழிகாட்டும் என்றால் மிகையாகாது. வரலாற்று நிகழ்வான (Historical Event) இயேசுவின் உயிர்ப்பு திருச்சட்டத்தையும் இறைவார்த்தையையும் நிறைவேற்றிய நிகழ்வாகும் (Fulfillment Event). வரலாற்று நிகழ்வான இயேசுவின் உயிர்ப்பு கோழைகளாகப் பயந்து ஒளிந்தவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றிய நம்பிக்கை நிகழ்வாகும் (Faith – Event). வரலாற்று நிகழ்வான இயேசுவின் உயிர்ப்பு முறிந்துபோன உறவைச் சரிசெய்து உறவில் நிலைத்து வாழ உதவிடும் புதிப்பிக்கும் நிகழ்வாகும் (Renewal Evant). வரலாற்று நிகழ்வான இயேசுவின் உயிர்ப்பு கடவுள் நம்பிக்கை கொண்டு வாழ்வோருக்கான எதிர்கால நம்பிக்கையூட்டும் நிகழ்வாகும் (Eschatological – Event). வரலாற்று நிகழ்வான இயேசுவின் உயிர்ப்பு வீழ்ந்துவிட்டதாக எண்ணப்பட்ட உண்மையை, நீதியை நிலைநாட்டி அறநெறி மதிப்பீடுகளைத் தூக்கி நிறுத்திப் புதிப்பிக்கும் அறநெறி நிகழ்வாகும் (Moral Values – Restoring). வரலாற்று நிகழ்வான இயேசுவின் உயிர்ப்பு வாழ்க்கை நிகழ்காலத்தோடு முடிவதில்லை என்று கற்றுத்தந்த, இவ்வுலக வாழ்வையும் கடந்து பயணிக்கக் கற்றுத்தருவதோடு முழு மனிதனாக வாழத்தூண்டும் முழு மனித மீட்பு நிகழ்வாகும் (Total Liberating Event). அதைவிட மேலாக வரலாற்று நிகழ்வான இயேசுவின் உயிர்ப்பு சீடர்களுக்கு நம்பிக்கையூட்டி மூன்றாண்டு இயேசுவிடம் இருந்து பெற்ற பயிற்சியைப் பிறருக்கு மீட்புத்தரும் வகையில் பயன்படுத்தத் தூண்டும் நற்செய்தி அறிவிப்புக்கான தூண்டுதல் தந்த நிகழ்வாகும் (Proclamative Inspiring Event).

### உயிர்ப்பு – ஒரு வரலாற்று நிகழ்வு

தொடக்ககாலத் திருச்சபை கிறிஸ்துவின் - நிகழ்வை வரலாற்று நிகழ்வாகக் கண்டது (Historical Event). அந்நிகழ்வை மையப்படுத்திய நற்செய்தியையே பறைசாற்றியும் வந்தது. இயேசுவின் பாடுகளோடு தொடர்புடைய உயிர்த்தெழுதல் என்னும் வரலாற்று நிகழ்வு சீடர்களின் வாழ்விலும், அவரைச் சாவுக்குக் கையளித்தவர்கள் வாழ்விலும், அவரைக் கொலை செய்வதற்கு காரணமானவர்கள் வாழ்விலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதைப் பற்றிய செய்திகளை நற்செய்திகளிலிருந்தும் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்தும் திருமடல்களிலிருந்தும் பல்வேறு விவிலிய அறிஞர்களின் கருத்துக்களிலிருந்தும் நாம் புரிந்துகொள்ளலாம்.

### நற்செய்தியாளர்கள்

நற்செய்தியாளர்கள் இயேசுவின் வாழ்வில் மூன்றாண்டுகாலப் பணிகளை மட்டும் விவரிக்கவில்லை. ஒத்தமை நற்செய்தியாளர்கள் எனப்படும் மத்தேயும் லூக்காவும் இயேசுவின் பிறப்பை ஒட்டிய அவரின் குழந்தைப் பருவத்தைப்பற்றி சில செய்திகளை விவரிக்கின்றனர். இதைத்தவிர ஒத்தமை நற்செய்தியாளர்களும் யோவான் நற்செய்தியாளரும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்புப் பற்றியும் எழுதியுள்ளனர்.

ஒத்தமை நற்செய்தியாளர்களும் யோவானும் இயேசுவின் உயிர்ப்பை ஒட்டிய பல நிகழ்ச்சிகளை விவரிக்கின்றனர். வாரத்தின் முதல் நாளில் உயிர்ப்பு எனும் வரலாற்று நிகழ்வு நடந்ததாக நான்கு நற்செய்தியாளர்களும் விவரிக்கின்றனர் (மத் 28:1, மாற் 16:2, யோவா 20:1). யூதர்களுடைய் வாரத்தின் முதல் நாள் என்பது கிறிஸ்தவர்களுக்கு ஞாயிறாக மாறியது. இந்த ஞாயிற்றுக்கிழமை இயேசுவின் உயிர்ப்பு நாளாக மாறி, கிறிஸ்தவர்களுடைய கடன் நாளாக மாறியுள்ளது.

### மத்தேயு நற்செய்தியில்

மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் விண்ணகத்தில் இருந்து வந்த தூதரின் காட்சியை முதலில் காண்பதாகவும் அவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சான்றுபகர்வதாகவும் மத்தேயு விவரிக்கின்றார் (மத் 28:2-7). அதனைத் தொடர்ந்து இயேசுவே அவர்களை எதிர்கொண்டு காட்சிகொடுக்கிறார் (மத் 28:8-10). வானதூதரும் உயிர்த்த இயேசுவும் சீடர்கள் கலிலேயாவுக்குப் போவதற்கு அவர்கள் மூலம் செய்தியை வழங்கினர். இதன் பின்னர் என்ன நடந்தது என்றோ, பெண்கள் சீடர்களிடம் போய் கலிலேயேவிற்குப் போகச் சொன்னார்களா என்றோ எதைப்பற்றியும் மத்தேயு விவரிக்கவில்லை.

ஆனால் வரலாற்று நிகழ்வான உயிர்ப்புக்கு எதிராக இயேசுவைக் கொலைசெய்யக் காரணமானவர்களின் சதித்திட்டத்தைப்பற்றி மத்தேயு விவரிக்கின்றார் (மத் 28:11-15). இச்சதித்திட்டம் மத்தேயு தன்னுடைய நற்செய்தியை எழுதிய காலத்திலும் இருந்ததாகக் குறிப்பிடுகிறார் (மத் 28:15). கலிலேயாவில் இயேசு தன்னுடைய பதினொரு சீடர்களுக்கும் வழங்கிய உயிர்த்தெழுதல் காட்சியை மத்தேயு தன் நற்செய்தியின் இறுதியில் வழங்குகிறார் (மத். 28: 16 - 20). இந்த வரலாற்று நிகழ்வு சீடருக்கான நற்செய்தி அறிவிப்புக்கான கட்டளையைத் தந்த உயிர்த்தெழுதல் அனுபவமாக அமைந்துள்ளது (Proclamative Inspiring Event). "எல்லா மக்களினத்தாரையும் சீடராக்க" துண்டுதல் தரும் நிகழ்ச்சியாக



இந்த உயிர்த்தெழுதல் காட்சி அமைகின்றது (மத் 28:19). அதைவிட மேலாக இயேசுவின் உடனிருப்பை உறுதிச்செய்யும் நிகழ்ச்சியாகவும் இயேசுவின் உயிர்த்தெழுதல் காட்சியானது அமைந்துள்ளது. இவ்வாறு மத்தேயு இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்ச்சியை வரலாற்று நிகழ்வாகக் (Historical Event) காட்டுவதுடன், சாட்சியத்திற்குத் தூண்டும் நிகழ்வாகவும் (Witness Bearing Event), நற்செய்தி அறிவிப்புக் கட்டளையைத் தந்த நிகழ்வாகவும் (Proclamative Insipring Event) இயேசுவின் தொடர் உடனிருப்பை உறுதிசெய்யும் நிகழ்வாகவும் மத்தேயு எடுத்தியம்புகிறார்.

### மாற்கு நற்செய்தியாளர்

மாற்கு நற்செய்தியாளரின் உயிர்ப்புக் காட்சி விவரிப்பு சற்றேறக்குறைய மத்தேயுவை ஒட்டியுள்ளது (மாற் 16:1-8). அதாவது வெறுமையான கல்லறை, வானதூதர் காட்சி, வானதூதரின் சாட்சி, அவர் தந்த செய்தி ஆகியவை இடம்பெறுகின்றன.

மாற்கு பெண்களில் மூன்றாவது நபராக சலோமியையும் குறிப்பிடுகிறார். ஆனால் இயேசு தந்த உயிர்ப்புக் காட்சியை மாற்கு விவரிக்கவில்லை. மாற் 16:1-8யைத் தொடர்ந்து வரும் பகுதி பிற்சேர்க்கை என்பது பல அறிஞர்களின் கருத்து. இப்பகுதியில் இயேசு மகதலா மரியாவுக்குக் கொடுத்த காட்சிபற்றியும், பெண்ணாகிய அவரின் சாட்சியத்தை சீடர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் வாசிக்கிறோம். அதேபோன்று லூக்கா நற்செய்தியாளர் தந்த எம்மாவு – உயிர்ப்புக் காட்சியையும் ஓரிரு வரிகளில் விவரிக்கிறார். பின்னர் இயேசு பதினொருவருக்கும் காட்சி தந்து அவர்களின் நம்பிக்கையின்மையைக் கடிந்துகொள்வதாகக் குறிப்பிடுகிறார் (மாற் 16:14). அதன் பின்னர் நற்செய்தி அறிவிப்புக்கான கட்டளை தந்ததைப்பற்றியும் இயேசுக் கிறிஸ்து விண்ணேற்பு அடைந்ததைப் பற்றியும், சீடர்கள் உலகமெங்கும் சென்று நற்செய்தி அறிவிப்பதையும் இரத்தினச் சுருக்கமாக எழுதியுள்ளார்.

### லூக்கா நற்செய்தியாளர்

லூக்கா நான்கு 'உயிர்ப்பு நிகழ்ச்சிகளை' விவரிக்கிறார். நான்கும் உயிர்ப்பின் நாளில் நடைபெறுவதுபோன்று நமக்குத் தோன்றுகின்றது. முதல் நிகழ்ச்சி பெண்கள் வெறுமையாகக் கல்லறையைக் கண்டதையும், வானதூதர் இருவர் தோன்றித் தந்த அறிவுரையையும், அவர்களின் செய்தியைக் கேட்டு பேதுரு கல்லறையைக் காண ஓடியதையும் விவரிக்கிறார் (லூக் 24:1-12). மூன்று பெண்களைக் குறிப்பிடுவதுடன் அவர்களுடன் வேறு சில பெண்கள் இருந்ததாகவும் காட்டுகிறார். எம்மாவு சீடர்களுக்கு இயேசு தந்த காட்சியை நீளமாக விவரிக்கிறார் (லூக் 24:13-35). அதேபோன்று உயிர்த்த ஆண்டவர் சீமோனுக்குக் காட்சி கொடுத்ததாகவும் சீடர்கள் மத்தியில் பேசிக்கொண்டதையும் குறிப்பிடுகிறார் (லூக்24:34). இதன் பின்னர் பதினொரு திருத்தூதர்களுக்கும், அவர்களுடன் இருந்த மற்றச் சீடர்களுக்கும் உயிர்த்த ஆண்டவர் காட்சி தந்ததை விவரிக்கிறார் (லூக் 24:36-49).

இந்த நான்கு காட்சிகளைத் தவிர, இயேசுவின் விண்ணேற்பு நிகழ்ச்சியையும் விவரிக்கிறார் (லூக் 24:50-52). இது நாற்பது நாள்கள் கழித்து நடத்திருக்க வேண்டும். லூக்கா விவரிக்கும் காட்சிகள் அனைத்தும் எருசலேமில் நடக்கின்றன. ஆனால் மத்தேயு, மாற்கு விவரிக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் கலிலேயாவில் நடைபெறுகின்றன.

### யோவான் நற்செய்தியாளர்

யோவான் நற்செய்தியாளர் வெறுமையான கல்லறை பற்றி மகதலா மரியா பேதுருவிடமும் யோவானிடமும் கூறியது பற்றியும் அவர்கள் இருவரும் கல்லறையைச் சந்தித்ததைப்பற்றியும் (யோவா 20:1-10) கூறுகிறார். அதனைத் தொடர்ந்து இயேசு மகதலாவுக்குத் தந்த காட்சி அழகாக விவரிக்கப்பட்டுள்ளது (யோவா 20:11-18). இதன் பின்னர் வாரத்தின் முதல் நாளில் (அடுத்த வாரம்) இயேசு சீடர்களுக்குத் தந்த காட்சியை விவரிக்கிறார் (யோவா 20:19-23). அதன் பின்னர் ஒரு வாரம் கழித்து தோமாவுக்காகத் தேன்றிய காட்சி (யோவா 20:24-29) விவரிக்கப்பட்டுள்ளது. இக்காட்சிகள் அனைத்தும் எருசலேமில் நடைபெற்றதாக யோவான் விவரிக்கின்றார். அதன் பிற்சேர்க்கையாக உள்ள உயிர்ப்புக் காட்சி கலிலேயா கடற்கரையில் நடைபெறுவதாக விவரிக்கிறார் (யோவா 21:1-25).

ஆகவே, நற்செய்தியாளர்கள் இயேசுவின் உயிர்ப்பையும் அதை ஒட்டிய காட்சிகளையும் நமக்கு விவரிக்கையில் அடிப்படையான சில செய்திகளை முன்மொழிவதை நாம் அறியவேண்டும்.

அதாவது, இயேசுவின் உயிர்ப்பு,

(1) ஒரு வரலாற்று நிகழ்வு.
(2) காலியான கல்லறையும், பல்வேறு காட்சிகளும் இதற்குச் சான்று.
(3) திருச்சட்டத்தையும் இறைவாக்கையும் நிறைவேற்றிய இறைத்திட்டம்.
(4) எளிதில் நம்ப முடியாதது, ஆனால் வாழ்வில் மாற்றம் ஏற்படுத்திய நிகழ்ச்சி.
(5) இயேசுவின் மீட்புப் பணியைத் தொடர உந்துதல் தந்த நிகழ்ச்சி.
(6) சீடர்கள் பணிவாழ்வில் நிலைத்திருக்க இயேசுவின் உடனிருப்பை உறுதிசெய்த நிகழ்ச்சி.

### திருத்தூதர் பணிகள்

இயேசுவைப்பற்றி அறிவிக்கப்பட்ட முதல் நற்செய்தி ஒன்று உண்டு. அது இயேசுவின் மரணம் - உயிர்ப்பு பற்றிய கிறிஸ்து – நிகழ்வு (Christ event) என்று திருத்தூதர் பணிகள் நூல் விவரிக்கின்றது. ஆவியின் அருள்பொழிவைப் பெற்ற திருத்தூதர்கள் பல்வேறு மொழிகளில் பேசினர் (திப 2:1-4). இவர்கள் அனைவரும் இனிய மதுவை நிரம்பக் குடித்ததால் இப்படி வெவ்வேறு மொழிகளில் பேசுகின்றனர் என்று மக்கள் கிண்டல் செய்தனர். அவர்களின் கிண்டலுக்குப் பதில்தரும் வகையில் பேதுருவின் முதல் நற்செய்தி அறிவிப்பு உரை அமைந்திருந்தது (திப 2:14-37). அந்த உரையில் அனைத்து நிகழ்வுகளும் இறைவாக்கு நிறைவேறுவதற்காக நடைபெறுகின்றன என்று தெளிவுபடுத்தினார். அதன் மையச் செய்தியாக இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்புப் பற்றி பேதுரு குறிப்பிடுகின்றார்.

இயேசுவை "மரண வேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார்" (திபா 2:24) கடவுள். தாவீதே "கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னறிந்து (திபா 2:31) இறைவாக்கு உரைத்துள்ளார் "கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார் (திபா 2:23, திபா 5:30, திபா 13:34). இவ்வாறு பேதுரு தன் உரையில் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். பேதுருவின் உரையைக் கேட்டவர்கள் இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சியாக மாறுகிறார்கள். பாஸ்காத் திருவிழாவின்போது சிலுவையில் அறையுண்டு இறந்த இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வை பலரும் வரலாற்று நிகழ்வாகக் காண்கின்றனர். இந்த வரலாற்று நிகழ்வுக்கு ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் சாட்சிகள் (திபா 2:23) என்பதே பேதுருவின் கூற்று. இந்த முதல் நற்செய்தி அறிவிப்பு பலரையும் இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கையைப் பெறுவதற்குத் தூண்டுதலாக அமைவதுடன் தூய ஆவியினால் திருமுழுக்குப் பெறவும் வழிவகுத்தது (திபா 2:39-14).

### அறிஞர்களின் கண்ணோட்டம்

இயேசுவைப்பற்றிய முதல் நற்செய்தி எனப்படும் "கிறிஸ்து – நிகழ்வு" நற்செய்தியின் மற்றப் பகுதிகளுக்குத் தூண்டுதலாக அமைந்திருந்தது என்று பல விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர். முதல் முதலில் எழுதப்பட்ட நற்செய்திப் பகுதி இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைப்பற்றிய பகுதியாகவே இருக்க வேண்டும் என்று பலரும் கருதுகின்றனர். (சி. இராபர்ட் டன்னகில், சார்லஸ் டெய்லர், C.H. டால்பார்ட், J. ஹென்றி காட்பெரி, மார்க் கோலர் ரிச், ஹான்ஸ் கொன்சல்டன், J. G. டேவிஸ் ஜோயல் கிரீன், மார்டின் ஹென்கல்...).

இப்பகுதிகளிலிருந்துதான் நற்செய்தியாளர்கள் மற்றப் பகுதிகளை எழுதத் தூண்டுதல் பெற்றிருக்க வேண்டும். அதாவது, உயிர்த்தெழுந்த இயேசு ஏன் பாடுகளைப் படவேண்டும்? என்று கேட்டபோது அதற்கான காரணங்களை விவரிக்க இயேசுவின் பணிவாழ்வை விவரித்தனர். பின்னர் காலப்போக்கில் நம்பிக்கை உடையோர், இயேசுவின் பிறப்பு, குழந்தைப்பருவம் பற்றிய கேள்விகளை எழுப்பியபோது இயேசுவின் குழந்தைப் பருவ நற்செய்தியை எழுதினர்.

அதாவது, நற்செய்தியாளர்கள் இயேசுவின் பிறப்பை, வாழ்வை, வரலாற்று நிகழ்வாக எடுத்தியம்பினர். அதற்கு மாற்கு 'நற்செய்தி' என்று (மாற் 1:1) பெயரிட்டார். லூக்காவும் பலரும் எழுதியதை 'வரலாறு' (லூக் 1:1-14) என்றே குறிப்பிட்டுத் தானும் ஒழுங்குபடுத்திய வரலாறு ஒன்றைத் தருவதாக விவரிக்கின்றார். இதனடிப்படையில் நற்செய்தியாளர்களின் கருத்துப்படி இயேசுவின் பிறப்பு முதல் உயிர்ப்பு மற்றும் விண்ணேற்பு வரை (லூக் 1:5-24:53) வரலாற்று நிகழ்வாகவே காணவேண்டும்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நகரை அழகுபடுத்த பிறிச்சிங் லங்காவின் பங்களிப்பு

## (Bridging Lanka Gives a helping hand to develop Mannar town)







மன்னார் "பிறிச்சிங் லங்கா" (Bridging Lanka ) கடந்த நான்கு ஆண்டுகளாக மன்னார் நகரசபையின் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவிபுரிந்துவருகின்றது. இதன் செயற்பாடுகள் "மன்னாரின் மறுமலர்ச்சி 2022" திட்டத்தின் ஊடாக, அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், நகரசபை போன்றோரின் ஆலோசனைகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக 1998ன்பின் மன்னார் நகர நில அமைப்பு வரைபடம் புதுப்பிக்கப்படவில்லை. இதனை பிறிச்சிங் லங்கா, மொறட்டுவ பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கொழும்பு நகர அபிவிருத்திச் சபை (UDA) போன்றவர்களின் உதவியுடன் ஆறு மாதத்தில் ஆய்வுசெய்து, 2013ம் ஆண்டின் தரைத்தோற்ற அமைப்பின்படி புதிய நிலஅளவு வரைபடத்தை கூகுல் இணையதளத்தில் தரவேற்றம் செய்துள்ளது. இதில் பழைய, புதிய கட்டிடங்கள், பாதைகள், குளங்கள், தரிசுநிலங்கள், வணக்கஸ்தலங்கள், அரச, பொதுக் கட்டிடங்கள் போன்றன துல்லியமாக அடையாளமிடப்பட்டுள்ளன.

இவை அரச அதிகாரிகளுக்கும் குறிப்பாக மன்னார் நகரசபைக்கும் (வரிஅறவிடல் தொடர்பான விடயங்களுக்கும்) புதிய நவீன கட்டிடங்கள் அமைப்பதற்கும், குளங்களைப் புனரமைப்பதற்கும், புதிய வீடமைப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கும் பெரிதும் பிரயோசனமாக அமையும். 2013 வரைபடம் இலங்கையில் ஒருசில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது இதில் மன்னாரும் ஒன்றாகும்.

அரச அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க UNOPS ஸ்தாபனமும், பிறிச்சிங் லங்காவும், நகரசபையும் இணைந்து 1945ஆம் இனங்காணப்பட்ட மன்னார் நகரசபைக்குரிய 36 குளங்களை அண்மையில் ஆய்வுசெய்ததோடு, அதன் பின்னர் 2015ம் ஆண்டு 26 குளங்களை இனங்கண்டுள்ளன. இக்குளங்கள் கடந்த 30 வருடங்களாக யாரும் சொந்தம் பாராட்டாது காணப்பட்டதுடன், தற்போது 24 குளங்களை நகரசபைக்கும் 2 குளங்களை கமநலசேவைத் திணைக்களத்திற்கும் மன்னார் பிரதேச செயலாளர் மூலமாக கையளிப்பதற்கு அரச அதிபர் முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றார்.

மன்னார் நகரசபை இக்குளங்களுக்கு வரைபடம் வரைவதுடன் எல்லைகளை அமைத்து தற்போது இருக்கும் தரைத்தோற்றத்துடன் புனரமைப்புச் செய்யவேண்டும் எனவும் அடாத்தாகப் பிடித்தவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுத்து, குளக்காணிகளை மீட்டு குளங்களைப் பேணவேண்டும் எனவும் வரியிறுப்பாளர்கள் விரும்புகின்றனர்.

மன்னாரில் உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்காக உல்லாசப் பயணிகள் விடுதி உரிமையாளர்கள் அமைப்பும் (Mannar Guest House Association) மன்னார் மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் விவசாய சம்மேளனமும் (Mannar District Chamber of Commerce), மன்னார் நகரசபையும், பிறிச்சிங் லங்காவும் இணைந்து கீரிக் கடற்கரையில் இரண்டு ஏக்கர் கடற்கரைக் காணியைத் துப்பரவு செய்து, எல்லைகள் இட்டு, பாதுகாப்பான சுகாதாரமுள்ள தூய கடற்குளியலுக்கு ஏற்ற இடமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

மேலும் இவ்விடத்தில் ஆடைகள் மாற்றவும், மலசலகூடம், நன்னீரில் குளிப்பதற்கும், சிற்றுண்டி வசதிகளும் கொண்ட ஓர் கட்டிடத்தை அமைக்க உல்லாசப் பயணிகள் விடுதி உரிமையாளர்கள் அமைப்பு முன்வந்துள்ளது. அத்துடன் மீண்டும் தலைமன்னாரிலிருந்து ஆதாம் பாலம், மற்றும் தீடைகளைப் பார்வையிட உல்லாசப் பயணப் படகுசேவையும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

உல்லாசப் பயணிகளைக் கவரும் முகமாக மன்னாரில் உள்ள 18 உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதிகளின் விபரக்கோவை, மன்னாரில் உள்ள முக்கிய 26 சுற்றுலாத்தலங்கள், போக்குவரத்து வாகன விபரங்கள் அவற்றின் கட்டணங்கள், விடுதிகளில் வழங்கப்படும் உணவு விபரங்கள், உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்வதற்கான ஆங்கிலம் பேசக்கூடிய வழிகாட்டிகள் (Guides) போன்றவற்றின் விபரங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் (Update) தகவல் கையேடுகள் தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேலும் இரண்டு வீதிச் சுற்றுவட்டங்களை (Round about) அமைப்பதற்கு நகரசபையிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதில் மன்னார் விளையாட்டரங்குச் சந்தியில் பழைய நீர்த்தாங்கி உடைத்து அகற்றப்பட்டபின்னர், பொது விளையாட்டரங்கின் மூலையில் உள்ள மதிலை 25அடி உள்ளொடுப்பதன் மூலம் நவீன சுற்றுவட்டம் ஒன்றை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உதவியுடன் அமைக்கலாம் எனவும், அடுத்த சுற்றுவட்டம் தொலைத்தொடர்பு நிலையச் சந்தியில் அமைப்பதன் மூலம் புகையிரத நிலையப் பாதையை நவீனமயப்படுத்தலாம் எனவும் வரியிறுப்பாளர்கள் விரும்புகின்றனர்.

**மன்னார் 'பிறிச்சிங் லங்கா' (Bridging Lanka ) கடந்த நான்கு ஆண்டுகளாக மன்னார் நகரசபையின் நகர அபிவிருத்தி திட்டங்களுக்கு உதவிபுரிந்து வருகின்றது. இதன் செயற்பாடுகள் 'மன்னாரின் மறுமலர்ச்சி 2022' திட்டத்தின் ஊடாக, அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், நகரசபை போன்றோரின் ஆலோசனைகளுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

மேலும் 2013ல் நகர வரியிறுப்பாளர்கள் 500க்கும் மேற்பட்டவர்கள், அரச, அரசசார்பற்ற ஸ்தாபன உத்தியோகத்தர்கள், நகர சபை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கொழும்பு நகர அபிவிருத்தி சபை, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணைந்து நகர அபிவிருத்தி தொடர்பாகத் திட்டங்கள் தீட்டி, அதைப் புத்தகவடிவில் வடிவமைத்து மக்கள் நலன்கருதி அமுல்படுத்துவதற்காக அரச அதிபர், மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் நகரசபை, கொழும்பு நகர அபிவிருத்தி சபை, உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு 2014 மாசி மாதத்தில் வழங்கியுள்ளார்கள். அவற்றை அமுல்படுத்துவதற்கு நகர வரியிறுப்பாளர்கள், மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் உரிய திணைக்களங்களுக்கு உந்துதல் வழங்குமாறு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மன்னார் நகர எல்லைக்குட்பட்ட சாந்திபுரக் கிராமத்தில் வருடாந்த மழைக் காலங்களில் வெள்ளம் ஏற்பட்டு மக்கள் துன்புறுவதை அவதானித்த முன்னைய பிரதேச செயலாளர் பிறிச்சிங் லங்காவின் உதவியைக் கோரியபோது, வெளிநாட்டு, உள்நாட்டு திட்ட ஆய்வாளர்கள் மூலமும், UNOPS அனுசரணையுடனும், பிரதேச செயலாளர், அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் (DMC) போன்றவர்களின் உதவியுடனும் மூன்று வருட புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு அரச அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளது.

சாந்திபுரம் பாடசாலை ஆசிரியர்கள், கல்விகற்கும் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மழைக்காலங்களில் இரண்டு மாதங்கள் வெள்ளத்திற்குள் நடந்து மலசலகூடம் செல்வதைத் தவிர்ப்பதற்காக, 250 மீற்றர் நடைபாதை ஒன்றை சாந்திபுரம் RDS, WRDS உதவியுடன் பிறிச்சிங் லங்கா அமைத்துக்கொடுத்துள்ளது.

சாந்திபுரம் இளைஞர் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க விளையாட்டு மைதானத்தைச் சுற்றி மரங்கள் நடுவதற்கும், பார்வையாளர்கள் படிக்கட்டு அமைப்பதற்கும் பிறிச்சிங் லங்கா நடவடிக்கை எடுத்துவருகின்றது.

சாந்திபுரம் யுவதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஓய்வுநேரங்களில் விளையாடுவதற்காக பட்மின்ரன் கோட் (Badminton Court) அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சாந்திபுரம் சிறுவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அக்கிராமத்தில் நவீன சிறுவர் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு நகரசபையின் உதவியுடன் பிறிச்சிங் லங்கா நடவடிக்கை எடுத்துவருகின்றது.

சாந்திபுரம், புகையிரத நிலைய மக்களின் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக இன்னும் சில நாட்களில் மன்னாருக்கும், தலைமன்னாருக்கும் புகையிரதசேவை ஆரம்பிக்கப்பட்டபின் பல வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கு நகர சபை, பிரதேச செயலாளரின் உதவியுடன், 25 முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள், பேருந்து நிலையம், கடைத்தொகுதிகள், விடுதிகள் போன்றவற்றை அமைக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. புகையிரதத்திற்குள்ளும், புகையிரத நிலையத்திலும், சிற்றுண்டிகள் விற்பதற்கும், பொதிகள் இறக்கி ஏற்றுவதற்கு கூலித் தொழிலாளர்களை (Porter) ஏற்படுத்துவதற்கும், இந்தியாவில் இருந்துவரும் உல்லாசப் பிரயாணிகளை வழிகாட்டுவதற்குரிய வழிகாட்டிகளை (Guides) அமர்த்துவதற்கும் ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மன்னார் பொதுமக்கள் இவற்றை நடைமுறைப்படுத்தத் தவறும்பட்சத்தில் வெளியார் இவ்வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

மேலும் தலைமன்னார் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டபின் இந்திய இலங்கைக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. இதன் மூலம் ஆசிய வீதி (Asian Highway) என அழைக்கப்படும் இந்தியா, தனுஸ்கோடி, பாம்பன் பாலம், தலைமன்னார் இறங்குதுறை, சாந்திபுரம், மன்னார், கொழும்பு பாதைகள் பிரசித்தமடைய வாய்ப்புகள் உள்ளன. இதனைக் கருத்தில்கொண்டு சாந்திபுர, புகையிரத நிலைய மக்களுக்கு போதிய பயிற்சிகளை அளிப்பதன் மூலம் சாந்திபுர நுழைவாயிலில் மரங்களை நட்டும், வீதி விளக்குகளை அமைத்தும், பாதைகளை அகலப்படுத்தி செப்பனிட்டும், குப்பை கூழங்களை அகற்றியும், கட்டாக்காலி மிருகங்களையும், வீதிகளில் மீன்பிடிவலைகளை காயப்போடுவதைத் தடைசெய்தும் நுழைவாயிலை அழகுபடுத்த முடியும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மன்னாரில் கட்டாக்காலிகளாகத் திரியும் 500க்கும் மேற்பட்ட கழுதைகளுக்கும், வீதி நாய்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கும் முகமாக கருத்தடைசெய்தல், உணவளித்தல், காயங்களைக் குணப்படுத்தல், மிருகங்கள் மூலமாக மனநலம் பாதிப்புற்றோருக்கான சிகிச்சை அளித்தல் போன்றவற்றிற்காக இந்திய, ஐக்கியராட்சியக் கழுதைகள் நலன் பேணும் சங்கங்களுடன் (Donkey Sanctuary India & UK) இணைந்து பிறிச்சிங் லங்கா கடமையாற்றி வருகின்றது. இதில் ஓர் அங்கமாக முருங்கனில் அமைந்துள்ள உளநல ஆற்றுப் பிரிவில் (MARDAP) சிகிச்சையளிப்பதற்காக சிகிச்சை நிலையம் ஒன்றை ஆசியாவில் முதல் தடவையாக மன்னாரில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் மன்னார் புதுக்குடியிருப்பில் கழுதைகள் சரணாலயம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் கடந்த ஒரு வருடமாக மன்னார் மரக்கறிச் சந்தையில் தேவையற்ற மரக்கறிக் கழிவுகளையும், தலைமன்னார் வீதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் (Garment Factory) உள்ள தேவையற்ற உணவுகளையும் நாளாந்தம் சேகரித்து கட்டாக்காலிக் கழுதைகளுக்கு உணவூட்டுவதன் மூலம் மிருக பராமரிப்பு காருண்ய சேவையையும் பிறிச்சிங் லங்கா ஆற்றிவருகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட - இனங்காணப்பட்ட விதைவைப் பெண்களின் மறுவாழ்விற்காக மாந்தைப் பிரதேச செயலாளரின் திட்டத்திற்கு அமைய பாப்பாமோட்டைக் கிராமத்தில் அரிசி, சிறுதானியங்கள் அரைக்கும் ஆலை ஒன்றை 2014ம் ஆண்டில் அமைத்துக் கொடுத்ததன் மூலம் எட்டுத் தாய்மார்கள் மாதாந்த வருமானம் பெற்றுவருகின்றார்கள். அத்துடன் அடம்பன், மடு பிரதேசங்களில் "மகளிர் மன்னார் உணவகம்," மூலம் காலை, மதிய, இரவு உணவுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதில் பத்துத் தாய்மார்கள் வருமானம் பெற்றுவருகின்றனர். குறிப்பாக அண்மையில் மடுத் திருப்பதிக்கு விஜயம் செய்த திருத்தந்தையின் வருகையின்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட உணவுப் பொதிகளை விற்பனை செய்தமை குறிப்பிடத்தக்கது.

கல்வி உதவித் திட்டத்தின்கீழ் 2013ம் ஆண்டில் இளைஞர்களினால் ஆரம்பிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு (I T P) நிதி உதவி வழங்கியதன் மூலமும், விடத்தல்தீவு, மன்னார், உயிலங்குளம் போன்ற இடங்களில் கணணிப் பயிற்சிகளை நடத்தியதன் மூலமும் பல இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற்றுக் கொடுத்துள்ளது.

அத்துடன் மன்னார் மூர் வீதியில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் விவசாய சம்மேளனக் காரியாலயத்தில் "ஆங்கிலம் கற்போர் வாரீர்" திட்டத்தின்கீழ் நாளாந்தம் பிற்பகலில் 4.00 – 5.00 மணிவரை இலவசமாக ஆங்கிலப் பேச்சுத் திறன், விளையாட்டுக்கள், வாசிகசாலை போன்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக இதில் அப்பகுதியிலுள்ள முஸ்லீம், இந்து, சிறார்கள் 25ற்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சேவைகளுக்கு பிறிச்சிங் லங்கா தலைமையின்கீழ் கடமையாற்றுவதற்காக "மன்னார் மறுமலர்ச்சி 2022" நம்பிக்கை நிதிய உறுப்பினர்களாக அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், மதப்பிரதிநிதிகள், கல்விமான்கள் போன்றவர்களைக் கொண்ட நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பணிப்பாளராக திரு.ஜெரமி லியனகேயும், தலைவராக திரு. ஜேம்ஸ் யேசுதாசன் (உப தலைவர், நகர சபை) அவர்களும் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் மக்களின் நலன் கருதி மேற்படி திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கிய அவுஸ்திரேலிய பிறிச்சிங் லங்காவுக்கும், இலங்கை நன்கொடையாளர்களுக்கும் ஆக்கபூர்வமான உதவிகள் நல்கிய அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் பிறிச்சிங் லங்கா சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகவல் :**
**திரு. பீற்றர் சின்கிளயார்**
**தொடர்பு அதிகாரி, பிறிச்சிங் லங்கா, மன்னார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஸ்காவிழாச் சிறப்புப் பொழிவு

# திருச்சபை தந்தையர்களின் பார்வையில் உயிர்த்தெழுதல்

## (உரோமை நகர புனித கிளமெந்து, புனித அகுஸ்தினார்)



உரோமை நகர புனித கிளமெந்து

மனுக்குலத்தின் புரிந்துகொள்ள முடியாத புதிர் மரணம். மனுக்குலத்தின் இயலாமையை முழுமையாக வெளிப்படுத்துவதும் இந்த மரணமே! மரணத்திற்குப்பின் என்ன இருக்கின்றது என்னும் புதிர், இன்றுவரை பிறந்த ஒவ்வொருவரையும் பிரமிக்க வைத்துக்கொண்டே இருக்கின்றது.

இறைமகன் இயேசுவின் சிலுவை மரணமும் அவரது சீடர்களின் உள்ளத்தில் வெறுமையை ஏற்படுத்தியது. ஆனால் இறந்த இயேசுவின் உயிர்ப்பு அவரது சீடர்களின் உள்ளத்தில் இருந்த மரணம் பற்றிய மனநிலையை மாற்றியது. இயேசுவின் உயிர்ப்பினைக் கண்டுணர்ந்து, அனுபவித்த சீடர்கள் அவ்வனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்து மகிழ்ந்தனர். இறப்பிற்குப்பின் உயிர்ப்பும், உயிர்த்த உடலுக்கான வாழ்க்கையும் இருக்கின்றன என்ற உண்மையை இயேசுவின் உயிர்ப்பு இவ்வுலகிற்கு உணர்த்தியது.

இயேசுவின் இந்த உயிர்ப்பினை பல்வேறு கோணங்களில் சந்தித்து, பல்வேறு உதாரணங்களைக்கொண்டு விளக்கிய பெருமை, முதல் எட்டு நூற்றாண்டுகளில் விசவாசிகளை வழிநடத்திய திருச்சபைத் தந்தையர்களைச் சாரும். இவர்களில் இரண்டு தந்தையர்கள் உயிர்த்தெழுதலைப்பற்றி கூறிய கருத்துக்களை இங்கு காண்போம்.

### புனித கிளமெந்துவின் பார்வை

இயேசுவின் இறப்பு - உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருளைக் கண்டுணர்ந்து அனுபவித்த திருத்தூதர்களின் மறைவுக்குப்பின்பு கிறிஸ்தவ மக்களை வழிநடத்திய அப்போஸ்தலிக்கத் திருச்சபைத் தந்தையருள் மிக முக்கியமானவர் **உரோமை நகரத்து புனித கிளமெந்து.**

உண்மையான மறையைத் தேடி அலைந்தவர்களுள் இவரும் ஒருவர். புனித பேதுருவால் ஆயராகத் திருப்பொழிவு பெற்றவர். புனித பவுலுக்கும் மிக நெருக்கமானவர் (பிலி 4:3). உரோமையில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை ஆயர் நிலையிலிருந்து வழிநடத்தியவர் (கிபி 92-101). இவரது ஆயர் திருப்பணிக் காலத்தில் கொரிந்து நகரத் திருச்சபையைத் தலைமை ஏற்று வழிநடத்துவதில் மிகப்பெரிய பிரச்சினை எழுந்தது. அப்பிரச்சினைக்குத் தீர்வுகாண கிளமெந்து அவர்களுக்கு எழுதிய முதல் கடிதத்தில் உயிர்த்தெழுதலைப்பற்றிய போதனையை அவர்களுக்குக் கொடுக்கின்றார்

இக்கடிதம் உயிர்ப்பினைப்பற்றி விளக்குவதற்காக எழுதப்பட்டது அல்ல. மாறாக, குற்றம் புரிந்தவர்கள் உயிர்ப்புக்குப்பின் இருக்கும் நீதித்தீர்ப்பினை மனதில் இருத்தி மனம் மாறவேண்டும் என்பதற்காக எழுதப்பட்டது. கொரிந்து நகர மக்கள் உயிர்ப்பின்மீது சிறிது அவநம்பிக்கை கொண்டிருந்தார்கள். புனித பவுலும் கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதத்தில் 15ஆம் அதிகாரத்தில் அவர்கள் உயிர்ப்பின்மீது முழு நம்பிக்கைகொள்ள வேண்டும் என்று முழுமையாக விளக்குகின்றார். கிளமெந்துவும் தனது முதல் கடிதத்தில் உயிர்த்தெழுதலை மூன்று வகையான உதாரணங்களைக் கொடுத்து விளக்குகின்றார் (24-26).

மானிட உயிர்ப்பின் 'முதற்கனி' இயேசுக் கிறிஸ்துவே. அவரது உயிர்ப்புத்தான் நம் அனைவரது உயிர்ப்பின் அடித்தளம். அவரது உயிர்ப்பு நமது உயிர்ப்பின் முன்னோடி.

இதை உறுதிசெய்யக் கிளமெந்து கொடுக்கும் **முதல் உதாரணம் இயற்கை.** அவரது பார்வையில் இயற்கையின் சில அம்சங்கள் உயிர்த்தெழுதலை நமக்குத் தொடர்ந்து சுட்டிக்காட்டுகின்றன. இரவு – பகல் சுழற்சி முறை தினமும் நமக்கு உயிர்ப்பின் உண்மையை உரைக்கின்றது. இரவு சென்றவுடன் பகல் தானாக வருகின்றது. இதைப் போன்று இறப்பிற்குப்பின் உயிர்ப்பு தானாக கடவுளின் செயல்திட்டத்தில் வரும்.

அது போன்றே காய்ந்துபோன, உயிரற்றதாகக் காட்சியளிக்கக்கூடிய விதை மண்ணில் விதைக்கப்பட்ட ஒருசில நாள்களில் புத்துயிர்பெற்று வீரியமுள்ள செடியாக முழுவதும் மாறுபட்ட தோற்றத்தில் முளைத்து வருகின்றது. அதேபோன்று உயிரற்ற உடலாக இறப்பிற்குப்பின் மண்ணில் விதைக்கப்படுகின்ற (புதைக்கப்பட்ட) மனித உடலும் புத்துயிர்பெற்று இறை அருளினால் ஒருநாள் உயிர்த்தெழும். இவ்வாறு இயற்கை உயிர்ப்பின் உண்மையினை நமக்கு கற்றுக்கொடுப்பதை நாம் உணரவேண்டும்.



புனித அகுஸ்தீனார் (கிபி 354 – 430)

**இரண்டாவது உதாரணத்தில்** கிளமெந்து அரேபிய பாலைவனப் பகுதியில் மிகவும் பிரபல்யமான புனைகதை ஒன்றைப் பயன்படுத்துகின்றார். '஼பினிக்ஸ்' என்னும் வினோதப் பறவை 500 ஆண்டுகால வாழ்க்கைச் சுழற்சியை உடையது. இக்கதையின்படி உலகில் இவ்வினப் பறவையானது ஒன்றே ஒன்று மட்டும் தொடர்ந்து 500 ஆண்டுகள் உயிர்வாழுமாம். 500 ஆண்டுகளின் நிறைவில், தன்னைச்சுற்றி சில வாசனைத் திரவியங்கள் அடங்கிய கலவையைக்கொண்டு கூடுகட்டி (கூட்டுப் புழுவைப் போன்று) அதனுள் மடிந்துவிடுகின்றது. இறந்த இந்தப் பறவையின் சதையிலிருந்து ஒரு புழு உருவாகித் தாய்ப்பறவையின் அழுகும் சதையை உண்டு பெரிதாகி, புதிய பறவையாக கூட்டை உடைத்து வெளிவருகின்றது. கிளமெந்துவின் பார்வையில் இப்பறவையும் தனது வாழ்க்கைச் சுழற்சி மூலம் உயிர்த்தெழுதல் உண்டு என்று நமக்கு உணர்த்துகின்றது. உயிர்த்தெழுதலை விளக்க உரோமை ஆயர் கிளமெந்து அரேபிய புனைக்கதையை பயன்படுத்துவது நமக்கு வியப்பளிக்கின்றது. கிறிஸ்தவம் அல்லாத வேறு பாரம்பரியங்கள்மீது அவர் கொண்டிருந்த திறந்த மனதை, பரந்த மனப்பான்மையை இது நமக்குக் காட்டுகின்றது.

**மூன்றாவது வகையான உதாரணத்தில்** கிளமெந்து விவிலியத்தின் சில பகுதிகளைச் சுட்டிக்காட்டிப் பயன்படுத்துகின்றார். திருப்பாடல்களில் வரும் "இரவின் உறக்கம்", "இறை துணையோடு அதிகாலையில் துயிலெழுதல்" என்னும் கருத்துக்கள் உயிர்ப்பையே சுட்டிக்காட்டுகின்றன என்று மேற்கோள் காட்டுகின்றார். மேலும் தனது துன்பத்தின் உச்சக்கட்டத்திலும் கடவுளின் நீதியை எதிர்பார்த்திருக்கும் யோபுவின் வார்த்தைகளின் உள்ளடக்கம் உடலின் உயிர்ப்பேயாகும் என்று கிளமெந்து வாதாடுகின்றார். (யோபு 19: 26).

இயற்கையின் எதார்த்தங்கள், புனைகதையின் உட்பொருள் மற்றும் விவிலிய வார்த்தைகளின் கருப்பொருள் ஆகிய இம்மூன்று உதாரணங்களின் மூலம் உயிர்ப்பின் உண்மையை விளக்கி, கொரிந்து திருச்சபையின் கலகக்காரர்கள் மனம் திருந்தி இறைவன்மீது நம்பிக்கைவைக்க அழைக்கின்றார். மேலும், உயிர்த்தெழ வைப்பது இறைவல்லமையின் ஒரு பரிமாணம் என்றுகூறி, அவரின் இறுதித் தீர்ப்பைக் கண்முன் கொண்டு நேர்மையான வாழ்க்கை வாழ அழைப்பு விடுக்கின்றார்.

### புனித அகுஸ்தினாரின் பர்வையில்

புனித அகுஸ்தினாரின் பின்னணி நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. தனது 17வது வயதில் சிற்றின்பத்திற்காக ஓர் இளம் பெண்ணோடு தகாத உறவினை 13 ஆண்டுகள் வைத்திருந்து ஓர் ஆண்மகனையும் பெற்றெடுத்தவர். ஆனால் தனது தாய் புனித மொனிக்காவின் இடையறாத செபத்தினால் கிபி. 386இல், புனித பவுலின் வார்த்தைகளை உரோ 13:13-14இல் வாசித்து மனம் திரும்பி, கிபி 387இல் திருமுழுக்குப் பெற்றார். கிபி. 391இல் குருவாகவும், 395இல் ஆயராகவும் அருள்பொழிவு பெற்றார். மனம் திரும்பியபின் தன் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்தவ மறையுண்மைகளை விவரிக்கச் செலவிட்டார். இறப்பிற்குப் பின்வரும் உயிர்ப்பை தனது வாழ்க்கையின் பின்னணியில் சிந்தித்து விவரிக்கின்றார்.

அறியாமையால் பாவத்தில் வீழ்ந்து அவமான வாழ்க்கை வாழ்ந்த அகுஸ்தினார் தனது மனமாற்றத்தை ஒரு உயிர்ப்பாகவே கருதினார். மேலும் பாவம் மரணத்திற்குக் காரணம் என்னும் பவுலின் கூற்றினை (உரோ 6:23) மிகவும் அழுத்தம் திருத்தமாக விவரிக்கின்றார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## கொஞ்சம் சிரிங்க

**ஒருவன்:** என்னுடைய அகராதியில் முடியாது என்கிற வார்த்தையே கிடையாது.
**மற்றவன்:** இப்போது சொல்லி என்ன பிரயோசனம், வாங்கும் போதே பார்த்து வாங்கியிருக்கனும்.

...................

**ஆசிரியர்:** ஏண்டா நீ நேற்று ஸ்கூலுக்கு வரல?
**மாணவன்:** சார் நேற்று உங்கள மெடிக்கல்ஷொப்ல பார்த்தேன் உங்களுக்கு உடம்பு சரியில்லைனு நினைச்சு லீவு போட்டுட்டன் சார்.

...................

**கணவன்:** அந்தக் கறுப்பு நாய்க்கு சோறு வச்சியா?
**மனைவி:** ஆமாங்க ஏன் கேட்கிறீங்க?
**கணவன்:** இல்ல அந்த நாய் தெருவோரம் செத்துக் கிடந்துச்சு அதுதான் கேட்டன்.

**கணவன்:** சாமிகிட்ட என்னமா வேண்டிகிட்ட?
**மனைவி:** அடுத்த ஜென்மத்திலும் நீங்கதான் என் புருஷனா வரணுமுனு வேண்டிகிட்டங்க. நீங்க என்ன வேண்டிகிட்டீங்க
**கணவன்:** எனக்கு அடுத்த ஜென்மமே வேணாம்னு வேண்டிகிட்டன்.

...................

**சேகர்:** என்னடா இவ்வளவு சோகமா இருக்கிறா?
**ராஜா:** என்னோட மனைவி ஒரு மாசம் என்கூட பேசமாட்டேன் என்று சொல்லிட்டா.
**சேகர்:** அதுக்கு சந்தோஷம்தானே படனும்.
**ராஜா:** எப்படிடா? இன்னையோட அந்த ஒரு மாசம் முடியுதே!

...................

**ஒருவன்:** தரகரே நீங்க பெரிய விஷயத்தை மறச்சுட்டீங்க இப்படி செய்யலாமா? **தரகர்:** ஏன்? என்ன ஆச்சு இப்போ?
**ஒருவர்:** பொண்ணு அஞ்சரை அடி உயரமுன்னு சொன்னீங்க சரி. மூணு அடி அகலம்ன்னு சொன்னீங்களா?

## மன்னா விளம்பரப் பலகை

"மன்னிப்பு என்பது மலரைப் போன்றது. ஏனென்றால் கசக்கியவன் கைகளுக்கு மணத்தைக் கொடுத்துவிட்டு மடிவதால்"

- அறிஞனுக்கு அனைத்துலகும் நாடே, அமைதி நிறைந்த மனதிற்கு எந்த இடமும் கோயிலே.
- தர்மத்தாலும் கருணையாலும் எய்தப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்க வல்லது.
- அறிவை மறந்த உணர்ச்சி என்பது திரியை மறந்த தீயாகும். எரியும் தீயை இழந்த திரிதான் உணர்ச்சி தொலைந்த அறிவாகும்.

**து. கிருஷாந்தினி, அச்சங்குளம், நானாட்டான்.**

- ஒரு கதவு மூடப்படும்போது மற்றொரு கதவு திறக்கிறது. ஆனால் மூடப்பட்ட கதவையே பார்த்துக்கொண்டு திறக்கப்படும் கதவைத் தவறவிடுகின்றோம்.
- வாழ்வில் வந்துபோகும் துன்பங்கள் - வாழ்க்கையின் வழிகாட்டிகள்.

- அனுபவங்கள் கற்றுத்தந்தது வாழ வழி மட்டுமல்ல... வாழ்வில் வந்துபோகும் மாற்றங்களையும், மாறிச்செல்லும் மனித குணங்களையும்.
- செருப்புத் தைப்பவனிடம் கையால் செருப்பை எடுத்து கொடுக்கும் அளவுக்கு படிப்பறிவு இருந்தால் போதும்.
- பெரும் கோபத்திலும் ஒரு பெண்ணிடம் கெட்ட வார்த்தையை பயன்படுத்தாமல் பேசுவதில் உள்ளது ஆண்மை.

- சந்தித்தே ஆகவேண்டிய பிரச்சினைகளைக் கண்டு ஓடினால் தெருநாய்போல் அது நம்மைத் துரத்தும். துணிவு என்ற கல்லைக் கையில் எடுத்தால் அது தலைதெறிக்க ஓடும்.
- அஞ்சாமையை அணிகலனாகப் பூண்டவர்களுக்கு மலையளவு துன்பங்களும் கடுகாகும்.
- காலத்தின் மதிப்பு உனக்குத் தெரிந்தால் வாழ்வின் மதிப்பும் உனக்குத் தெரிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருதுபெற்ற மன்னார் மாவட்ட சிரேஷ்ர ஊடகவியலாளர்

# லோரன்ஸ் கொன்சால் வாஸ் கூஞ்ஞ

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டார். இந்நிகழ்வில மன்னார் மாவட்டத்தில் கடந்த 40 வருடங்களாக ஊடகத்துறையில் பணியாற்றிவரும் திரு. லோறன்ஸ் கொன்சால் வாஸ் அவர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவருக்கு மன்னார் மறைமாவட்ட சமூகம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.



சிறுவனாக இருந்தபோதே யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் கத்தோலிக்க பத்திரிகையான பாதுகாவன் பத்திரிகைக்கு செய்திகளை அனுப்பிய கொன்சால்வாஸ் கூஞ்ஞ, 1976 முதல் வீரகேசரி பத்திரிகையின் நிருபராகக் கடமையாற்றினார். தலைமன்னார் மேற்கைப் பிறப்பிடமாகவும், பேசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட லோரன்ஸ் கொன்சால்வாஸ் கூஞ்ஞ அமரர் திரு. பிலேந்திரன் லோரன்ஸ் கூஞ்ஞவுக்கும் திருமதி லோரன்ஸ் மேரி கூஞ்ஞவுக்கும் நான்காவது புதல்வராவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை தலைமன்னார் மேற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை கல்முனை பத்திமாக் கல்லூரியிலும் கண்டி பூரணவத்த புனித சூசையப்பர் குருமடத்திலும் பயின்றார்.

இவர் சிறுவயதிலே யாழ். மறைமாவட்டத்திலிருந்து வெளிவருகின்ற 'பாதுகாவலன்' பத்திரிகைக்கு மன்னார் மாவட்ட பங்குத்தள செய்திகளை அனுப்பியதன் மூலம் ஓர் செய்தியாளராக கால்பதித்ததுடன் கல்முனையில் படித்த காலத்தில் மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து வெளிவந்த 'தொண்டன்' பத்திரிகைக்கும் தனது ஆக்கங்களை எழுதிவந்தார்.

அத்துடன் இவர் 1976ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச பத்திரிகையாக கொழும்பிலிருந்து வெளிவருகின்ற வீரகேசரி, மித்திரன் ஆகிய பத்திரிகைகளுக்கும் தலைமன்னார் நிருபராக நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரைக்கும் இவர் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் லிமிட்டட் நிறுவனத்தின் வீரகேசரி பத்திரிகைக்கும் தொடர்ந்து தலைமன்னார் நிருபர் வாஸ் கூஞ்ஞ என்ற பெயரில் மன்னார் பிராந்திய செய்தியாளராகச் செயல்பட்டு வருகின்றார்.

இவர் சிறுவயது தொடக்கம் பத்திரிகைத் தொழிலில் ஆர்வம் கொண்டு விளங்குவதால் மன்னார்ப் பகுதியில் வன்செயல் தலைதூக்கிய காலங்களில் மன்னார்த் தீவு மக்கள் இருமுறை அயல் நாடான இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்றபோதும் இவர் இடம்பெயராது தலைமன்னார் பியரில் முஸ்லிம் மக்களுடன் தங்கியிருந்து தனது பத்திரிகைத் தொழிலை இலைமறை காயாக இருந்து தொடர்ந்து செயல்படுத்தினார்.

அக்கால கட்டத்தில் இயக்கங்கள் பாதுகாப்புப் படைகளுக்கு எதிராக எச்சரிக்கை விளம்பரம் ஒட்டுவதும், அனுப்புவதுமாக இருந்தபோது செய்தியாளனாக இவரை இனங்கண்டுகொண்ட இராணுவத்தினர் இவரை ஐந்துமுறை விசாரணைக்கு என தள்ளாடி முகாமுக்கு அழைத்துச்சென்றபோதெல்லாம் அந்நேரம் இப்பகுதியில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த கே. அரசரெட்ணமும், மன்னார் அரசாங்க அதிபராக இருந்த கே. கணேஷ், மற்றும் வீரகேசரி நிறுவனமும் இவரின் விடுதலைக்கு பெரும் பங்கு ஆற்றியுள்ளனர்.

அத்துடன் இவர் நடுநிலைமையாக இருந்தும் தந்திரமாகவும் தனது பத்திரிகைத் தொழிலினை முன்னெடுத்துச் சென்றதால் அந்நேரம் இயக்கங்களுக்கிடையே போட்டியும் மோதலும் இடம்பெற்றபோதும்கூட அவர்களிடமிருந்தும் தப்பித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

தற்பொழுது இவர் மன்னார் மாவட்ட ஊடவியலாளர் சங்கத்தின் தலைவராகவும், மன்னார் மாவட்டத்தின் பேசாலைப் பங்கின் மறையாசிரியர் சங்கத் தலைவராகவும் மற்றும் வேறு பல அமைப்புக்களில் உறுப்பினராகவும் இருந்து சமூக சமய சேவையாளராகவும், பணியாளராகவும் திகழ்ந்து வருகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி - 140

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் தானியேல் நூலிலிருந்து (அதிகாரம் 6 - 12) எடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளின் ஆட்சி அதிகாரம் நெபுக்கத்னேசரை அரசனாகக்கொண்ட பபிலோனியரின் கல்தேயரின் அதிகாரத்தில் - தலைமையிலிருந்து மேதியர் – பாரசீகரின் அதிகாரங்களுக்குள் வருகின்றது. எந்த அரசு ஆட்சி அதிகாரத்துக்குள் வந்தாலும் சிதைத்துச் சின்னபின்னமாக்கப்பட்ட எருசலேம் தேவாலயத்துக்கும் அடிமைப்படுத்தப்படுத்தப்பட்ட இஸ்ராயேல் மக்களுக்கும் எந்த மீட்சியும் இருக்கவில்லை.

தானியேல் இறைவாக்கினரும் அவரோடு இணைந்த மூவரும் நெபுக்கத்னேசரினதும் அவரது மகன் பெல்சாட்சரின் ஆட்சியிலும் மேனிலையில் வாழும் சந்தர்ப்பங்களை இறைவன் தந்துள்ளார்.

குறுகிய காலத்தில் பெல்சாட்சர் மரணத்தைத் தழுவ மேதியரும் பாரசீகரும் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றி ஆழ்வது இப்பகுதியில் கூறப்படுகின்றது. தானியேல் தாரியு என்ற மன்னனால் சிங்கக்குகையில் அடைக்கப்படுவதும் எந்தவித ஆபத்துக்களும் இன்றி தானியேல் காப்பாற்றப்படுவதும் கூறப்படுகின்றன.

தானியேல் பல்வேறு இடங்களில் பலவகையான காட்சிகளைக் காண்கின்றார். அதற்கான விளக்கங்களும் அக்காட்சிகளிலேயே அவருக்கு வழங்கப்படுகின்றன. அரசுகளின் வீழ்ச்சிகளும் எழுச்சிகளும்தான் அவற்றில் பெரும்பாலானவை. தேவ தூதர்களான கபிரியேலும், மிக்கேலும்கூட இவரது காட்சிகளில் வந்துபோகின்றனர். தானியேலின் நாட்களில் இஸ்ராயேல் இனம் முக்கியத்துவம் இழந்த ஒரு இனமாகவே காணப்பட்டது.

**இனி எமது வினாக்களுக்கு வருவோம்.**

1. "ஏனெனில் வியத்தகு ஆவி அவரிடத்தில் இருந்தது. தன் அரசின் முழுப்பொறுப்பையும் அவரிடம் ஒப்படைக்கலாம் என அரசன் எண்ணிக்கொண்டிருந்தான்". இந்த அவர் யார்?
2. "நீ இடைவிடாது வழிபடும் உன் கடவுள் உன்னை விடுவிப்பாராக" இது யாரால்? யாருக்கு? எப்போது கூறப்பட்டது?
3. சிங்கங்களின் வாயிலிருந்து தானியேல் விடுபட்டபின் மக்களுக்கு மன்னனால் விடுக்கப்பட்ட அறிவித்தல் என்ன?
4. அமைக்கப்பட்ட அரியணையில் தொன்மையானவர் அமர்ந்திருந்தார். அந்த அரியணை எப்படிப்பட்டதாக அமைந்திருந்தது?
5. ஏலாம் மாநிலத்தின் தலைநகர் எது?
6. ஊலாய் ஆற்றங்கரையில் தானியேல் நீண்ட ஒரு காட்சியைக் கண்டார். அந்தக் காட்சிக்கான விளக்கம் தானியேலுக்கு யாரால் வழங்கப்பட்டது?
7. "ஆம் ஆண்டவரே, அவமானமே எங்களுக்கும் எங்கள் அரசர்களுக்கும் தலைவர்களுக்கும் தந்தையர்களுக்கும் கிடைத்துள்ளது. ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம்" இது யாருடைய வேண்டுதலில் இடம்பெறுகின்றது?
8. "மிகவும் அன்பிற்குரிய தானியேல், நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளைக் கேள். நிமிர்ந்து நில். ஏனெனில் உன்னிடம்தான் நான் அனுப்பப்பட்டேன்" இந்த வாக்கு யாரால் தானியேலுக்குக் கூறப்பட்டவை?
9. தானியேலின் 11ம் அதிகாரம் எதைப்பற்றிக் கூறுகின்றது?
10. "ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும் பலரை நல்வழிக்குக் கொணர்ந்தோர் விண்மீன்களைப் போலவும் என்றென்றும் முடிவில்லாத காலத்திற்கு ஒளிவீசித் திகழ்வர்"? எப்போதிருந்து?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 138 இற்கான கேள்விகளுக்கு 20 பேர் விடையளித்திருந்தனர்.**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி

**ஜீ. ஜீவ றொமா, பரிகாரிகண்டல், முருங்கன்**

### பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

01. ச. ஜாண்சன், மாதிரிக் கிராமம், வங்காலை.
02. யோ. யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
03. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்புடையான்
04. ஜெ. றேபனா, அந்தோனியார் புரம், தேவன்பிட்டி.
05. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
06. செ. சுபாஜினி, திருக்குடும்ப கன்னியர் இல்லம். நீர்கொழும்பு.
07. உ. பிறேமினி, கல்லடி, மட்டக்களப்பு.
08. அ. நிவேதிக்கா, புதுக்கமம், உயிலங்குளம்
09. ப. பவுஸ்ரினா, குருவில், வட்டக்கண்டல்.
10. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.

# தலைமன்னார் - கொழும்பு ரயில் சேவை 25 வருடங்களின் பின்னர் ஆரம்பம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையுடன் தலைமன்னார் – கொழும்பு ரயில் சேவை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்திய நாட்டுடன் நல்லுறவு மேம்பட வழிபிறக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்பு பிரித்தானியரின் ஆட்சியின்போது 1914ம் ஆண்டு மாசி மாதம் 24ம் திகதி தலைமன்னார் – கொழும்பு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் இந்திய நாட்டுடன் சரித்திரபூர்வமான தொடர்புகள் ஆரம்பமாகின. இந்திய அரசு தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பித்தது. இதனால் இந்தியாவுக்கும் இலங்கைக்குமான நட்புறவு மேலோங்கியது.

போர் முடிந்து 6 வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனால் தற்போதுதான் இந்திய அரசின் உதவியுடன் மதவாச்சி – தலைமன்னார் ரயில் சேவைக்குரிய பாதைகள் சீரமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த ரயில் பாதை அமைக்கும் ஒப்பந்தம் இந்திய அரசினால் இலங்கையுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தியாவின் பிரசித்திபெற்ற 'இர்கோன்' சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனம், இந்த வேலைகளைத் துரிதமாகப் பூர்த்திசெய்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளைப் பலப்படுத்தி உள்ளது. 'இர்கோன்' நிறுவனம் சிறந்த முறையில் ரயில் பாதைகளைப் புனரமைக்கும் பணிகளில் புகழ்பெற்ற நிறுவனமாகும். மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரைக்கும் உள்ள ரயில் பாதையில் இருந்து அனைத்துத் தண்டவாளங்களும் போர் இடம்பெற்ற காலத்தில் இருந்த இடமே தெரியாமல் காணாமல்போய்விட்டன.

மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் முதல் கட்டமாக மதவாச்சியில் இருந்து மடு வீதி வரையிலுமான 43 கிலோமீற்றா நீளமான பாதை பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக மடு வீதியில் இருந்து தலைமன்னார் வரையிலும் உள்ள 63 கிலோமீற்றர் நீளமான பாதையின் பணிகள் முழுவதும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 24 ஆண்டுகளுக்கு முன்பு அழிக்கப்பட்ட மன்னார் கடற்பிரதேசத்தின் மேல் செல்லும் 5 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதையும் பாலங்களும் இர்கோன் நிறுவனத்தின் அதிவிசேடமான தொழிநுட்ப உத்தியோகஸ்தர்கள், வேலையாளர்கள் மூலமாகப் புனரமைக்கப்பட்டுள்ளன.

இரயில்கள் மணித்தியாலத்துக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய நிலையில் அந்தப் பாதைகள் செப்பனிடப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன. மிகவும் நீளம் கூடிய தண்டவாளங்கள் பாதைகளுக்குப் பாவிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த ரயில் பாதையானது அதிவிசேட நவீன தொழில்நுட்ப முறைகளைப் பாவித்துக் கட்டி முடிக்கப்பட்டுள்ளபடியினால் எதிர்காலத்தில் பராமரிப்புச் செலவுகள் மிகவும் குறைவாகவே இருக்கும் மதவாச்சிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் 11 ரயில் நிலையங்கள் உள்ளன. அவையாவன நேரியகுளம், செட்டிகுளம், மடு, முருங்கன், மாதோட்டம், திருக்கேதீஸ்வரம், மன்னார், தோட்டவெளி, பேசாலை, தலைமன்னார், தலைமன்னார் பியர் ஆகியனவாகும்.

மேலும் பாதுகாப்பான நம்பிக்கையுடைய நவீனமுறையில் அமைக்கப்பட்ட கைகாட்டிகள், சைகை நிலையங்கள், சிறந்த தந்தி, தொலைபேசி சேவைகள், அறிவிப்பு முறைகள் என்பன சகல ரயில் நிலையங்களிலும் அமைக்கப்பட்டு சிறந்த உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளன. புகையிரதப் பாதைகளுக்கான தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்தியாவின் ரயில் சேவையின் தரத்துக்கும் இலங்கையின் தரத்துக்கும் சமாந்தரமான முறையிலும் இந்த ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்று பெரிய பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தலைமன்னார் பியர் பகுதியில், கடலில் 960 அடி நீளமான ரயில் பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு ரயில்கள் ஓடக்கூடிய முறையில் இரு வழிப்பாதைகள் 5 ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் புகையிரதப் பாதைகள் மணித்தியாலத்துக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் ரயில் செல்லத்தக்க வகையில் அமைக்கப்பட்டாலும், 100 கிலோமீற்றர் வேகத்துக்கு மேலாக ஓடக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தவக்கால பாதயாத்திரை

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி புதன் கிழமை காலை 4.45 மணிக்கு புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்ற திருப்பலியைத் தொடர்ந்து 1,200 பேருடன் இத்தவக்கால பாதயாத்திரை ஆரம்பமாகியது. வங்காலை, நானாட்டான் உயிலங்குளம், வஞ்சியன்குளம், அளவக்கை, முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை, சிறுக்கண்டல் போன்ற பங்குகளைச் சேர்ந்த மக்கள் தத்தம் இடங்களிலிருந்து இந்த பாதயாத்திரையை ஆரம்பித்து மன்னாரில் இருந்து வந்த குழுவினரோடு முருங்கனில் இணைந்துகொண்டனர். முதலாம் நாள் இரவு பெரியகட்டிலும், இரண்டாம் நாள் இரவு வவுனியா இறம்பைக்குளத்திலும் இந்தப் பாதயாத்திரைக் குழுவினர் தங்கவைக்கப்பட்டனர்.

20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிக்கு கோமரசன்குளம் கல்வாரித்திருத்தலத்தை இவர்கள் சென்றடைந்தனர். அங்கு பாவசங்கீர்த்தன அருட்சாதனம் வழங்கப்பட்டது. தொடர்ந்து திருச்சிலுவைப்பாதை இடம்பெற்றது. அதைத்தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஏ. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோடு இந்த யாத்திரை நிறைவுக்கு வந்தது. ஏறக்குறைய நாலாயிரம் பேர் இந்தத் தவக்கால பாதயாத்திரையில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.153

## யோபு நூல் 1 - 42 வரை

உங்கள் விடைகளை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | | | | | 03 |
| | 04 | | | | 05 | | | 06 | |
| | | | 07 | | | | 08 | 09 | |
| | | | 10 | | 11 | | | | 12 |
| 13 | | 14 | | | | ❖ | | | |
| | 15 | 16 | | | 17 | | | 18 | |
| | ❖ | ❖ | 19 | ❖ | | | 20 | | |
| 21 | | 22 | | 23 | | | | | 24 |
| 25 | | | | ❖ | 26 | ❖ | | 27 | |
| 28 | | | | 29 | | | | | 30 |

*உங்கள் விடைகளை, குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.*

*குறிப்பு : குறுக்கெழுத்துப்போட்டி விடைகளை அனுப்பும்போது மன்னாவில் உள்ள பெட்டியையோ அல்லது அதிலுள்ள இடைவெளிகளை நிரப்பியோ அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதேபோன்ற கட்டமைப்பைத் தயாரித்து விடைகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். அதில் உங்கள் பெயருடன் தபால் முகவரியைத் தெளிவாக எழுதவும்.*

### இடமிருந்து வலம்

1. தானே தனக்கு எதிராகக் ............ பகர்கிறது.
2. ஏனெனில் ............... இடையர், பாலைநிலத்தில் ___ எதிர்கொண்டனர்.
5. ஆனால் பொன், ............. யால் திறமையாக உருவாக்கப்பட்டவையும் ___ அவர்கள் நம்பிக்கை வைக்கிறார்கள்.
6. ஏனெனில் அந்த உணவு உண்போரின் ................ யுணவிற்கு ஏற்றவாறு.
11. இத்தகைய தண்டனைக்கு மாறாக நீர் உம் மக்களுக்குப் .................. காட்டினீர்.
14. நற்பயிற்சி பெற்ற ............. வஞ்சனையினின்று விலகியோடும்.
17. அவர் அவர்களுக்கு .................. செய்பவர்.
20. அதைச்சுவரில் .................. யால் பொருத்தி ___ வைக்கிறார்.
21. எல்லோரும் ............. வகையில் பிறக்கின்றனர்..
22. அவர் அணிந்திருந்த நீண்ட ஆடையில் ........... அனைத்தும் பொறிக்கப்பட்டிருந்தது.
23. படர்ந்த கிளைகளிலிருந்து வரும் பறவைகளின் இனிய ...........
25. அனைத்தையும் ஆக்கும் ஞானத்தைவிடச் சிறந்த .......... எது?
27. அதில் இருந்த நான்கு ......... வரிசையிலும் ___ பொறிக்கப்பட்டிருந்தன.
28. விலங்கிடப்பட்டிருந்த அவரை ............ அது விலகவில்லை.
29. .................... தன்னிலே கோழைத்தனமானது.

### வலமிருந்து இடம்

2. உள்ளத்தை உள்ளவாறு .................. நோக்குபவர்.
3. ஞானம் - என்றுமுள ஒளியின் .................
5. மாட்சி பொருந்திய அப்பயணத்தில் அது .................. தணிந்த கதிரவனாய் இருந்தது.
7. அவர்களது பாசறைக்கு ................. நிழல் கொடுத்தது..
8. இதன் விளைவாக எங்கும் ஒரே .................. ம், குருதி, கொலை ___ பொய்யாணை.
10. பத்து மாத காலமாகக் ................ தியோடு உறைந்து என் உடல் உருவெடுத்தது.
11. ஆண்டவரின் கோவிலில் அவர்களுக்கு இனிமை மிக்க .................... அளிக்கப்படும்.
12. கடவுளைப் பற்றிய ................. தங்களுக்கு உண்டு என அவர்கள் பறைசாற்றுகிறார்கள்.
14. பற்றுறுதியில்லா ஆன்மாவின் நினைவுச் சின்னமான .................. த்தூணும் அங்கேதான் நின்றுகொண்டிருக்கிறது.
16. நீதிமான்களும் இறப்பை .................... நேர்ந்தது.
17. .......... ஆராய்ந்தறியும் அளவுக்கு___அறியத்தவறியது ஏன்?
20. அனைத்தையும் .................... ஆற்றலை அவருக்கு அளித்தது.
24. என் உடலியல்புக்கு ஒத்த ................ கிடத்தப்பட்டேன்
27. இருள் என்னும் ஒரே சங்கிலியால் ................. ண்டனர்.
30. மனிதரைக் கடவுள் சந்திக்க வரும்போது அப்பெண் ................. தருவார்.

### மேலிருந்து கீழ்

1. அவருடைய நன்மையின் .....................
3. அவரவர் விரும்பிய ..................... தந்தது.
5. காலைக் கதிரவனின் ஒளிக்கீற்றாலேயே ............. அடைந்து எளிதில் உருகிற்று.
9. உண்போரின் சுவையுணவிற்கு ஏற்றவாறு ........................
12. ................ உணவாகிய காடைகளை அவர்களுக்கு உண்ணக் கொடுத்தீர்.
13. ................. போல விரைந்து சென்றன..
17. உலகம் முழுவதும் .............. கண்முன் உள்ளது.
19. உமது சொல்லே எல்லா மனிதர்க்கும் ................ அளிக்கிறது.
20. அறிவுத்திறனின் .............. அசைவுறாதது.
25. முறையீடுகளின் முணுமுணுப்பு ................... க்கு எட்டாமல் போவதில்லை.

### கீழிருந்து மேல்

4. அவர்கள் மாட்சிமிக்க .................. முடியைப் பெறுவார்கள்.
8. ஏனெனில் நன்றிகொன்றோரின் நம்பிக்கை.............. காலத்து உறைபனிபோல் உருகிவிடும்.
12. உங்கள் செயல்களாலேயே .......... வருவித்துக் கொள்ளாதீர்கள்.
13. ................. அவர்களை எதிர்த்து வீசும்.
14. கதிரவனின் ஒளிக்கீற்றாலேயே வெப்பம் அடைந்து எளிதில் ....................
15. அலைமோதும் நீர்பரப்பைக் கிழித்துக்கொண்டு ................ செல்கிறது.
17. ................ தூயவர்களுக்கோ போரொளி இருந்தது.
18. கடும் போராட்டத்தில் அவருக்கு ...................... தந்தது.
19. உறுதி கூறியவர்களே ..................... ப்புக்கிடமான அச்சத்தினால் நோயுற்றார்கள்.

# திருச்சபைத் தந்தையர்களின் பார்வையில் உயிர்த்தெழுதல் ....

12ஆம் பக்கத் தொடர்ச்சி

∴போர்துநாதுஸ் என்பவரின் கருத்துக்கு எதிராக எழுதிய கடிதத்தில் (எண் 22) பாவமே முதல் மனிதனை மீண்டும் மண்ணாக மாற்றியது. நாமும் அம்முதல் மனிதன் வழியாகப் பிறந்ததால் நிச்சயமாக மரணமடைவோம் என்று விவரிக்கின்றார். ஆதாமின் பாவம் மனித உடலை மட்டும் மரணத்திற்கு இட்டுச்செல்லவில்லை. மாறாக, மனித ஆன்மாவையும் மரணமடையச் செய்தது என்று இருவகையான மரணங்களை விபரிக்கின்றார்.

மேலும் அவர், இவ்விருவகையான மரணங்களிலிருந்தும் மனிதகுலத்திற்கு உயிர்ப்புத் தேவைப்படுகின்றது என்று ஆணித்தரமாகக் குறிப்பிடுகின்றார். உடலின் மரணம் நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் ஆன்மாவின் மரணத்தைப்பற்றி நாம் அவ்வளவாக அறிந்தது இல்லை. அகுஸ்தினாரின் பார்வையில், கடவுளின் அருள் இல்லாத நிலையில் மனித ஆன்மா பாவநிலையில் மரணம் அடைகின்றது. எப்போது ஒரு மனிதர் ஆன்மாவின் இந்த அவல நிலையை உணர்ந்து மனம் திருந்தி நேரிய வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறாரோ அப்போது அவரது ஆன்மா உயிர்தெழுகின்றது. இந்த ஆன்மாவின் உயிர்த்தெழுதலால் மனிதர் இவ்வுலக ஆசைகளிலிருந்து சிறிது சிறிதாக விலகி பேருண்மையை நோக்கி தனது மனத்தைத் திருப்புகின்றார். இதன் விளைவு இறை ஞானம், இந்த இறைஞானம் மனித வாழ்வை மகிழ்ச்சியை நோக்கி நடைபயில வைக்கின்றது.

உடலின் உயிர்ப்பைப்பற்றி "ஆன்மாவின் மேன்மை" என்னும் தனது புத்தகத்தில் அகுஸ்தினார் விபரிக்கின்றார். ஆன்மாவின் உயிர்ப்பினைப் போன்று, உடலின் உயிர்ப்பும் இவ்வுலக பந்த பாசங்கள் என்னும் பல்வேறு உலகைச் சார்ந்த கட்டுக்களிலிருந்து மனித உடல் விடுபடுகின்றபோது நடைபெறும் (எண் 33:73). இவ்வுடலின் உயிர்ப்பு சூரிய உதயத்தைப்போன்று உண்மையாக நடக்கக்கூடியது (எண் 33:76). விண்ணகத்தில் உயிர்த்த இவ்வுடல் அழியாத்தன்மையைப் பெற்ற விலைமதிப்பில்லா ஆபரணமாகும் (மறையுரை 241).

பாவத்தினால் ஆணவம்கொண்டு அழிவைத் தேடும் இம்மனித உடல் விலைமதிப்பில்லா இறை ஆபரணமாவது மிகவும் மென்மையானது, புனிதமானது. அழிவுக்குரிய இவ்வுடல் மேற்கண்டவாறு ஆவிக்குரிய உடலாக மாறும்போது அது முழுவதுமாக ஆவிக்குக் கீழ்படிந்து நடக்கும் நிலையைப் பெறுகின்றது (மறையுரை 242). இந்நிலையில் உயிர்த்த மானிட உடலால் கடவுளையும் விண்ணிற்கு உரியவைகளையும் கண்கூடாகக் காணமுடியும் (கடவுளின் நகரம் 22:29). எனவே இப்போதிருந்தே மனமாற்றம் பெற்று ஆன்மாவில் உயிர்த்தவர்களாக தமதிருத்துவத்தை உளமார நாட நம்மை அழைக்கின்றார் (தமதிருத்துவம் 15:4:6).

**முடிவுரை**

இறப்பிற்குப் பின் வரும் மறுவாழ்வே இவ்வுலக வாழ்க்கையை நீதி, நேர்மையுடன் வாழத் தூண்டுகின்றது. இம்மறு வாழ்க்கையின் நுழைவாயில் உடலின் உயிர்ப்பு. எனவே இறப்பிற்குப்பின் நமது உடல் இறைவனின் இறுதித் தீர்ப்புக்காக உயிர்த்தெழும் என்னும் உண்மையை இயற்கையின் எதார்த்தங்கள் மூலமும், இறைவார்த்தையின் மூலமாகவும், திருச்சபைத் தந்தையர்களின் விளக்கங்களிலும் இருந்து நன்றாகக் கற்று நமது சிந்தையில் நிலைநிறுத்த வேண்டும். அப்போது இறுதித் தீர்ப்புக்கு நாம் அஞ்சத் தேவையில்லை. மேலும் இவ்வுலக வாழ்வும் இறை அருளின் துணையால் மனநிறைவைக்கொண்டதாக அமையும்.

இவ்வாண்டின் தவக்காலமும் பாஸ்கா காலமும் நாம் ஒவ்வொருவரும் ஆன்மாவில் உயிர்த்தெழும் காலமாக அமையட்டும். - **நன்றி - தோழன் , 2011 ஏப்ரல்.**

**அருட்பணி. தா. சேவியர் டெரன்ஸ்**

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 151ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
என். சி. ஜெகஜீவன் றோச்,
பள்ளிமுனை, மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
செ. அரியமலர்,
சாளம்பன், ஆண்டான்குளம்.

**மூன்றாம் பரிசு:**
மோ. சறோணிக்கா,
மரியாள் வீதி,
தாழ்வுபாடு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 80 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 71 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 151ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. திருமதி. பிளன்ரீனா, சின்னக்கடை, மன்னார்.
02. ஜெ. மரியசுகிர்தா, அந்தோனியார் புரம், மன்னார்.
03. நி. டேனியல், யோசவாஸ் வீதி, குடியிருப்பு, செட்டிகுளம்.
04. ஜெ. றேபனா, அந்தோனியார் புரம், மன்னார்.
05. எல். தர்ஷினிவாஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
06. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
07. நி. யாழிசன், குடியிருப்பு, செட்டிகுளம்.
08. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
09. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
10. ப. சுதர்சினி, பெரிய பண்டிவிரிச்சான், மடுகோவில்.
11. எ. கிறிசாந்தன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
12. செ. ஜெபசுலக்சினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
13. ஏ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
14. சென். ஆன் நியூசிக்காதுரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
15. நோ. நந்தினி சில்வா, மடுக்கோவில்.
16. யோ. ஜெனோன்சி லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
17. எஸ். ஷார்மி பெரேரா, உயிலங்குளம், மன்னார்.
18. செ. சந்தாம்பிள்ளை, பாலைப்பெருமாள்கட்டு, குருவில்.
19. யோ. ஆன் நிருஜன் லெம்பட், தோமஸ்புரி, வங்காலை.
20. கே. ஜான்சன், கீளியன்குடியிருப்பு.
21. சூ. மயூறியஸ் குருஸ், தாழ்வுபாடு, மன்னார்.
22. யே. யோயல் ஜெருஷான் டயஸ், வங்காலை.
23. திருமதி. சூ. குணசீலி, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
24. செ. த. பெனில்டஸ் தற்குரூஸ், தலைமன்னார்.
25. பி. மேரி வலன்ரினா, நெடுங்கண்டல், அடம்பன்.
26. எம். திரேசா, எமில்நகர், மன்னார்.
27. ஜே. மேரி சவேரினா லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
28. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
29. ச. ஜாண்சன், நறுவிலிக்குளம், வங்காலை.
30. பி. சுமீத்தா பானு, மாதிரிக் கிராமம், வங்காலை.
31. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
32. கமலா கிறிஸ்தோப்பர், கன்னியர்மட வீதி, மன்னார்.
33. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
34. டா. மேரி யோசேப்பின், பள்ளிமுனை, மன்னார்.
35. அ. லக்சி, இறம்பைக்குளம், வவுனியா.
36. வீரசேனா அனுசியா, இறம்பைக்குளம், வவுனியா.
37. யூ. நிசாந்தினி, வவுனியா.
38. அ. இசக்கியேல், யோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
39. அ. இனற்றுக்சனா, சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
40. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நிதிமன்றம், மன்னார்.
41. அ. விபுஷிகன் சோசை, சுகந்தபுரி, வங்காலை.
42. ட. யூலியா, செட்டிகுளம், வவுனியா.
43. அ. அன்ரோ ஜெய்சன், அடம்பன்தாழ்வு, அடம்பன்.
44. இ. போல்ராஜ், நெடுங்கண்டல், அடம்பன்.
45. எமில்டன் பத்மராணி, மகாறம்பைக்குளம், வவுனியா.
46. வி. வினித்தா, மட்டக்களப்பு
47. ஈ. நிசாந்தினி கூஞ்ஞ, குழந்தையேசு வீதி, போசாலை.
48. எம். யோகோஸ்வரன், சுண்டிக்குழி, முருங்கன்.
49. ப. றோசலின், குருவில், வட்டக்கண்டல்.
50. எஸ். றொசானி, எமில்நகர், மன்னார்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம் - பதிப்பாசிரியர்

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தெழுவோம்

10ஆம் பக்கத் தொடர்ச்சி

## திருமுகங்களின் கண்ணோட்டம்

உயிர்த்தெழுதலின் ஆழமான செய்தியை திருமடல்களின் பல இடங்களில் காணலாம். பவுல் உயிர்த்த ஆண்டவர் இயேசுவைத் தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்தார். உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்தால் தன்னுடைய வாழ்வின் போக்கை மாற்றிக்கொண்டு பல இடங்களுக்குச் சென்று சிலுவையில் இறந்து உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்துவுக்குச் சான்றுபகர்ந்து நற்செய்தி அறிவித்தார்.

அவர் எழுதிய பதின்மூன்று திருமடல்களும் இந்த உயிர்ப்பு அனுபவங்களை பல்வேறு நிலைகளில் வாழ்வதற்கான அழைப்பாகவே அமைந்துள்ளன. அவரின் உரோமை மடலில் வரும் செய்திகளை மட்டும் சிறப்பாகக் காண்போம் என்றால் மற்ற மடல்களிலும் பொது மடல்களிலும் வரும் செய்தியின் பொருளைப் புரிந்துகொள்ள முடியும்.

(1) இயேசு உயிர்த்தெழுந்ததால் அவர் இறைமகன் என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயேசுக்கிறிஸ்துவே ஆண்டவர் (உரோ 1:4).

(2) உயிர்த்தெழுந்தவர்மீது நம்பிக்கைகொள்வதன் வழியாக ஒவ்வொருவரும் கடவுளுக்கு ஏற்புடையவராகின்றனர் (உரோ 4:24).

(3) இயேசுவின் உயிர்ப்பு நம்மை கடவுளுக்கு ஏற்புடையவராக்குகின்றது (உரோ 4:25).

(4) இயேசுவின் உயிர்ப்பு இறைத்திட்டமாக மலர்ந்தது (உரோ 5:6). இயேசுக்கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் (1கொரி 15:4).

(5) இயேசுவின் உயிர்தெழுதலால் புதுவாழ்வு பெற்றுள்ளோம் (உரோ 6:4).

(6) இயேசுவோடு உயிர்த்தெழுந்த அவரின் இறப்பிலும் பங்குபெற வேண்டும் (உரோ 6:5).

(7) சாவுக்குரிய (இயல்பை) உடலைப் பெற்றவர்களும் நம்பிக்கையால் உயிர்பெறச் செய்வார் (உரோ 8:11, 1 கொரி 6:14). "அவரோடு நீங்களும் உயிர்பெற்று எழுந்துள்ளீர்கள்" (கொலே 2:12).

(8) இயேசுவின் உயிர்ப்பு கடவுளின் செயல் (உரோ 10:9). இதனை நம்பினால் மீட்புண்டு (உரோ 10:9) காண் 1பேது 3:21).

(9). அறிவிக்கப்பட்ட நற்செய்திக்கு இயேசுவின் உயிர்ப்பே அடித்தளம் (1கொரி 15:16-17).

(10) உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்து சாவை வென்றவர், சாவுக்கு உட்பட்டவரல்ல (உரோ 6:9, 8:11).

பவுலும் மற்றத் திருத்தூதர்களும் தங்கள் திருமடல்களில் உயிர்ப்பை, இறைத்திட்டத்தை நிறைவேற்ற வரலாற்றில் நடந்த நிகழ்வு என்று காண்கின்றனர். இந்த வரலாற்று நிகழ்வு நற்செய்தியாக அறிவிக்கப்பட்டது. இந்த நற்செய்தியை ஏற்றுக்கொள்வோர் உயிர்ப்பின் அனுபவத்தில் பங்கு பெறுகின்றனர். இதன் வழியாக நம்பிக்கைகொள்வோர் மீட்பில் பங்கெடுத்துள்ள சாட்சிகளாக வாழ்கின்றனர்.

## நாமும் உயிர்த்தெழுவோம்

இயேசு தன்னை இறைவன் என்று எடுத்தியம்பும் வகையில் சாவின்மீதும் தீமையின்மீதும் வெற்றிபெற்றார். பல்வேறு அரும் அடையாளங்களைச் செய்தார். இறந்த இலாசரை மூன்று நாள்கள் கழித்து உயிர்பெறச் செய்தார் (யோவா 11:43-44). நயீன் பட்டணத்து விதவைப் பெண்ணின் ஒரே மகனை மீண்டும் உயிர்பெற வைத்தார் (லூக் 7:14-15). தொழுகைக்கூடத் தலைவர் யாயிரின் இறந்த பன்னிரண்டு வயது மகளுக்கு மீண்டும் உயிர் தந்தார் (மாற் 5:42-43). பிறருக்கு உயிர் தந்தவர் சிலுவையில் அறையப்பட்டு மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று சீடர்களுக்கு மூன்றுமுறை கற்பித்தார். அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் (மத் 28:6). அவரின் உயிர்த்தெழுதல் வரலாற்று நிகழ்வு என்று நற்செய்தியாளர்களும் திருத்தூதர் பணிகள் நூலும், திருமடல்களும், விவிலிய அறிஞர்களும் விவரிக்கின்றனர்.

உயிர்ப்பின் அனுபவத்திற்குப் பிறகு சீடர்களின் வாழ்வின் மாற்றம் ஏற்பட்டது. தூய ஆவியின் ஒளியில் இயேசுவின் இயக்கமாக உருவாகி இயேசு அவர்களுக்குக் கற்பித்த வாழ்வில் மதிப்பீடுகளை வாழமுயன்றனர். அம்முயற்சியில் பல்வேறு எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் சந்தித்தனர். எனினும் உயிர்த்த ஆண்டவர் இயேசுவுக்குச் சாட்சியாக வாழ்வதில் அனைவரும் ஒருமனப்பட்டுச் செயல்பட்டனர். அவர்களை உந்தித்தள்ளி, சாட்சியாக வாழத்தூண்டிய இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவம் இன்னும் நம்மையும் உயிர்த்தெழ அழைக்கின்றது. எதில் எதில் எல்லாம் உயிர்த்தெழுதல் தேவை என்பதை அறியவேண்டும்.

## மனநிலை மாற்றம் வழியாக

இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவம் எம்மாவு சீடர்களின் மனநிலையை மாற்றியது. உயிர்த்தெழுந்த ஆண்டவரை அப்பம் பிட்கும்போது கண்டவர்கள் உடனடியாகப் புறப்பட்டு இரவோடு இரவாக எருசலேம் திரும்பி வருகின்றனர். சோகத்தோடும், தோல்வி மனநிலையோடும் எம்மாவு சென்றவர்கள் மகிழ்ச்சியோடும் வெற்றிக்களிப்போடும் எருசலேம் திரும்பினார்கள். எருசலேம் வந்தவர்களுக்கு தங்களைப்போன்றே பெரும் மாற்றம்கண்ட திருத்தூதர்களையும் சீடர்களையும் காண்கிறார்கள் (லூக் 24:33-35).

நம்முடைய வாழ்வில் உயிர்ப்பின் அனுபவத்தைப் பெறவேண்டும். அது எவ்வாறு என்றால் இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்து நம்முடன் வாழ்கிறார் என்ற நம்பிக்கை பெறுவதன் வழியாகவே இது சாத்தியமாகும். "உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத் 28:20) என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை பெறவேண்டும்.



## மதிப்பீடும் மாறவேண்டும்

இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவமானது புதிய சமுதாய – சமய இயக்கத்தை உருவாக்கியது. தொடக்ககாலத் திருச்சபையில் இருந்த புதிய இயக்கத்தின் மதிப்பீடுகள்பற்றி திபா 2:42-47, திபா 4:32-37இல் வாசிக்கிறோம். சுயநலம் என்ற மதிப்பீடு மறைந்து, பொதுநலம் என்ற மதிப்பீடு தோன்றியது. தன் - மகிழ்ச்சி என்ற மதிப்பீடு மாறி "இல்லாதவர்களுடன் மகிழ வேண்டும்" என்ற மதிப்பீடு வந்தது. இந்த மதிப்பீடு மாற்றத்திற்குப் பலரும் வித்திட்டார்கள்.

தங்களின் உடைமைகளை விற்றுப் பகிர்ந்துகொண்டனர். இந்த மதிப்பீடு மாற்றம் இறைவார்த்தைக்குச் செவிசாய்த்தலாலும், அப்பம் பிட்குதலாலும், ஒன்றிணைந்து செபிப்பதாலும் சாத்தியமானது. இன்றைய சூழலில் இறைவனின் வார்த்தைக்குச் செவிசாய்ப்பது என்ற மதிப்பீடு மலர்ந்தால் இறையன்பும் பிறரன்பும் இயல்பாக இருக்கும். இல்லையேல் பதவி என்பது பணி என்று இல்லாமல் அதிகாரம் என்றும், பணம் என்பது பகிர்தலுக்கானது என்பதை மறந்து சுகமாக வாழ என்றும் மாறிவிடும். இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவம் நம்முடைய மதிப்பீடுகளை மாற்ற அழைப்பு விடுகின்றது.

## சாட்சிய வாழ்வுக்கு

இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவத்தால் தொடப்பட்டவர்கள் இயேசுக்கிறிஸ்துவுக்கு சாட்சியாக மாறினர் (திப 2:32). ஸ்தேவான் போன்றோர் தங்களுடைய உயிரையே கையளித்து இயேசுவைப்போலவே தமக்குத் தீமை செய்தவர்களை மன்னிக்கும் அளவுக்குச் சான்றுபகர்ந்தனர் (திபா 7:59-60). இயேசுவின் சீடர்களைத் துன்புறுத்திய சவுலும் உயிர்ப்பின் அனுபவத்திற்குச் சாட்சியாளராக மாறினார் (திபா 9). தானும் இறைவனின் மீட்புத்திட்டத்தில் பங்குபெறுவதற்காக துன்புறுவதாகவும் (கொலோ 1:24) துன்பங்களை ஏற்றுக்கொள்வதாகவும் (2கொரி 4:7:15) கூறுகின்றார். இவை வழியாக பலரும் "உயிர்த்தெழுந்த ஆண்டவரில் நம்பிக்கைகொள்வோரின் தொகை பெருகப்பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார்" 2கொரி 4:15).

எனவே சீடர்கள் போன்றே சாட்சிய வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம். மக்களின் போராட்டங்களிலும், அவர்களின் வாழ்வாதாரங்களைக் காப்பதிலும், உரிமைகளை மீண்டும் பெறுவதிலும் பக்கபலமாக இருப்பதன் வழியாகச் சாட்சிய வாழ்வு வாழமுடியும். அதைவிட மேலாகத் தனிப்பட்ட, குடும்ப, பங்கு, மறைமாவட்ட அளவில் அனைவரும் சாட்சிபகர்வதற்கான வழிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு இயேசு விரும்பிய இறையாட்சியை மண்ணில் காணமுடியும்.

## நிகழ்காலத்தைக் கடந்து

உயிர்த்தெழுதலின் அனுபவம் நிகழ்கால வாழ்வோடு முடிவதில்லை, மாறாக உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கைக்கும் ஊற்றாக அமைந்துள்ளது. பவுல், "இறந்தோர் உயிர்த்தெழமாட்டார் எனில் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும்" (1கொரி 15:13) என்று குறிப்பிடுகிறார். அதாவது, மறு உலக வாழ்வின்மீதான நம்பிக்கை என்பது மனிதனை முழுமனிதனாக வாழத் தூண்டுகின்றது என்பதையும், கிறிஸ்துவுக்குச் சாட்சிபகர உந்துதல் தருகின்றது என்றும் பவுலும் மற்ற சீடர்களும் கண்டார்கள் (1கொரி 15:15, திபா 4:2). எனவே உயிர்ப்பின் அனுபவம் நம்முடைய அன்றாட வாழ்வின் நிகழ்வுகளைக் கடந்துசென்று சாட்சிய வாழ்வு வாழத் தூண்டுவதுபோல எதிர்கால நிலைவாழ்விலும் (யோவா 6:54,58 11:25) நம்பிக்கை கொண்டுவாழத் தூண்டுகின்றது. இதனை, "நாம் யாவரும் சாகமாட்டோம், ஆனால் அனைவரும் மாற்றுருப் பெறுவோம்" (1கொரி 15:51) என்று குறிப்பிடலாம்.

## முடிவாக

இயேசுவின் உயிர்ப்பு – ஒரு வரலாற்று நிகழ்வு (Historical Event) என்பதை நற்செய்தி நூல்களிலும், திருத்தூதர் பணிகள் நூலிலும், திருமடல்களிலும் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்ந்து பிறருக்கு நம்பிக்கையூட்டிய பல விவிலிய அறிஞர்களின் வாழ்விலிருந்தும் அறிந்துகொள்ள முடிகின்றது. இயேசுவின் உயிர்த்தெழுதல் திருச்சட்டம் மற்றும் இறைவாக்கை நிறைவேற்றும் வகையில் அமைந்து, பலரையும் மீட்புத் திட்டத்தில் பங்குபெறத் தூண்டுகிறது. இது இயேசுவின் இயக்கத்தை உருவாக்கக் காரணமாகவும் அமைந்திருந்தது. நிகழ்கால வாழ்வில் இயேசுவுக்குச் சான்றுபகர்ந்து வாழ்வதன் மூலமும் எதிர்கால நம்பிக்கையில் நிலைத்திருப்பதற்குமான அழைப்பாக இயேசுவின் உயிர்ப்பு அமைந்துள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

# அமரர் அ. சகாயநாதன் அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

முருங்கன் சுண்டிக்குளிக் கிராமத்தைச் சேர்ந்த இவர் 24.08.1960ஆம் ஆண்டு பிறந்தார். 1992ஆம் ஆண்டு திருவுளப் பணியாளர் சபையில் நிரந்தர நிலையைப் பெற்ற இவர், 07.04.1994இல் திருவுளப்பணியாளர் சபைக் குருவாக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையான 14 ஆண்டுகள் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் இவர் பணியாற்றினார். தேவன்பிட்டி, தோட்டவெளி, அளவக்கை, கோமரசன்குளம் ஆகிய பங்குகளில் இவர் பங்குத்தந்தையாக அரும்பணி ஆற்றினார். 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டுவரை கண்டி அம்பிட்டிய திருவுளப்பணியாளர் சபையின் பெரிய குருமட அதிபராகவும், பின்னர் 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டுவரை திருவுளப்பணியாளர் சபையின் இலங்கை மாகாண அதிபராகவும் பணிபுரிந்தார்.

இப்பணிக்காலம் நிறைவடைந்த நிலையில் மீண்டும் மன்னார் மறைமாவட்டத்திற்குப் பணிபுரிய வந்த இவர், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் புதிய பங்காகிய பறப்பாங்கண்டல் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார்.

# டி லாசால் சபையின் புதிய மாகாண முதல்வராக அருட்சகோதரர் கிறிஸ்ரி குரூஸ் வாழ்க்கை வரலாறு



மன்னார் மாவட்டத்தில் வங்காலைக் கிராமத்தில் அமரர் திருவாளர் அதிரியான் குரூஸ் திருமதி அன்னபாக்கியம் குலாஸ் தம்பதிகளின் மகனாக 1970ஆம் ஆண்டு தைத்திங்கள் 5ம் நாளில் அருட்சகோதரர் கிறிஸ்ரி தேவநாயகம் குரூஸ் பிறந்தார்.

தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை (1975 - 1984) மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தில் பயின்றுவரும்போது ஆண்டவரின் அழைப்பின் குரலை உணரத்தொடங்கினார். தமது சிறிய தகப்பனார் அருட்சகோதரர் கலாநிதி பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களின் வாழ்க்கையில் காணப்பட்ட சிறப்பான விழுமியங்களால் ஈர்க்கப்பட்டும், வங்காலை புனித ஆனாள் பாடசாலையில் அன்றைய காலத்தில் பணியாற்றிய அருட்சகோதரர் கிறிஸ்ரி டோறஸ் அவர்களால் ஊக்குவிக்கப்பட்டும் கல்விக்காக மட்டும் பணியாற்றும் துறவற சபையான டிலாசால் அருட்சகோதரர்களின் துறவறசபையில் இணைந்துகொண்டார்.

தனது துறவற வாழ்வின் ஆரம்பப் பயிற்சிநெறியினை 1985ம் ஆண்டு ஆரம்பித்தார். புனித டிலாசால் சபையினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் இணைந்து தனது உயர் கல்வியை மேற்கொண்டார். தனது துறவறவாழ்வின் ஆரம்பகாலப் பயிற்சிக் கற்கைநெறியினை மன்னார் புனித சூசையப்பர் புகுமுக மடத்தில் அருட்சகோதரர் கில்லறி யோசப் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் மேற்கொண்டார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு முன்பாக தனது துறவற வாழ்வின் பயிற்சிநெறியான நவசந்நியாசப் பயிற்சியை 3 வருடங்கள் கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள டிலாசால் இல்லத்திலும் கன்வல்ல நவசந்நியாச மடத்திலும் கற்று நிறைவுசெய்து 1993ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி தனது துறவற அர்ப்பண வாழ்வின் முதல் வாக்குத்தத்தங்களைத் தனது வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டார்.

தனது பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக யாழ் பல்கலைக்கழகத்தில் 1993ம் ஆண்டு இணைந்துகொண்டார். நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் அசாதாரண சூழல் காரணமாக தனது 4 வருடப் பட்டப்படிப்பை 2 வருடங்களில் இடைநிறுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனாலும் பாக்கிஸ்தான் நாட்டிற்குச் சென்று பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் தனது வணிகப் பட்டப்படிப்பைத் தொடர்ந்து கற்றுத்தேறினார். தனது பட்டப்படிப்பை மேற்கொள்ளும் காலத்தில் டிலசால் ஆங்கிலக் கல்லூரியின் நிதிப்பொறுப்பாளராகவும், துறவற வாழ்வின் ஆரம்பகால பயிற்சிநெறியில் கற்றுவந்த மாணவர்களின் இயக்குநராகவும் பணியாற்றிவந்தார்.

1996ஆம் ஆண்டு தொடங்கி 2003ஆம் ஆண்டுவரை பாக்கிஸ்தானில் பணியாற்றி 2004ஆம் ஆண்டில் இலங்கையில் உருவாக்கல் பணியைப் பொறுப்பேற்றார். டிலாசால் அருட்சகோதரர்களாக உருவாக தம்மை அர்ப்பணித்த பல இளம் உள்ளங்களைப் பக்குவமாகவும் காத்திரமாகவும் பராமரித்து துறவறத்தை தழுவ வழிசெய்து பல அருட்சகோதரர்களை உருவாக்கும் பணியை 7 வருடங்களாக வத்தளையில் உள்ள டிலாசால் உருவாக்கப்பணியகத்தில் சிறப்பாக ஆற்றினார்.

2011ஆம் ஆண்டில் அமெரிக்காவில் டிலாசால் அருட்சகோதரர்களால் நிர்வகிக்கப்படும் புனித மரியாள் பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்கைநெறியைக் கற்றுத் தேறினார். 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த டிலாசால் அருட்சகோதரர்களுக்காக நிர்வகிக்கப்படும் நவசந்நியாச மடத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

2014ஆம் ஆண்டு மே மாதம் இதே நவசந்நியாச மடத்தின் பணிப்பாளராக பொறுப்பேற்று இன்றுவரை பணியாற்றி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார்

## மன்னார் ஆயர் இந்தியப் பிரதமரிடம் மகஜர் கையளித்தார்

கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி தலைமன்னாருக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை மகஜர் ஒன்றைக் கையளித்தார். 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி, இலங்கை ஜனாதிபதியிடம் கையளித்த மகஜரின் பிரதியே பிரதமர் மோடியிடம் கையளிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், வடபகுதியில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களின் நிலம், உடைமை, வடபகுதியின் இராணுவப் பிரசன்னம் போன்ற மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அம்மகஜர் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஆயர் தெரிவித்தார்.

அதன்போது, கையளிக்கப்பட்ட குறித்த மகஜரில் 16 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண அமைச்சர், வடமாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம் மகஜர் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தியப் பிரதமரிடம் மன்னார் ஆயர் மகஜரைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் வடமாகாண சபை உறுப்பினர் திரு. சிராய்வா காணப்படுகின்றார்.

## பதவி விலகுவது குறித்து பாப்பரசர் சமிக்ஞை



பாப்பரசர் பதவியிலிருந்து தான் விலகக்கூடும் எனும் சமிக்ஞையை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் வெளியிட்டுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக அதாவது பாப்பரசராக பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், மெக்ஸிக்கோ நாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே இந்த சமிக்ஞையை அவர் வெளியிட்டுள்ளார்.

பாப்பரசராக இரண்டு வருடங்கள் பொறுப்பிலிருக்கும் தான் நீண்ட காலத்துக்கு அதில் தொடருவதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனவும், ஆண்டவர் தன்னை வத்திக்கானுக்கு சிறிய காலத்துக்கே அனுப்பியுள்ளார் என்று தான் கருதுவதாகவும், நான்கு அல்லது ஐந்து வருடங்கள் அல்லது குறைவான காலப்பகுதியே தான் பாப்பரசராக இருக்கக்கூடும், தனக்கு முன்னர் இருந்த பாப்பரசர் பெனடிக்ற் பதவியிலிருந்து விலகியதை ஒரு தனிப்பட்ட சம்பவமாகப் பார்க்கக்கூடாது என்றும் அதை ஒரு பெரிய சீர்திருத்த முயற்சியாகவே பார்க்க வேண்டும் என்றும் பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாப்பரசர் பொறுப்பிலிருந்து தான் ஓய்வுபெறக்கூடும் என்பதற்கான சமிக்ஞைகளை பாப்பரசர் பிரான்சிஸ் முன்னரும் வெளியிட்டிருந்தார். எனினும் கத்தோலிக்க திருச்சபையில் பொறுப்புக்களில் இருப்பதற்கு வயது வரம்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்கிற எண்ணத்தை தான் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவரும் அறியாவண்ணம் ஒரு நாள் உரோமிலிருந்து வெளியேறி ஒரு சாப்பாட்டுக்கடையில் சென்று பீசா சாப்பிட வேண்டும் என்பதே தனக்கு இப்போது இருக்கும் ஒரே ஆவல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் விழா பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் கலந்துகொண்டார்!




இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டார். ஊடகவியலாளர் அ. நிக்சன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர்களான எஸ். சண்முகராஜா, பா. பாலசிங்கம், இ. பாக்கியராஜா, க. ப. சிவம், க. அரசரட்ணம், வாஸ் கூஞ்ஞ (தலைமன்னார்) ஆகியோர் ஆயருடன் நிற்பதைப் படத்தில் காணலாம். ஜ.ம.மு. தலைவர் மனோ கணேசன், கூட்டமைப்பு எம்.பி.க்களான எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எஸ். யோகேஸ்வரன் மற்றும் பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி தலைமன்னாருக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புகையிரத சேவையை ஆரம்பித்து வைப்பதை மேலே உள்ள படத்தில் காணலாம்.



கடந்த டிசம்பர் மாதம் 2ஆம் திகதி வத்திக்கானில் நவீன மனித அடிமைத்தனத்தை இல்லாதொழிப்பது தொடர்பாக இடம்பெற்ற சர்வமதத் தலைவர்களுக்கான கூட்டத்தில் திருத்தந்தை பங்கெடுத்தார். இதில் இந்தியாவில் இருந்து சென்ற 'அம்மா' என்று அழைக்கப்படும் பெண் ஆன்மீகத் தலைவர் உட்பட பல நாட்டு மதப்பெரியார்கள் கலந்துகொண்டனர்.

## இங்கிலாந்துத் திருச்சபையில் முதல் பெண் ஆயர் நியமனம்



இங்கிலாந்துத் திருச்சபையின் (Church of England) முதல் பெண் ஆயராக லிபி லேனே (Libby Lane) அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார்.

1989ஆம் ஆண்டிலிருந்து அங்கிலிக்கன் திருச்சபையில் பெண்கள் ஆயர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டு வருகின்றனர். 1994ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்து திருச்சபையில் பெண்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்துவருகின்றனர். இந்த வருடம்தான் இங்கிலாந்து திருச்சபையில் முதல் தடவையாக பெண் ஒருவர் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

## இதுதான் அந்தப் பீசா (Pizza)



திருத்தந்தை தான் சாப்பிட விரும்பிய இத்தாலியின் உணவுகளில் ஒன்றாகிய பீசாவையே மேலே காண்கிறீர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. பிலேந்திரன்
மேரி சோசை
(தாழ்வுபாடு)
மலர்வு: 22.04.1958
உதிர்வு: 06.04.2014



திருமதி. சந்தியா
மரியை குருஸ்
(வங்காலை)
மலர்வு: 07.09.1917
உதிர்வு: 30.04.2014

ஈரைந்து மாதங்கள் உதரமதில் சுமந்தோரே
ஊர்போற்ற உலகினுக்கீந்தவர்களே
தீர்மிகும் மழலையராய் வளர்த்திட்ட அன்னையரே
பாரினைப் படைத்தோனின் பதமதை நாடியின்று
ஆண்டும் ஒன்றான வேளையிலே
ஆறாத் துயர்தனை உளமதில் சுமந்து யாமும்
ஆன்ம சாந்திக்காய் இறைவனை இறைஞ்சியே
ஆதரவு தருவாரென நம்பியே அஞ்சலித்தோம்.

நீங்கா நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள்,

நீங்கா நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org